# இயேசுவேவாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

32, ஜெமி எத்திராஜ் நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22.20

## 1. பற்பல பாஷைகளை பேசுதல் - Speaking in Various Kinds of Tongues (1கொரி.12:10)

## 2. அந்நிய பாஷையில் பேசுதல் - Speaking in an Unknown Tongue (1கொரி.14:2)

இரண்டும் ஒன்றிலிருந்து மற்றொன்று முற்றிலுமாக வேறுபட்டது. ஆனால் மகா வேசியும் அவளுடைய குமாரத்திகளும் இணைந்து குழப்பத்தை சபைகளில் ஏற்படுத்திவிட்டார்கள்.

**ஒருவன் பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால், அவன் நிச்சயமாக அந்நிய பாஷையில் பேசவேண்டும், அதுவே அவன் பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அடையாளம் என்பது திரித்துவ பெந்தெகொஸ்தே சபையினுடைய மாறுபாடான உபதேசம். இவர்கள் பற்பல பாஷைகளை பேசுதல், அந்நிய பாஷையில் பேசுதல் இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை அறியாது, இரண்டையும் ஒன்றாக இணைத்து தங்களை குழப்புவதோடு மாத்திரம் அல்ல மற்றவர்களையும் குழப்புகிறார்கள்.**

**கவனியுங்கள்: பரிசுத்த ஆவியின் அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது. பொய்யல்ல. பற்பல பாஷைகளை பேசுதல், அந்நிய பாஷையில் பேசுதல் குறித்து அது உங்களுக்குப் போதிக்கிறபடியே அதில் நிலைத்திருங்கள். எல்லாரும் பாஷைகளைப் பேசுகிறார்களா? (1கொரி.12:30). இல்லை, இல்லை என்பதே சத்தியமாயிருக்கிறது.அந்த சத்தியத்தைக் குறித்து சற்று விளக்கமாக இந்த நிருபத்தில் தியானிப்போம்.**

1. பற்பல பாஷைகளை பேசுதல் பரிசுத்த ஆவியின் அநுக்கிரகம். Manifestation of the Spirit (வரங்கள் / Gift) இது அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. பாஷைகளை பேசுதல் ஆங்கிலத்தில் Speaking in Tongues. இது கிரேக்க பாஷையில்க்ளோசாலலியா-Glossolaliaஎன்று அழைக்கப்படுகிறது. Glossaஎன்றால் Tongue, பாஷை. Lalia என்றால் Speech பேசுதல்என பொருள்.

2. **பற்பல பாஷைகளை பேசுதல் மற்றும் அந்நிய பாஷை பேசுதல் இரண்டிற்கும் வித்தியாசங்கள் உண்டு. பற்பல பாஷைகளை பேசுதல் – மனுஷர் மனுஷரின் பாஷையில் – மனிதர்களிடத்தில் பேசுதல். அந்நிய பாஷை பேசுதல் – தேவனும் மனிதனும் ஒருவருக்கொருவர் பேசும் பரலோக பாஷை என்பதை நீங்கள் முதலாவது புரிந்துக்கொள்ள வேண்டும்.**

3. **அந்நிய பாஷை வரங்கள்** என்ற தலைப்பில் மறைந்த சகோ. சாம்ஜெபத்துரை 1989 ஆம் ஆண்டு எழுதியுள்ளார். மேலும் **அந்நிய பாஷை குழப்பம்** என்ற தலைப்பில் டாக்டர்.புஷ்பராஜ் 2019 ன் கடைசி மாதங்களில் எழுதியுள்ளார். இருவருடைய வெளியீடுகளும் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானத்தினால் எழுதப்பட்டது அல்ல. மாறாக மனுஷ ஞானத்தினால் எழுதப்பட்டது என்பது எனது கணிப்பு. இந்த நிருபத்தில் எனது கணிப்பு. இருவரும் தங்களது சரீர ஞானத்தை, ஆவியின் வரங்களுடன் கூட்டிச் சேர்த்துள்ளார்கள். தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற, வேதவாக்கியங்களின் அடிப்படையைக் கொண்டதாகும்.

4. அந்நிய பாஷைக்கடுத்த போதனையில் நீங்கள் சாத்தானாலே இழுப்புண்டு மோசம் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். இன்றைய பெந்தெகொஸ்தே ஸ்தாபன சபையினர் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி போதியாததினாலும், ஆனாலும் இவர்களது அந்நிய பாஷை உபதேசம் ஞானம் என்றும் பொய்யாய் பேர் கொண்டிருப்பதினாலும், சத்தியத்தை தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறபடி, பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் எனக்குப் போதித்து, தேவனுடைய வார்த்தையை நினைப்பூட்டிய பிரகாரம் இந்த நிருபத்தை எழுதுவது எனக்கு நலமாக தோன்றிற்று.

5. அந்நிய பாஷை என்னதென்று அறியாது அந்நிய பாஷை பெயரைக்கொண்டு வஞ்சனையினால் உங்களை கலக்குகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், தங்களுக்கேற்ற ஆக்கினையை ஏற்ற வேளையில் அடைவார்கள். ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபையின் அந்நிய பாஷை போதனை; அதாவது பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அடையாளமாக அந்நிய பாஷை பேசவேண்டும் என்பதாகும். ஆனால் அது உங்களை

அழைத்தவரால் உண்டானது அல்ல.இவர்கள் ஒன்றை அறியாதிருக்கையில், சாத்தான் சில கதைகளைக் கொண்டு இவர்களை மூடனாக்கி விட்டான். இந்த லௌகிக ஞானத்தினால் ஒருவனும், முக்கியமாக நாங்கள் தான் உண்மையான பெந்தேகொஸ்தே அனுபவ வாரிசுகள் என தங்களை அழைத்துக்கொள்ளும் வெண்ணிற ஆடையினர் (வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்) உங்களை கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஆனாலும் என் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசிக்கிறவன் யார்?

6. லவோதிக்கேயா சபைகாலத்தின் முடிவில் கிறிஸ்துவின் காணக்கூடாத சரீரமாகிய மணவாட்டி சபை (இந்த உலகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான ஸ்தாபன சபைகள், தி பெந்தெகொஸ்தே சபை, தென்னிந்திய திருச்சபை, மணவாட்டி கூடாரம் போன்ற சபைகள் அல்ல) எடுத்துக்கொள்ளப்படும் வரை பாஷைகள் (Tongues) ஓய்ந்து போகாது. தனிப்பட்ட நபருடைய, சபையின் பக்திவிருத்திக்காக பாஷைகள் நிலைத்து நிற்கும். இது சபைக்கு கொடுக்கப்பட்ட வரங்களாயிருப்பதினால் சபை இந்த பூமியில் இருக்கும் வரை பாஷைகளும் நிலைத்திருக்கும்.

---

1. கிறிஸ்து இயேசுவுக்குள் எனக்கு பிரியமானவர்களே : நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும், ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா எழுதுகிறதாவது : நான் என்னை குறித்தும், உங்களுக்கு புத்தி சொல்கிறதைக் குறித்தும், போதனைகளை உபதேசிக்கிறதைக் குறித்தும், தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றையும் மறைத்து வைக்காமல், பிரயோஜனமானவைகளை உங்களுக்கு அறிவிப்பதிலும், நிருபங்களை எழுதுவதிலும் மிக்க ஜாக்கிரதையுள்ளவனாய் இருக்கிறேன். நான் மனுஷரை நாடி போதிப்பதில்லை. மனுஷரை பிரியப்படுத்த பார்ப்பதுமில்லை. நான் மனுஷரை பிரியப்படுத்தப் பார்த்தால் என்னை என் உச்சம் தலை முதல் உள்ளங்கால் வரை புகழந்து பேசுவார்கள். அவர்களை கடிந்து கண்டனம் பண்ணி, அவர்களுக்கு புத்தி சொன்னால் என்னை நாயே, பேயே என திட்டுகிறார்கள். அதுதான் அவர்களது குணாதிசயம். ஆக எனக்கு பிரியமானவர்களே, நீங்களோ திருவசனத்தை எழுதியிருக்கிற பிரகாரமாக வாசிக்கிறதிலும், கேட்கிறதிலும், உங்கள் ஆத்துமாவை இரட்சிக்க வல்லமையுள்ளதாயும் இருக்கிற வசனத்தின்படி, தேவ ஆவியினால் எழுதப்பட்ட வேதவாக்கியங்களின்படி உங்களை காத்துக்கொள்ள ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். நாம் இருவரும் அவரவர்களுடைய கடமைகளில் ஜாக்கிரதையாயிருப்போம். தேவனுடைய வார்த்தையிலிருந்து கேட்டதை, வாசித்ததை, விசுவாசித்ததை மறக்கிறவர்களாயிராமல், அதற்கேற்றபடி கிரியை செய்கிறவர்களாயிருந்து, அதில் நிலைத்திருப்பீர்களானால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள். இந்த பாக்கியம் உங்களுக்கடுத்தாக இருப்பதாக ஆமென்.

2. இங்கு ஒரு சம்பவத்தை குறிப்பிட விரும்புகிறேன். நான் திரித்துவ விசுவாசத்தில் உள்ள ஒரு பாஸ்டரை நன்கு அறிவேன். நான் நிருபங்கள் வெளியிடும் சமயம் எல்லாம் அவரை சந்தித்து அவருக்கு ஒரு பிரதி கொடுப்பேன். அவர் நான் எழுதி வருகிற கருத்துக்களை, போதனைகளை, உபதேசங்களை பாராட்டுவார். அதோடுமட்டுமல்ல அவைகள் தனக்கு மிக்க பிரயோஜனமாக இருக்கிறது என்பார். பாஸ்டர் சகோதரனே அப்படியானால் சத்தியத்திற்கு கீழ்படிய ஏன் தயக்கம் என கேட்டேன். உடனே அவர் சகோதரனே, கர்த்தர் உங்களுக்கு கொடுத்த பணியை நீங்கள் செய்து வருகிறீர்கள். நல்லது. ஆனால் அவர் எனக்கு கொடுத்த பணியை நான் செய்து வருகிறேன் எனக்கூறி மழுப்புகிறவராக அவரது விசுவாசம் இருக்கும். ஆனால் அது கிரியை இல்லாத விசுவாசமாக இருக்கிறதே. எங்கே விசுவாசமோ அங்கே கிரியையும் காணப்பட வேண்டுமே. இன்று அநேக திரித்துவ சபை பாஸ்டர்கள் இந்த நிலையில்தான் இருக்கிறார்கள். மணிக்கணக்காக என்னுடன் கைதொலைப்பேசியின் வாயிலாக பேசுகிறார்கள், விசுவாசிக்கிறார்கள், அறிக்கை செய்கிறார்கள். ஆனால் கீழ்படிய மனமில்லை, அவர்களிடத்தில் கிரியை இல்லை. காரணம் இவர்கள் தேவனை பிரியப்படுத்துவதைப் பார்க்கிலும்; ஸ்தாபனங்களையும், மனுஷர்களையும் தங்கள் பிழைப்புக்காக பிரியப்படுத்தவே விரும்புகிறார்கள்(யோ12:43). ஆனால் அறிந்த சத்தியத்தை மறுதலிக்கிறவர்கள் அநேக அடிகள் அடிக்கப்படுவார்கள் என்பதை மறந்து விடுகிறார்கள்(லூக்12:47,48).

3. ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதி.1:1) In the beginning God created the heaven and the earth. இதிலிருந்து தேவன் முதலாவது வானத்தையும் அதன் சர்வ சேனைகளையும் சிருஷ்டித்தார். அதன்பின்பு தான் பூமியை சிருஷ்டித்தார். நாம் இந்த பூமியில் வாழ்ந்தாலும், நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில்தான் இருக்கிறது. (பிலி.3:20) நாம் இப்பிரபஞ்சத்திற்குரியவர்கள் அல்ல. பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள முழு குடும்பத்திற்கும் நாமகாரணர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (எபே.3:14,15) கர்த்தர் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர். (எரே.23:24) வானம் உன்னதமானவருடைய சிங்காசனம். இந்த பூமியானது அவருக்கு பாதபடி. (அப்.7:49) வானத்தில் தேவனுடைய பரமசேனையின் திரள் உண்டு. (லூக்.2:13) ஆக தேவன் வானத்தை தமது இருப்பிடமாக கொண்டுள்ளார். தேவன் பரலோகத்தின் உன்னதங்களில் இருக்கின்றார். (யோபு.22:12) தேவன் வானத்திலிருக்கிறார். (பிரச.5:2) இது மேன்மையான பரம தேசம் எனப்படுகிறது. (எபி.11:20) A heavenly country. ஆக பரலோகமும் ஒரு தேசமாகும். அங்கு குடியிருப்புகள் உண்டு, பாஷைகளும் உண்டு. அது தூதர் பாஷைகள் என அழைக்கப்படுகிறது. (1கொரி.13:1) Tongues of the Angels. பாஷைகள் இருந்தால் தானே ஒருவருக்கொருவர் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ள முடியும். கர்த்தர் தூதர்களோடு பேசுகிறார். தூதர்கள் கர்த்தரோடு பேசுகிறார்கள். தூதர்களும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள். ஆக இரு சாராரின் தகவல் பரிமாற்றத்திற்கு ஒரு மொழி / பாஷை இருக்கத்தான் வேண்டும்.

4. **உதாரணமாக:**

அ. கர்த்தர் ஜனங்களை சங்கரிக்கிற தூதனை நோக்கி : போதும், இப்பொழுது உன் கையை நிறுத்து என்றார். (2சாமு.24:16) பாருங்கள் கர்த்தர் ஒரு தூதனோடு பேசுகிறார்.

ஆ. கர்த்தர் சாத்தானோடும், சாத்தான் கர்த்தரோடும் பேசுகிறார்கள். (யோபு.1அதி)

இ. அடுத்து கர்த்தர் : இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப், கிலேயாத்திலுள்ள ராமோத்தில் போய் விழும்படிக்கு அவனுக்கு போதனை செய்கிறவன் யார் என்று கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தபோது, அவருடைய பரம சேனையில் அவரது வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் நின்றவர்களிடம் கேட்டார். அதற்கு ஒருவன் இப்படியும், ஒருவன் அப்படியும் பதில் சொன்னார்கள். (2நாளா.18:18,19) ஆக தேவன் அவருடைய பரம சேனைகளோடு ஒரு மொழியை / பாஷையை கொண்டுதான் சம்பாஷித்திருக்க வேண்டும். அது தூதர்கள் பாஷையாகும். தூதர் பாஷைகள் என்று 1கொரி.13:1 ல் கூறப்பட்டிருப்பதால் தூதர்கள் மத்தியிலும் பல பாஷைகள் இருக்கிறதை நாம் காண்கிறோம். பரமசேனை என்பது தேவனுடைய சேனையாகும். கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார். அவருடைய ராஜரீகம் சகலத்தையும் ஆளுகிறது. இங்கு வானங்கள் என்று பன்மையில் கூறப்பட்டிருப்பதால் ஒன்றுக்கும் மேற்பட்ட வானங்கள் உண்டு என தெரிகிறது. அதாவது 2கொரி.12:2 யை தியானிக்கும்போது இங்கு மூன்று வானங்களை குறித்து காண்கிறோம். முதலாவது மேக மண்டலம் (Clouds) மேகங்களுக்கு மேல் இரண்டாம் வானம், அது நட்சத்திர கூட்டங்கள் (Solar System), இதற்கு மேல் மூன்றாம் வானம், இது தேவனுடைய இருப்பிடம்/ வாசஸ்தலமாகும்.

ஈ. கர்த்தருடைய வார்த்தையை கேட்டு அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே அவரை ஸ்தோத்தரியுங்கள். கர்த்தருக்கு பிரியமானதை செய்து, அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சகல சேனைகளே அவரை ஸ்தோத்தரியுங்கள். (சங்.103:20,21) தூதர்கள் கர்த்தரை துதித்தார்கள், ஸ்தோத்தரித்தார்கள். ஆக பாஷை என்பது வானத்திலும் / பரலோகத்திலும் காணப்பட்டது.

உ. வாருங்கள் 2கொரி.12:1-5 வசனங்களுக்கு. இங்கு அந்த மனுஷன் பரதீசுக்கு எடுக்கப்பட்டான். அங்கு மனுஷரால் பேசப்படகூடாததும்,அவனுடைய வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளை கேட்டான். அதாவது பரதீசில் பேசப்பட்ட வார்த்தைகளை / மொழியை / பாஷையை பவுலால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ஆக பரலோகத்தின் பாஷை தூதர்களின் பாஷை, அது மனிதர்களின் அறிவுக்கு எட்டாததாக காணப்பட்டது. அதுதான் நமக்கு அந்நிய பாஷை (Unknown Tongue).

ஊ. தேவன் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்க செய்த போது, தேவதூதர் யாவரும் அவரை தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார். (எபி.1:6) தேவன் பூமியை அஸ்திபாரப்படுத்துகின்றபோது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய் பாடினர். தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்கள் (யோபு.38:7) அப்படியானால் இவர்கள் ஏதோ ஒரு பாஷையில் பாடி கெம்பீரித்திருக்கவேண்டும்.

எ. மேலும் அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே நான் வானத்திற்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக (இரண்டாம் வானம்) என் சிங்காசனத்தை உயத்துவேன் (மூன்றாம் வானம்) ; வடபுறத்தில் உள்ள ஆராதனை கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே என ஏசா.14:13,14 வசனங்களில் வாசிக்கிறோம். இதிலிருந்து பரலோகத்தில் ஒன்று / பல பாஷைகள் இருந்தது. அதில் ஒன்றைக்கொண்டு லூசிபர் தன்னில்தானே பேசிக்கொண்டான்.

5. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதி.1:1) தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார் வெளிச்சம் உண்டாயிற்று (ஆதி.1:3) அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்தில் திரும்பாமல் அது நான் விரும்பினதை செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசா.55:11) இதிலிருந்து ஒன்றை சிருஷ்டிக்க தேவனுடைய வாயிலிருந்து வார்த்தை / வசனம் புறப்பட்டு சென்றது. அது ஒரு பாஷையாகத்தான் இருக்க வேண்டும். தேவனுடைய வாயிலிருந்து ஒரு பாஷை புறப்பட்டு சென்றது. அந்த வார்த்தையின்படியே அது சம்பவித்தது. ஆக பாஷை என்பது சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலிருந்தே இருக்கிறது.

6. அடுத்து தேவன் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனை நோக்கி, அவர்களை ஆசீர்வதித்தார் என ஆதி.1:28 ல் வாசிச்கிறோம். ஆக இங்கு தேவன் தாம் தம்முடைய சாயலாகவும் தம்முடைய ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனிடமும் பேச தொடங்கினார். தேவனுக்கும் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷருக்கும் இடையில் ஒரு பாஷை இருந்திருக்க வேண்டும். சிருஷ்டிக்கப்பட்ட மனுஷருக்கு கட்டளை கொடுக்கிறார். ஒரு பாஷையை / ஒரு மொழியை கொண்டுதான் தேவன் அவனோடு இடைப்பட்டிருக்கவேண்டும். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். இப்பொழுது ஆதாம் ஏதோ ஒரு மொழியில் பேச ஆரம்பித்தான். அப்பொழுது ஆதாம் : இவள் என் எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான். (ஆதி.2:23) இதன்படி சாத்தான், ஏவாள் சம்பாஷனை; ஏவாள், ஆதாம் இடையில் சம்பாஷனை; தேவன் ஆதாம் இடையில்; தேவன் ஏவாள் இடையில்; தேவன் சாத்தானிடையில் பேச்சுவார்த்தை நடக்கிறது. இதை எல்லாம் கவனிக்கும் போது அவர்களுக்கு இடையில் ஒரு மொழி பேசப்பட்டது. ஒருவருக்கொருவர் இடையில் அவரவர் எண்ணங்களின் பரிமாற்றம் ஏதோ ஒரு மொழியின் மூலமாகவே நடந்தேறியது. பாஷையின்றி செய்கைகளினால் சம்பாஷனை நடந்திருக்க வாய்ப்பு இல்லை. தேவன் சிருஷ்டிப்பில் பேசிய அதே மொழியையே, சிருஷ்டிப்புக்குபின் தன் சிருஷ்டிகளோடு பேசியிருக்க வேண்டும் என்று கூற முடியாது. என்னை பொருத்த அளவில் அது மனுஷர் பேசும் பாஷையாகத்தான் இருந்திருக்க வேண்டும். தேவன் மனுஷனோடு அவனுடைய பாஷையில் பேசுகிறாரேயன்றி, தூதர்களுடைய பாஷையில் பேசினார் என்று கூற முடியாது. ஏனெனில் அவர் தூதர்களோடு அவர்களுக்குரிய

பாஷையில், மனிதனோடு அவனுக்குரிய பாஷையில் பேசுகிறார். அதுவே ஒரே பாஷையாக / மனிதனின் பாஷையாக இருந்து வந்தது. ஆக பூமி எங்கும் ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது. (ஆதி.11:1)

7. பூமி எங்கும் ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது. (ஆதி.11:1) The whole earth was of one language and of one speech. இந்த ஒரே மொழி / ஒரே பாஷை ஜனங்களை ஐக்கியப்படுத்தியது. அவர்களுக்குள் ஒற்றுமை காணப்பட்டது. ஆனால் அதே வேளையில், அந்த ஒருமனப்பாட்டை, ஐக்கியத்தை அவர்கள் தீய வழிகளில் பிரயோஜனப்படுத்தவும் சாத்தான் அவர்களை தூண்டினான். அவர்கள் அதில் செயல்பட ஆரம்பித்தார்கள். ஆக ஜலபிரளயத்திற்கு பின்பு, ஜனங்கள் சிநெயார் தேசத்திலே சம பூமியை கண்டு அங்கே குடியிருந்தார்கள். அவர்கள் : நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும் வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி நமக்கு பேர் உண்டாகப் பண்ணுவோம், வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது கர்த்தர், இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது. ஆதலால் அவர்கள் இதை செய்யத் தொடங்கினார்கள். இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது தடைபடாது என்று இருக்கிறார்கள்.**நாம்** இறங்கிப் போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். இங்கு **நாம்** என்பது பன்மையில் கூறப்படவில்லை. இங்கு ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் இல்லை. மாறாக தனிப்பட்ட ஒரு நபரை குறித்த கௌரவ சொல் **நாம்** ஆகும். உதாரணமாக தரியு ராஜா, தன்னைக் குறித்து தரியு ராஜாவாகிய நாம் என்கிறான். (எஸ்றா.6:12) அடுத்து அர்தசஷ்டா ராஜா, தன்னைக்குறித்து : அர்தசஷ்டா என்னும் ராஜாவாகிய நாம் என்கிறான். ஆக நாம் என்றால் இங்கு பலர் என்பது பிசாசின் வஞ்சகமான உபதேசம். இறங்கிப்போய் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள் பாஷையை தாறுமாறாக்குவோம் என்றார். இங்கு என்றார் என்ற ஒருமை, என்றார்கள் என்ற பன்மையில் இல்லை. ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் என்றால் என்றார்கள் என்று இருக்க வேண்டும். அப்படி கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போக பண்ணினார். பூமி எங்கும் வழங்கின பாஷையை கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினார். அதனால் அதன் பெயர் பாபேல் எனப்பட்டது. (ஆதி.11:1-9) ஆக சிநெயார் தேசத்தின் சம பூமியில் குடியிருந்த ஜனங்கள், ஒரே பாஷை பேசிவந்த ஜனங்கள் பூமி எங்கும் சிதறடிக்கப்பட்டதால், காலப்போக்கில் பற்பல பாஷைகள் ஒன்றிலிருந்து ஒன்றாக அநேக பாஷைகள் தோன்றின/ பேசப்படலாயின. இது பாவத்தின் தண்டனை. அநேக மொழி பேசப்பட்டதால் ஒரே மொழியில் இருந்த ஒற்றுமை சீர்குலைந்தது. ஒரு இடத்தில் தமிழ், மலையாளம், இந்தி பேசும் மக்கள் கூடியிருந்தால், ஒவ்வொரு மொழியினரும் அவர்களுக்குள் ஒரு ஐக்கியத்தை உருவாக்குவார்கள். மொழி அவர்களை பிரிக்கிறது. இதனால் மனுக்குலத்தில் ஒருவர் பேசும் பாஷை மற்றொருவருக்கு அவர் அறியாத பாஷையாக மாறுகிறது. ஆக ஆதியில் ஜனங்கள் நாளுக்குநாள் பெருக ஆரம்பித்தார்கள். ஆதலால் அவர்கள் ஒருமித்து வாழக்கூடாதிருந்தது. அவர்களுடைய ஆஸ்தியும் பெருகி பெருகி மிகுதியாய் இருந்த படியினால், அவர்கள் ஒருமித்து வாசம் பண்ண கூடாமற் போயிற்று. பாருங்கள் ஆஸ்தியும் மக்களை பிரிக்கிறது. சகோதரர்களுக்குள்ளே அண்ணன், தம்பியை காட்டிலும் அதிக ஆஸ்தி உடையவனாக இருந்தால் அது அவர்களுக்குள்ளே ஒரு பிரிவினையை உண்டாக்கி விடுவதை நாம் இந்நாட்களில் கண்கூடாக காண்கிறோம். என் உடன்பிறந்த சகோதரர்கள் கூட, அவர்கள் வசதியாக இருந்ததால், என்னை என் கஷ்ட நேரத்தில் புறக்கணித்தார்கள், என்னை விட்டு விலகினார்கள். அவ்வாறாகவே ஆவிக்குரிய சகோதரர்களும் விலகினார்கள். ஆனால் கர்த்தரோ எனக்கு துணையாக நின்று என் காரியங்கள் எல்லாவற்றையும் எனக்காக நடப்பித்து, வாய்க்கச்செய்து, இன்று அவர்களை விட குறைந்தவன் அல்ல என்ற நிலைக்கு கொண்டுவந்து விட்டார். ஆதலால் தான் நான் இந்த நிருபங்களை அவ்வப்போது உங்களுக்கு எழுத முடிகிறது. அல்லேலூயா! இது ஒரு ஆச்சரியமான கிருபை.

8. ஆக சிருஷ்டிப்பின் தொடக்கத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் பலுகி பெருகி பூமியை நிரப்பினார்கள். அதை தங்களுக்கு கீழ்ப்படுத்தினார்கள். இன்று இந்த உலகத்தின் ஜனத்தொகை 780 கோடி (ஜூன் 2020 தகவல்படி) இதில் இந்தியர்கள் மட்டும் 135.26 கோடி( இது 2018 கணக்குப்படி) ஆகும். மேலும் இந்த பூமியில் இன்று 195 தேசங்கள் உள்ளன. சுமார் 6500 பாஷைகள் உள்ளன. ஆக ஆதியிலிருந்த ஒரே பாஷை இன்று 6500 பாஷைகளாக பெருகிவிட்டது.

9. **அந்நிய பாஷை / Unknown Tongue குறித்து எனது முன்னோட்டம்.** அந்நிய பாஷை என்றால் அதன் அர்த்தம் என்ன? மனுஷரால் பேசப்படாததும், அவனுடைய வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கொண்ட ஒரு பாஷை, மனுஷரால் புரிந்துக்கொள்ள முடியாத, அறிந்துக்கொள்ள முடியாத ஒரு பாஷை. இது மனுஷர்களுடைய பாஷை அல்ல. அந்நிய பாஷையில் பேசுகிறவன் தேவனிடத்தில் பேசுகிறான். மனுஷனிடத்தில் அல்ல. (1கொரி.14:2) இங்கு ஒன்றை முக்கியமாக கவனிக்க வேண்டும், அவன் மனுஷனிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான். அதை தனக்கு மாத்திரமே பக்தி உண்டாக பேசுகிறான். அவன் பேசுவது உங்களுடைய, என்னுடைய பக்திவிருத்திக்காக அல்ல. அவன் தன் பக்திவிருத்திக்காகவே தேவனிடத்தில் பேசுகிறான். ஒருவேளை அவன் தேவனிடத்தில் பேசுவதை சபையில் பேசினால்அவன் அதற்கு அர்த்தம் சொல்ல வேண்டும். அதாவது அவன் அந்நிய பாஷையில் பேசி அதற்கு அர்த்தமும் சொல்ல வேண்டும். அவன் சொல்லாவிட்டால் வேறொருவராவது சபையில் அர்த்தம் சொல்ல வேண்டும். இந்த இரண்டும் முடியாவிட்டால் அவன் சபையில் பேசாமல் தன் வீட்டில் தேவனோடு பேசிக்கொள்ள வேண்டும். இந்த அறிந்து, புரிந்து கொள்ள முடியாத பாஷையை குறித்து நாம் 2கொரி.12:3 ல் வாசிக்கிறோம். பாருங்கள் அது மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமான வார்த்தைகளைக்கொண்ட பாஷையாக இருக்கிறது. இதுதான் Unknown Tongue – அந்நிய பாஷை. அறிந்து கொள்ள முடியாத பாஷை, புரிந்து கொள்ள முடியாத பாஷை. இது தேவனுக்கும் அதை பேசும் அந்த மனிதனுக்கும் உரியது. இது அவனுடைய பக்திவிருத்திக்கடுத்ததாக உள்ளது. Unspeakable Words which it is not lawful fora man to utter. ஆக நீ

தேவனிடத்தில் மாத்திரமே யாரும் அறியாத, பேசுக்கூடாத, வாக்குக்கெட்டாத பாஷையில் பேசும் அந்த பாஷையே அந்நிய பாஷை, Unknown Tongue ஆகும். இப்படிப்பட்ட வரத்தை பெற்றவர்களை மக்கள் மத்தியில், ஊழியக்காரர்கள் மத்தியில், விசுவாசிகள் மத்தியில் காண்பது மிக மிக அரிது. ஆனால் பவுலை போன்று வரத்தை உடையவர்களிடமே இது காணப்படும். ஆக ஸ்தாபன சபை வெண்ணிற ஆடைகளின் அக்கர புக்கர கக்கர லாவோ பலரிப்பா ரிக்கல நிப்பல சங்கராபலபல கரபலா தோ! தோ! இவை எல்லாம் பேய்தனத்துக்கடுத்ததே.

10. **மனிதர்களுடைய பற்பல பாஷைகளை பேசுதல் குறித்து எனது வியாக்கியானம்.** இங்கு (அப்.2:4) வெவ்வேறு பாஷைகள் மக்களால் பேசப்படுகின்றன. பேசிய பாஷையை கேட்டவர்கள் அவரவர்கள் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் பேசக்கேட்டார்கள். இது இன்றைய ஸ்தாபன சபைகள் போதகத்தின்படி அந்நிய பாஷை அல்ல. மாறாக ஒருவருக்கொருவர் தெரியாத பாஷை. (1கொரி.12:10) இது மனுஷர்களுடைய பாஷை. அவர்களால் பேசப்படும் பற்பல பாஷைகள். (Various Kinds of Tongues) இது குறித்து ஒருவன் அறிந்துக்கொள்ள விரும்பினால் நான் இதற்கு எப்பொழுதும் விளக்கம் கொடுக்க தயாராக இருக்கிறேன். ஆனால் அவர்கள் வாக்குவாதம் செய்ய மனதாயிருந்தால் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் எனக்கு அப்படிப்பட்ட வழக்கம் இல்லை.

11. கவனியுங்கள். ஏசா.28:11 இங்கு பரியாச உதடுகளினாலும், அந்நிய பாஷைகளினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார் என உள்ளது. பரியாச உதடு – திக்கி திக்கி பேசுதல் – Stammering Lips. இங்கு Another Tongue என்று கூறப்பட்டுள்ளதேயன்றி, அது அந்நிய பாஷை அல்ல / Unknown Tongue அல்ல. இங்கு Another Tongue என்பது மனுஷர் பாஷைகள். இது ஏசா.28:11, அப்.2:4 ன் நிறைவேறுதலாகும்.

12. முடிவாக அந்நிய பாஷை (Unknown Tongue) குறித்து குழம்பாதீர்கள். இது தேவனுக்கும் மனிதனுக்கும் அடுத்த பாஷை. இதர பாஷைகள் Tongues, Various Kinds of Tongues, Another Tongues இவைகள் அனைத்தும் மனுஷர்களுக்குரியது. அந்நிய பாஷை, பற்பல பாஷைகளை நீங்கள் பேச வேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. இவைகளை பரிசுத்த ஆவியானவர் யார் யாரைக்கொண்டு பேச வைக்கிறாரோ அவர்கள் பேசுகிறார்கள். நீங்களாகவே இந்த பாஷைகளை உங்களில் வருவித்துக் கொள்ளமுடியாது. அதாவது ஒருவன் தன்னில்தானே பற்பல பாஷைகளை பேசும் வரத்தையும், அந்நிய பாஷை பேசும் வரத்தையும் வருவித்துக்கொள்ள முடியாது. ஒருவனை பற்பல பாஷை/ அந்நிய பாஷை என்று கூறி ஏதோ ஒன்றை உளரவைப்பது பெந்தெகொஸ்தே சபைகளின் பித்தலாட்டம், மாய்மாலம்.

13. அந்நிய பாஷை பேசும் வரத்தைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் 2கொரி.14 அதியில் மட்டுமே சுமார் ஆறு இடங்களில் காண்கிறோம். 14:2 ல் அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியினால் ரகசியங்களை பேசுகிறான். அவன் பேசுகிறதை ஒருவனும் அறியான். அவன் தேவனிடத்தில் பேசுகிறான். அடுத்து 14:4 அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாக பேசுகிறான். மூன்றாவது 14:13 இங்கு அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதன் அர்த்தத்தை சொல்ல வேண்டும். நான்காவதாக நான் அந்நிய பாஷையில் பேசினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணும், என் கருத்து பயனற்றதாயிருக்கும். ஐந்தாவது 14:19 இங்கு சபையில் அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தை பேசுகிறதை பார்க்கிலும் கருத்தோடே ஐந்து வார்த்தைகளை பேசுகிறதே நலம் என காண்கிறோம். ஆறாவதாக அந்நிய பாஷையில் பேசினால் இரண்டு பேர் மட்டும் அடங்க வேண்டும். மிஞ்சினால் மூன்று பேர். இங்கு நீங்கள் மிக்க கவனமாக அறிந்துக்கொள்ள வேண்டியது என்னவென்றால் அந்நிய பாஷை என்பது ஒன்றே. அந்நிய பாஷைகள் என்று பன்மையில் எங்கும் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆக அந்நிய பாஷைகள் என்பது தவறு. இதை நன்கு புரிந்துக்கொள்ளுங்கள். அந்நிய பாஷை பரலோகத்திற்குரிய பாஷை. அது நாம் தேவனுடன் தொடர்பு கொள்ளவும், பேசவும், சம்பாஷிக்கவும், பயன்பாட்டிற்கும் அவர் கொடுத்த பாஷை.

14. என்னுடைய இந்த பற்பல பாஷைகள் – Various Kinds of Tongues, மற்றும் அந்நிய பாஷை (Unknown Tongue) குறித்த நிருபத்திற்காக நான் தியானித்த அநேக ஆங்கிலம் மற்றும் தமிழ் புத்தகங்களில் தமிழில் வெளியான இரு புத்தகங்கள் உண்டு. ஒன்று **அந்நியபாஷை வரங்கள்** என்ற தலைப்பில் சகோ.ஜெ.சாம்ஜெபத்துரையால் 1989 ல் வெளியிடப்பட்டதாகும். அடுத்து ஜாமக்காரன் வெளியீடு **– அந்நியபாஷை குழப்பம்** 2019 ல் வெளியிடப்பட்டதாகும். இதில் சகோ.சாம்ஜெபத்துரை வெளியீடு முற்றிலுமாக லௌகிக ஞானத்தைக் கொண்டு அவர் தன் சுய புத்தியின் மேல் சார்ந்து எழுதியதாக நான் கருதுகிறேன். இந்த புத்தகத்தில் முற்றிலுமாக எனக்கு ஆவிக்குரிய வழிநடத்துதல் இல்லை. ஏனோ தானோ என்று அந்நிய பாஷை என்று ஒன்றை மிகைப்படுத்தி தன்னுடைய கற்பனை மற்றும் அனுபவத்தின் பேரில் ஒரு பிரமிப்பை உண்டுபண்ணுவதாகவே இருந்தது. அடுத்து டாக்டர் வெளியீட்டை நான் ஒரு ஆவிக்குரிய, ஆத்துமாவுக்கு பிரயோஜமான மன்னாவை கொண்ட ஒரு புத்தகமாக கருதவில்லை. ஆனாலும் பேர் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் (பெந்தெகொஸ்தே அனுபவ ஆவிக்குரியவர்கள் மத்தியில் அல்ல) பிரபலமான இவர் எழுதிய **அந்நிய பாஷைகுழப்பம்** வேதவாக்கியங்களுக்கு முரணான கருத்தைக்கொண்டதாக இருந்தாலும் பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை பேசுதல் அல்ல என்பதில் மட்டும் எனக்கு அவரோடு ஆவியின் வழிநடத்தல் இருக்கிறது.

15. **சகோ.ஜெபத்துரைஅந்நிய பாஷை குறித்துஆராய்ந்ததில் அதில் மூன்று உபதேசங்கள்அடங்கும் என்கிறார். நான் இதை ஆராய்ந்ததில் எனக்கு உண்டான நிலைபாடுகள் கீழ்கண்டவாறு:**

(A) பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் அந்நிய பாஷையின் வரத்தை தந்தருளுகிறார் என சகோதரன் கூறுகிறார். ஆனால் நான் 1கொரி.12 அதியில் வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு. ஆவியானவருடைய அநுக்கிரகம் (வரங்கள்) அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அருளப்பட்டிருக்கிறது என காண்கிறேன்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? அவனவனுடைய பிரயோஜனத்திற்கென வரங்கள் அளிக்கப்பட்டிருக்கிறது. காணப்படும் ஒன்பது வரங்களில் ஒருவனுக்கு குணமாக்கும் வரம், மற்றொருவனுக்கு அற்புதங்களை செய்யும் சக்தியை ஆவியானவர் தமது சித்தத்தின்படி அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். இந்த ஒன்பது வரங்களில் எட்டாவது வரமான பற்பல பாஷைகளை பேசுதல் (Speaking Various Kinds of Tongues)உள்ளது. ஆக பற்பல பாஷைகளை பேசும் வரம் ஆவியானவருடைய சித்தத்தின்படி அவனவனுடைய பிரயோஜனத்திற்காக அளிக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஆங்கிலத்தில் பற்பல பாஷைகள் என்பது Various Kinds of Tongues என உள்ளது. அதாவது பலவிதமான பாஷைகளை பேசுதல் என்பது சரியான பொருளாக இருக்கும் என்பது எனது கருத்து. ஆக பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்று பலவிதமான பாஷைகளை பேசுதல். இதை பலவிதமான அந்நிய பாஷைகளை பேசுதல் என பொருள் கொண்டுவிடக்கூடாது. அந்நிய பாஷைக்கும் பலவிதமான பாஷைக்கும் வித்தியாசம் உண்டு. அந்நிய பாஷை நாம் அறியாதது. பலவிதமான பாஷை மனுஷர்கள் மத்தியில் பேசப்படும் பலவிதமான பாஷையாக இருக்கலாம். ஆக பலவிதமான பாஷைகள் என்று குறிப்பிட்டுள்ளதை அந்நிய பாஷை – Unknown Tongue என பொருள் கொள்ள கூடாது. ஆக பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் அந்நிய பாஷை பேசும் வரத்தை தந்தருளுகிறார் என்ற சகோ.ஜெபத்துரை உபதேசம் வேதவாக்கியங்களுக்கு முரணானது.

**எடுத்துக்காட்டு:-**

(அ) அப்.2அதி மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள். கர்த்தர் அவர்களை அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். அவர்கள் அந்நிய பாஷைகள் பேசினதாக ஆதாரங்கள் இல்லை.

(ஆ) அனனியா சவுலின் மேல் தன் கைகளை வைத்து : சவுலே நீ வந்த வழியிலே உனக்கு தரிசனமான இயேசுவாகிய கர்த்தர் நீ பார்வை அடையும் படிக்கும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். சவுல் பார்வை அடைந்து எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான். அவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அடையாளமாக அந்த வேளையில் அந்நிய பாஷை பேசினான் என்று கூறப்படவில்லை. (அப்.9:17,18)

(இ) எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவருடைய மந்திரி ஞானஸ்நானம் பெற்ற போது அவனும் அந்நிய பாஷை பெற்றதாக கூறப்படவில்லை. (அப்.8:27-39)

(B) உன்னுடைய வாழ்க்கையில் கோபம், எரிச்சல் வரும்போது அவற்றின் மத்தியிலும், கர்த்தரை நோக்கி பார்த்து மெதுவாக அந்நிய பாஷையில் பேசிப்பார். உடனே தெய்வீக பிரசன்னம் உன்னை சூழ்ந்து கொள்ளும். கோபமும் எரிச்சலும் உன்னை விட்டு ஓடிப்போகும். இது சகோ.ஜெபத்துரையின் இப்பிரபஞ்சத்திற்கடுத்த லௌகிக ஞானம். அந்நிய பாஷை ஒன்றும் இவர் நினைத்த வேளையில் வந்து செல்லும் ஒரு பாஷை கிடையாது. கவனியுங்கள் முதலில் நீங்களாகவே அந்நிய பாஷை வரத்தை உங்களுக்குள் உருவாக்கி கொள்ள முடியாது. இது நம்முடைய பெந்தெகொஸ்தே ஸ்தாபன சபையின் கள்ள உபதேசம். அவர்கள் அவர்களுக்குள்ளாகவே அந்நிய பாஷைகளை உருவாக்கி கொள்வார்கள், எப்படி? அடிக்கப்படும் டிரம்பின் தொனிக்கு ஏற்றாற் போல் ஆ, ஓ, ஓஹோ, அக்கர புக்கர என துள்ளி குதித்து அந்நிய பாஷை என்றதொரு பாஷையை தங்களுக்குள் வருவித்துக்கொள்கிறார்கள். மாய்மாலம் பண்ணுகிறார்கள். ஒருவன் தனக்கு தன்னால் தானே அந்நிய பாஷை வரத்தை வருவித்துக்கொள்ள முடியாது. ஆதலால் நீ அந்நிய பாஷை பேசிப்பார் என்பது சகோ.ஜெபத்துரையின் பேய்தனத்துக்கடுத்த ஆலோசனை. கோபம், எரிச்சல் போன்றவைகள் மாம்சத்தின் கிரியைகள். நீ கிறிஸ்துவினுடயவனாயிருந்தால் மாம்சத்தையும், அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருப்பாய். ஏனென்றால் இவைகள் மாம்சத்தின் கிரியைகள் ஆகும். நீ மாம்சத்தின் கிரியைகளில் ஜீவித்துக்கொண்டிருக்கும்போது பிசாசு பேசும் அந்நிய பாஷைதான் உனக்குள்ளே வரும். ஆவியின் வரமாகிய அந்நிய பாஷை உனக்குள்ளே வராது. கோபத்தின், எரிச்சலின் நேரத்தில் அந்நிய பாஷையா? இது சகோ.ஜெபத்துரையின் பித்தலாட்டம்.

(C) ஜெபிக்கும்போது அந்நிய பாஷையிலே ஜெபிக்க கற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய உள்ளத்திலே எழும்புகிற ஜெப எண்ணங்கள் உங்களுடைய உதடுகளில் வரும்போது அந்நிய பாஷை வெளிவரட்டும். ஆவியோடும் கருத்தோடும் ஜெபிக்கிறவர்கள் ஜெபத்தை அப்படி அந்நிய பாஷையிலே கொண்டுவந்து பழக வேண்டும். ஆவியானவர் நமக்குள்ளிருந்து நம்முடைய குறைகள் நீங்குவதற்கு அந்நிய பாஷை பேசுவதோடுகூட பரிந்து பேசிக்கொண்டிருப்பார். இவ்வாறாக சகோ.ஜெபத்துரை தன்னுடைய பேய்த்தனத்துக்கடுத்த சிந்தனையில் எதைஎதையோ போதிக்கிறார்.

அ. ஆனால் இவருடைய மடமையை கவனியுங்கள். அந்நிய பாஷை பேசுவதற்கு ஒருவன் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். அதாவது அந்நிய பாஷை பேசுவதற்கு நாம் பெயரளவில் உள்ள பெந்தெகொஸ்தே சபைக்கு சென்று கற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறாரோ? அங்கு தானே அந்நிய பாஷை கற்றுக்கொள்ளும் பழக்கம் உண்டு. அல்லது ஆவியானவரின் வரத்தை பெற்றுக்கொள்ள நாம் சகோ.ஜெபத்துரையிடம் சென்று கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறாரா? அல்லது பெந்தெகொஸ்தே பாஸ்டர்களிடம் சென்று கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறாரா? இது என்ன முட்டாள் தனம்? இப்படிப்பட்ட கள்ள கபடமுள்ள வேலையாட்களை நம்பித்தானே மக்கள் மோசம் போகிறார்கள். சொல்லுகிறவன் சொன்னால் கேட்பவனுக்கு மதி எங்கே போகிறது என சொல்வார்கள். பிரியமானவர்களே உங்களுக்கு நான் திரும்ப திரும்ப எழுதுகிறேன். நீங்கள் அந்நிய பாஷை என்று கூறும் பற்பல பாஷைகளை பேசுதல் ஆவியின் வரங்களில் ஒன்று. இதை நீங்கள் கற்றுக்கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது. இது தேவன் தமது சித்தத்தின்படி அவரவர்கள் பிரயோஜனத்திற்காக கொடுக்கப்படுவதாகும். எல்லாருக்கும் அல்ல.விரும்புகிறவர்களுக்கும் அல்ல. மாறாக அவரவர்கள் பிரயோஜனத்திற்காக.மேலும்வரங்கள் ஒருவனுடைய விருப்புக்குரியது அல்ல.

ஆ. இவர் கள்ளகபடமுள்ள வேலையாள் என்பதற்கு மற்றொரு ஆதாரம். ஆவியோடும் கருத்தோடும் ஜெபிக்கிற ஜெபத்துடன் அந்நிய பாஷையை கொண்டு வந்து பழகுங்கள் என்பது பரத்திலிருந்து வந்த ஞானம் அல்ல.

கவனியுங்கள் 1கொரி.14அதி நான் அந்நிய பாஷையிலே (Unknown Tongue) விண்ணப்பம் பண்ணினாலும் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும். அடுத்து கவனியுங்கள் இப்படியிருக்க செய்ய வேண்டியது என்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன். பாருங்கள் பேசும் அந்நிய பாஷையின் கருத்தை பேசுகிறவனும் அறிவதில்லை, கேட்கிறவனும் அறிவதில்லை. ஆதலால் விண்ணப்பத்தின் கருத்து பயனற்றதாக இருக்கும் என காண்கிறோம்.

இ. அடுத்து பரிந்து பேசுதல் குறித்து வேதவாக்கியங்களில் நாம் வாசிக்கிறது என்ன? ஆவியானவர் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதென்னதென்று அறியாமல் இருக்கிறபடியினால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார். கிறிஸ்துவே நமக்காக வேண்டுதல் செய்கிறவர். தேவனுடைய வார்த்தை நமக்கு இவ்வாறு போதிக்க சகோ. ஜெபத்துரை வேதவாக்கியங்களோடு ஒன்றை கூட்டியும், குறைத்தும் போதிப்பது என்ன? மறைந்த இவரை நம்பி அநேகர் மோசம் போய் விட்டார்களே! இதற்கு இவர் நியாயத்தீர்ப்பின் நாளில் பதில் சொல்லவேண்டியதிருக்கும். ஆக ஆவியானவர் நமக்குள்ளே இருந்து நம்முடைய குறைகளை நீக்குவதற்கு அந்நிய பாஷையிலே பேசுவதோடு கூட பரிந்து பேசிக்கொண்டே இருப்பார் என்பது வேதவாக்கியங்களோடு ஒன்றை கூட்டி குறைத்து உபதேசிப்பதாகும்.

(D) அந்நிய பாஷையில் பேசும்போது தான் உங்களால் மற்ற வரங்களுக்குள் கடந்து செல்ல முடியும். இதுவும் சகோ.ஜெபத்துரையின் ஒரு மூடத்தனமான உபதேசம். கவனியுங்கள். நாம் நினைத்த நேரத்தில் எல்லாம் நாம் அந்நிய பாஷையில் பேச முடியாது. அதை பேச ஆவியானர் நம்மை அனுமதிக்கும்போது தான் நாம் பேச முடியும். இது நம்முடைய விருப்பு வெறுப்புக்குட்பட்ட ஒரு அனுபவம் அல்ல. மேலும் அந்நிய பாஷை என்று நீங்கள் கூறும் பற்பல பாஷைகளை பேசுகிற வரம் உங்களை இதர எட்டு வரங்களுக்குள் கடத்தி செல்லும் என்பது பிசாசின் தந்திரம். சகோ.ஜெபத்துரை தேவ ஆவியினால் இந்த புத்தகத்தை எழுதவில்லை. இப்பிரபஞ்சத்திற்குரிய ஆவியினால் எழுதி அவருக்குரிய ஜென்ம சுபாவ வழிகளில் உங்களை நடத்துகிறார் அது பிசாசு.

அ. அடுத்து ஆவியானவர் பேசுகிற அந்நிய பாஷையில் பழகுங்கள். அது வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு இணைந்துள்ள ஒரு பாஷை என்கிறார். இது என்ன? இவர் தம்முடைய மாம்சத்திலிருந்து எழுதுகிறார். ஆவியானவருக்கு அந்நிய பாஷையா? அப்படியானால் தனக்கு தெரியாத ஒரு பாஷையில் (அந்நிய பாஷையில்) ஆவியானவர் பேசுகிறாரா? என்ன மதியீனம்? ஆவியானவருக்கு உலகத்தில் உள்ள 6500 பாஷைகளும் தெரியாதா? அவருக்கு அந்நிய பாஷை என்று ஒன்று உண்டோ? ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு அதாவது பவுல் பரதீசுக்கு எடுக்கப்பட்டபோது அங்கு மனிதர் பேசப்படாததும் வாக்குக்கு எட்டாததுமாகிய பாஷைகளை கேட்டான். (2கொரி.12:3) அப்படிபட்ட வார்த்தைகளினால் ஆவியானவர் மிக்க பயபக்தியோடு நமக்காக வேண்டுதல் செய்கிறாரேயன்றி ஆவியானவரால் அவருக்கு தெரியாத அந்நிய பாஷையில் நமக்கு வேண்டுதல் செய்யவில்லை. சகோ.ஜெபத்துரை பரத்திலிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ளாவிட்டாலும், எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டது போல் தன் எழுத்துக்களால் தன்னை மேன்மைப்படுத்துகிறார். வேதவாக்கியங்களை அரைகுறையாக கற்ற, தழும்பும் குடங்களே இவரை மெச்சிக்கொள்வார்கள்.

(E). அந்நிய பாஷையில் நாம் பேச பேச நம்முடைய விசுவாசம் வெளிப்படும் என சகோதரர் கூறுகிறார். விசுவாசம் – இது ஒன்பது வகையான ஆவியானவரின் வரங்களில் ஒன்று. இதை பலப்படுத்த மற்றதொரு வரமாகிய அந்நிய பாஷை தேவையா? அந்நிய பாஷை என்று நீங்கள் கூறுகிற பற்பல பாஷைகளை பேசும் வரம் தேவையா? தியானியுங்கள். 1கொரி.2:5,12:9 இங்கு கவனியுங்கள். அன்பினால் கிரியை செய்கிற விசுவாசம் தேவை. (கலா.5:6) நாம் சுத்த இருதயத்தோடு ஒருவருக்கொருவர் ஊக்கமாய் அன்பு கூற வேண்டும். அந்த அன்பினால் கிரியை செய்கிறதுதான் விசுவாசம். ஆக விசுவாசம் அன்பினால் கிரியை செய்கிறதேயன்றி பற்பல பாஷை வரங்களினால் அல்ல. மேலும் உன்னில் விசுவாசத்தை தொடங்குகிறவரும், முடிக்கிறவரும் இயேசு கிறிஸ்துவேயன்றி (எபி.12:1) அந்நிய பாஷை என்று நீங்கள் கூறுகிற பற்பல பாஷை பேசும் வரங்களை கொண்டு உன்னில் விசுவாசத்தை வர்த்திக்க செய்ய முடியாது.

(F) நித்தியத்திற்குரிய அந்நிய பாஷையில் பேசுகிறோம் என தான் எழுதுகிறது என்னதென்று புரியாது எழுதுகிறார். நித்திய ஜீவனை பெறுவதற்கு அந்நிய பாஷையில் பேசவேண்டும் என்ற ஞானம் பேய்தனத்துக்கடுத்தது. அது இம்மைக்குரியது. மாறுபாடான, வேற்றுமையான அவருடைய உபதேசம். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தார்கள். (அப்.13:48) தேவனுடைய வார்த்தைக்கு தவறான வியாக்கியானம் கொடுக்கும் இவருக்கு நித்திய ஜீவனில் பங்கே கிடையாது. ஏனென்றால் நித்திய ஜீவன் என்ன என்று இவர் அறிந்து கொள்ளவில்லை. இப்படியிருக்க இவருக்கு நித்திய ஜீவனை குறித்து பேச, எழுத என்ன உரிமையிருக்கிறது? பாருங்கள் தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோ.6:23) The Gift of God is Eternal Life, through Jesus Christ. தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியம் இப்படியிருக்க இவர் நித்திய ஜீவனை பெற அந்நிய பாஷைதேவை எனக்கூறுவது வேதவாக்கியங்களில் காணப்படாத பிசாசின் ஞானம். நித்திய தேவன் / அநாதி தேவன். The Eternal God. அவருடைய ஜீவனில் பங்கு பெறுவது நாம் நித்திய ஜீவனை பெறுவதாகும். இதற்கு அந்நிய பாஷை தேவையா? தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவனை கொடுக்கிறார். (யோ.3:16) அந்நிய பாஷை நித்தியத்துக்குரியது அல்ல. அது ஓய்ந்து போகும். அந்திய பாஷை பேசுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று கூறப்படாமல் என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை தானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்கிறார். (யோ.6:54) கர்த்தருடைய வார்த்தையை கேட்டு, சந்தோஷப்பட்டு மகிமைபடுத்தியவர்களுக்கு தானே நித்திய ஜீவன். அவர்கள் அதற்கென நியமிக்கப்பட்டவர்கள் அல்லவா.(அப்.13:48) தேவனுடைய கிருபை வரம் தானே நித்திய ஜீவன். (ரோ.6:23) The gift of God is Eternal Life.

(G) அந்நிய பாஷையில் துதிக்க ஆரம்பித்துவிடுங்கள். உங்களுடைய பரிசுத்தத்தை காத்துக்கொள்ளுங்கள். உள்ளத்தின் ஆழத்திலிருந்து அந்நிய பாஷையை பேசுங்கள். அப்பொழுது உங்களை கறைப்படுத்தாமல் காத்துக்

கொள்ளுங்கள். இதுவும் சகோ.ஜெபத்துரையின் லௌகிக சம்பந்தமான உபதேசம். பிரியமானவர்களே நம்மை பரிசுத்தப்படுத்துகிறவர் தேவனேயன்றி, அந்நியபாஷை அல்ல. (1கொரி.1:30) பொதுவாக இவர் அந்நிய பாஷை என்று கூறுவது பற்பல பாஷை பேசும் வரத்தையே. ஆதலால் தான் நான் மேலே எழுதியுள்ளேன், இவருக்கு அந்நிய பாஷைக்கும், பற்பல பாஷைகளை பேசும் வரத்திற்கும் வித்தியாசம் தெரியாது. அடுத்து நாம் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம். (யோ.17:19) சத்தியம் யார்? அது இயேசு கிறிஸ்து. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்கிறார். (யோ.14:6) ஆக தேவனே நம்மை பரிசுத்தப்படுத்த வேண்டும். நம்மில் நாமே அல்லது நாம் பேசும் அந்நிய பாஷை நம்மை பரிசுத்த படுத்தாது. தேவனுடைய ஆவியினால் நாம் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுகிறோம். அந்நிய பாஷையினால் அல்ல. (1கொரி.6:11) மேலும் கவனியுங்கள் கிறிஸ்து திருவசனத்தை கொண்டு தண்ணீர் முழுக்கினால் (ஞானஸ்நானத்தினால்) சுத்திகரித்து, நாம் பரிசுத்தமாக்குவதற்கு தம்மைதாமே நமக்காக ஒப்புக்கொடுத்தார். (எபே.5:26) மேலும் கவனியுங்கள் தேவனே நம்மை பரிசுத்தம் செய்கிறார்.(அந்நிய பாஷை அல்ல) நாம் அவரால் பரிசுத்தம் செய்யப்படுகிறவர்கள்.(எபி.2:11) அவருடைய சித்தத்தின்படியே நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். (எபி.10:10) அந்நிய பாஷையினால் அல்ல. நாம் பிதாவாகிய தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். (யூதா:1) ஆம். பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம். (ரோ.15:16, 2தெச.2:13, 1பேது.1:2) ஆக எனக்கு பிரியமானவர்களே சகோ.ஜெபத்துரை உபதேசத்தின்படி அந்நிய பாஷையினால் அல்ல, இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்மை பரிசுத்தம் செய்யும்படியாக நகர வாசலுக்கு புறம்பே பாடுபட்டார். (எபி.13:12) அந்நிய பாஷையினாலே அவர் நம்மை பரிசுத்தம் செய்யவில்லை. நாம் நம்முடைய பரிசுத்தத்தை அந்நிய பாஷையினால் காத்துக்கொள்ள முடியாது. ஆதலால் இவரது உபதேசம் வஞ்சனையானது. சத்தியதிற்கு மாறானது. பேய்தனத்துக்கடுத்தது. நாம் நம்முடைய பரிசுத்தத்தை தேவனால், தேவ ஆவியினால், பரிசுத்த ஆவியினால் மாத்திரமே காத்துக்கொள்ளமுடியும்.

குறிப்பு : சகோ.சாம் ஜெபத்துரையின் **அந்நிய பாஷை வரங்கள்** புத்தகத்தை நான் தியானிக்கும் போது அதை கிழித்து தூக்கி வெளியே எறியவேண்டும் என்றுதான் எனக்கு தோன்றியது. ஏனென்றால் அதில் அந்த அளவுக்கு வேதப்புரட்டுகள் நிறைந்துள்ளது. முற்றிலுமாக இந்த புத்தகம் இப்பிரபஞ்சத்திற்குரிய ஆவியினால்தான் எழுதப்பட்டது.

(H) சகோ.ஜெபத்துரை நீங்கள் நடந்தாலும், உட்கார்ந்திருந்தாலும், எந்த வேலை செய்துகொண்டிருந்தாலும், பஸ்ஸிலே பிரயாணம் செய்து கொண்டிருந்தாலும் கூட அந்நிய பாஷையிலே தேவனோடு கூட உறவாடிக்கொண்டிருங்கள் என்கிறார். இதிலிருந்து இவர் அந்நிய பாஷை மற்றும் பற்பல பாஷைகளை பேசுதலை குறித்து ABCD கூட அறிந்திருக்கவில்லை என தெரிகிறது. பற்பல பாஷை நீங்களும் நானும் பேசும் தமிழ் / தாய்மொழி போன்று எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கும் ஒரு பாஷை அல்ல. இது ஆவியின் வரங்களின் ஒன்று. இது அவனவனுடைய பிரயோஜனத்திற்கு மாத்திரமே. 24 மணி நேரமும் நாம் பற்பல பாஷைகளை பேசி கொண்டிருக்க முடியாது. 24 மணி நேரமும் தேவனோடு பேசி கொண்டிருக்க நீங்கள் பேசும் தமிழ் பாஷை தேவனுக்கு தெரியாதா? உங்கள் தாய்மொழியை விட்டு பற்பல பாஷைகளில் ஏதோ ஒன்றை பேசினால் தான் / அந்நிய பாஷை பேசினால் தான் அவருக்கு புரியுமா? குருடன், குருடர்களை வழிநடத்துகிறார்.

(I) அந்நிய பாஷையில் ஜெப ஊழியம் என்கிறார். அப்படியொரு ஜெப ஊழியம் வேதவாக்கியங்களில் எங்காவது உண்டா? இவர் தேவனுடைய வார்த்தையை கூட்டி குறைத்து பிசாசுக்கே ஊழியம் செய்து வந்தார். வேதவாக்கியங்களிலிருந்து அந்நிய பாஷைக்கு விளக்கம் கொடுக்காமல் / பற்பல பாஷைகளை பேசுவதற்கு விளக்கம் கொடுக்காமல், தன் லௌகிக ஞானத்திலிருந்து, இந்த பொல்லாத உலகத்திலிருந்து பெற்ற அறிவினால் விளக்கம் கொடுக்கிறார். அது பரத்திலிருந்து வருகின்ற ஞானமாயிராமல் லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்திற்குரியதுமாயிருக்கிறது. ஆதலால் தான் இவர் தன் மனம்போன போக்கில் எதை எதையோ அந்நிய பாஷை பெயரில் சாதூரியமாக பேசி மக்களை வஞ்சிக்கிறார். அந்நிய பாஷை ஜெப ஊழியம் என்று வேதவாக்கியங்களில் எங்கும் கிடையாது.

(J) பரியாச உதடுகளினாலும், அந்நிய பாஷைகளினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாற பண்ணத்தக்க இளைப்பாறுதல் (ஏசா.28:11-12) இந்த வசனங்களை குறிப்பிட்டு சகோதரர் எழுதுகிறதாவது:

(அ) இதுவே இளைப்பாறுதல், இதுவே ஆறுதல். அந்நிய பாஷை பேசுவதுதான் இந்த இளைப்பாறுதல், ஆறுதல் என்கிறார். கர்த்தர் ஒரு அருமையான இளைப்பாறுதலை அந்நிய பாஷையின் மூலமாக நமக்கு வைத்திருக்கிறார். அந்நிய பாஷையில் பேசும்போது நம்முடைய பாரங்களை எல்லாம் கர்த்தர் மேல் வைக்கிறோம். நம்முடைய கவலைகளையெல்லாம் அவர் மேல் வைக்கிறோம். அந்நிய பாஷையில் பேசிவிட்டு எழும்புவது, நம்மை பரலோக புத்துணர்ச்சியினால் அருமையாய் நிரப்பி குதுகலிக்கச்செய்கிறது. ஆம், அந்நிய பாஷை நமக்குள் இருக்கும் தேவாதி தேவனின் ஜெயகம்பீரம். அல்லேலூயா என எழுதுகிறார்.

(ஆ) நம்முடைய பாவங்கள், கவலைகள் குறித்து வேதவாக்கியம் கீழ்கண்டவாறு கூறுகிறது: ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைகளுக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியினால் உங்கள் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள். (1பேது.5:6,7) அந்நியபாஷையில் பேசும்போது அவர் உங்கள் பாரங்களையும், கவலைகளையும் மாற்றி உங்களை குதுகலிக்க செய்வார் என்று கூறவில்லை. நீங்கள் ஒன்றுக்கும் கவலைபடாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே (அந்நிய பாஷையோடே அல்ல) கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அந்நிய பாஷையினால் அல்ல. நீங்கள் பேசும் உங்கள் ஜென்ம பாஷையினாலே தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலானா தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும். (பிலி.4:6,7) பிரியமானவர்களே உங்கள் கவலைகளுக்கு வேதவாக்கியங்களில் காணப்படும் போதனை / உபதேசம் /

ஆலோசனைகள் இதுவே.சகோ.ஜெபத்துரையின் உபதேசம் / ஆலோசனை மாய்மாலமானது. இப்பிரபஞ்ச ஞானத்திற்கடுத்தது, வஞ்சிப்புக்குரியது.

(இ) இப்பொழுது இளைப்பாறுதல் குறித்து ஏழாம் சபைக்கால / லவோதிக்கேயா சபைக்கால தூதனுடைய செய்தியிலிருந்து சில உபதேசங்களை உங்களுக்கு எழுதுகிறேன். இந்த இளைப்பாறுதல் குறித்து: பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல் லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதுமான சகோ.ஜெபத்துரையின் உபதேசத்தையும் ; பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானத்தைக்கொண்டு ஏழாம் சபைகால தூதன் விளக்கத்தையும் நீங்கள் ஆவிக்குரியவர்களானால் நிதானித்து சத்தியத்தை அறிய முடியும்.

(ஈ) பரியாச உதடுகளினாலும், அந்நிய பாஷைகளினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாற பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல் (ஏசா.28:11,12) For with stammering lips and another tongue will he speak to this people, to whom he said, This is the rest by which ye may cause the weary to rest, and this is the refreshing. பரியாச உதடுகள் – Stammering lips அதாவது திக்கும் உதடுகள். சிறுபிள்ளை திக்கி திக்கி பேசுவது போன்று. இது பெந்தெகொஸ்தே நாளுக்கு சுமார் 712-800 ஆண்டுகளுக்கு முன்பு ஏசாயாவினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம். பெந்தெகொஸ்தே நாளன்று நிறைவேறியது. இதுவே இளைப்பாறுதல். இது ஞாயிற்றுகிழமை அல்ல. நாம் ஞாயிற்றுகிழமையை ஓய்வு நாள் என்று அழைப்பது தவறு. ஞாயிறு வாரத்தின் முதலாம் நாள். சபைகூடும் நாளாகுமேயன்றி, ஓய்வு நாள் அல்ல. அவ்வாறாகவே சனிக்கிழமையும். ஓய்வு என்றால் இளைப்பாறுதல் என்று பொருள்படுகிறது. பரிசுத்த ஆவியே இளைப்பாறும் நாளாய் உள்ளது. இதுவே ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலாய் உள்ளது. பரிசுத்த ஆவியை பெறும்போது நீங்கள் நித்திய இளைப்பாறுதலை உடையவர்களாகிறீர்கள். தேவன் உலகத்தை உண்டாக்கின பின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். அவர் இளைப்பாற சென்றார். நாம் தேவனுக்குள் பிரவேசிக்கும் போது, நாம் எல்லா நேரத்திலும் பிரவேசிக்கவேண்டுமேயன்றி, ஒரு ஞாயிற்றுகிழமை அல்லது சனிக்கிழமையன்று. நாம் இளைப்பாறும் இளைப்பாறுதல் நித்தியமானது. அது நாம் நித்திய ஜீவனை பெறுவதாகும். பரிசுத்த ஆவியே நித்திய ஜீவன்.

(உ) நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டு போகாமல், என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குதத்தம் நிறைவேற காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். (அப்.1:4,5) அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பபட்டார்கள். (அப்.2:4) திராட்சை ரசமானது வெளிப்படுத்துதலினால் ஊக்குவிக்கப்படுகிறதற்கு அடையாளமாயிருக்கிறது. பரிசுத்த ஆவி அக்கினி மயமாக அவர்கள் மேல் விழுந்தபோது அது அவர்களை ஊக்குவித்தது, உணர்ச்சி பெற செய்தது. அதுகுறித்து வெறித்திருக்கிறார்கள் என்று ஜனங்கள் சொல்லும் அளவுக்கு அவர்கள் வெளிப்படுத்ததினால் ஊக்குவிக்கப்பட்டிருந்தார்கள். பாருங்கள் அது வெளிபடுத்ததினால் உண்டான உணர்ச்சியாகும். இது யோவேல் தீர்க்கதரிசியினால் உறைக்கப்பட்டபடியே நடந்தேறியது. இது என்ன? ஏசாயா.28:11,12 ன் தீர்க்கதரிசனம் உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

(ஊ) ஓய்வுநாள், கர்த்தருடைய ஓய்வுநாள், ஓய்வுபெறும் இளைப்பாறுதலின் நாள் அனைத்தும் ஒன்றுதான். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாற பண்ணத்தக்க இளைப்பாறுதல். இதுவே ஆறுதல், பெந்தெகொஸ்தே நாள் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய ஜீவனை ஆட்கொண்டபோது, அவர்கள் லௌகிக கிரியைகள் அனைத்திலும் இருந்து ஓய்வு பெற்றார்கள்.

(எ) பரிசுத்த ஆவி இளைப்பாறுதல். வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதலை தருவேன். (மத்.11:28) பரிசுத்த ஆவி உங்களுக்குள் வரும்போது உங்களுக்குள் அவர் தேற்றரவாளனாக இருக்கிறார். நீங்கள் தேற்றப்பட்டு, இளைப்பாறுதலை பெற்று முத்தரிக்கப்படுகிறீர்கள். அவர் உங்களுக்காக பரிந்து பேசுகிறவறாகிறார். உங்களுக்கு ஏதோ ஒன்று நடந்துவிட்டால், உடனடியாக பரிசுத்த ஆவியானவர் உங்களுக்காக பரிந்து பேசி, வேண்டுதல் செய்கிறார். அது தான் உங்களுக்குள் இருக்கும் தேவனுடைய ஆவி. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். ஏனென்றால் தேவனுடைய ஆவி உங்களுக்குள் வாசமாயிருக்கிறார்.

(ஏ) இப்பொழுது கவனியுங்கள். யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்கு உட்படுத்தியிருந்தால், பின்பு அவர் வேறொரு இளைப்பாறுதலின் நாளைக்குறித்து சொல்லியிருக்க மாட்டாரே. (எபி.4:8) அப்படியானால் அவர் எந்த நாளை உண்மையான இளைப்பாறுதலின் நாளாக குறிப்பிடுகிறார்? வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதலை தருவேன். நாம் அவரிடத்தில் வரும்போது அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம். தேவன் உலகத்தை படைத்து தம்முடைய கிரியைகளை முடித்து, ஓய்ந்து, மறுபடியும் கிரியைகளுக்கு திரும்பாததுபோல, நாமும் நம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருக்கிறோம்.(எபி.4:10) தேவன் ஆறு நாட்களில் உலகத்தை சிருஷ்டித்த போது, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். அதன் பின் அவர் ஒருபோதும் வேலை செய்யவில்லை. உலகத்தை உருவாக்கி தன்னுடைய சிருஷ்டிப்புகளை அதில் வைத்து, பின் இளைப்பாறும்படி சென்றார். அவர் மீண்டும் வானத்திலும் பூமியிலும் எதுவும் ஒருபோதும் உருவாக்கவில்லை. இளைப்பாற சென்றார். நீங்கள் எவ்வளவு நாட்களாக பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கப்பட்டிருக்கிறீர்கள்? நீங்கள் மீட்கப்படும் நாள் வரைக்கும். அதுதான் அந்த இளைப்பாறுதல். அந்நிய பாஷை ஒருநாள் ஓய்ந்து போகும். ஆதலால் அது இளைப்பாறுதலாக இருக்க முடியாது.

(ஐ) இளைப்பாறுதல் விசுவாசிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குதத்தம். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். அது என்ன வாக்குதத்தம்? ஏசா.28:11,12 ஆகும். அது யோவேல் கூறியது. என்பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் (Power) தரிக்கப்படும்வரைக்கும் எருசலேமிலே காத்திருங்கள். பரிசுத்த ஆவி – உன்னதத்திலிருந்து வரும் / வந்த பெலன், அது வல்லமை. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள். இது உன்னதத்திலிருந்து நம் மேல் ஊற்றப்படும் ஆவி. (அப்.1:5,8, ஏசா.32:15)

(ஒ) இளைப்பாறுதல் எப்பொழுது உண்டானது? ஜனங்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, பற்பல பாஷைகளினாலும், பரியாச உதடுகளினாலும் பேசினபோது உண்டானது. பரியாச உதடுகளினால் அவர்கள் ஒரு காரியத்தையும் பேசவில்லை. மாறாக அவர்கள் திக்கி திக்கி பேசினார்கள் என்றே கூறப்பட்டுள்ளது. ஒன்றை, ஒரு காரியத்தை அவர்கள் சிறுகுழந்தைகள் போன்று திக்கி திக்கி பேசினார்கள். முழுமையான வார்த்தைகளை அவர்கள் பேசவில்லை. அது எப்பொழுது சம்பவித்தது? பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் வந்தபோது அது சம்பவித்தது. அதுவே இளைப்பாறுதலாக உள்ளது. பரிசுத்த ஆவியே இளைப்பாறுதல். அது அந்நிய பாஷை அல்ல. நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதலை தருவேன். நான் உங்களுக்கு ஜீவனை அதாவது நித்திய ஜீவனை தருவேன். அது ஒழிந்து அல்லது ஓய்ந்து போனது. அது ஒரு ஜீவன் அல்ல, மாறாக அது நித்தியஜீவன். ஆனால் அந்நிய பாஷையோ ஓய்ந்துபோகும். லேனாயீ என்ற கிரேக்க வார்த்தை தேவனுடைய சொந்த ஜீவன் என்று பொருள்படுகிறது. பாருங்கள் தேவன் உங்களுக்குள்ளாக வந்து உங்களுடைய ஒரு பாகமாக இருப்பதாகும். அவர் உங்களுக்குள்ளே ஒரு பிறப்பை அளித்து உங்களை தம்முடைய குமாரனும், குமாரத்தியும் ஆக்குகிறார்.
(ஓ) வேதவாக்கியங்களில் நாம் மூன்று இளைப்பாறுதலை குறித்து காண்கிறோம். (1) தேவன் தாம் தம்முடைய கிரியைகளிலிருந்து அதை பெற்றுக்கொண்டார். தேவன் தாம் செய்த தம்முடைய கிரியைகளை ஆறாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.(ஆதி.2:2,3) (2) இஸ்ரவேலர் நியாயப்பிரமாணத்தினால் அதை பெற்றுக்கொண்டார்கள். ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக. (யாத்.20:8, எசே.20:12,20) (3) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது தேவனுடைய ஒரு பாகமாக அதை பெற்றுக்கொண்டது. (அப்.2:4, எபே.4:30)
(ஔ) நீங்கள் பரிசுத்த ஆவியை ஒருபோதும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் நீங்கள் இன்னும் தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கவில்லை.
(K) முடிவாக அந்நிய பாஷை என்றால் எது என்று அதன் ABCD யே அறியாத சகோ.ஜெபத்துரை அந்நிய பாஷை பேசுவதுதான் இளைப்பாறுதல் என்ற வியாக்கியானம் பேய்த்தனத்துக்கடுத்தது. அந்நிய பாஷை பெயரில் எதைஎதையோ சப்பைகட்டி தன் மாம்ச சிந்தையிலிருந்து எழுதி, அதை வாசிப்பவர்களும், கேட்பவர்களும் பக்திவிருத்தி அடையக்கூடாத படிக்கு அவர்களுடைய விசுவாசத்தை தன்னுடைய உபதேசத்தினால் சீர்குலைத்துவிட்டார், கவிழ்த்துப் போட்டு விட்டார். மேலும் அந்நிய பாஷைகளினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். ஜனங்கள் மறுஉத்தரவாக என்னிடம் அந்நிய பாஷையில் பேசுவார்கள் என்று கூறப்படவில்லை. ஆக ஜனங்கள் அந்நிய பாஷை பேசுவதுதான் இளைப்பாறுதல் என்ற உபதேசம் மடமை, மூடத்தனமானது. சகோ.ஜெபத்துரை இப்பொழுது நம் மத்தியில் இல்லை. ஆனால் அவரின் மாறுபாடான உபதேசங்கள் நம் மத்தியில் உள்ளது. ஆதலால் அதை விமர்சனம் செய்வது தவறு இல்லை என நான் கருதுகிறேன். இவரது உபதேசத்தின்படி அந்நியபாஷை நித்தியத்திற்குரியது அல்ல. மாறாக அந்நிய பாஷை ஓய்ந்துபோம் என அப்.பவுல். 1கொரி.13:8 ல் கூறுகிறார்.
(L) தாகமும், வாஞ்சையும் உள்ளவர்கள் கர்த்தரிடத்தில் வரங்களை கேட்டால், கர்த்தர் கொடுக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார். ஆவியின் வரங்களை விரும்பி அதை தேடு. நீ ஆண்டவரிடத்தில் கேட்கும்போது ஏதாவது ஒரு வரத்தை தாரும் என கேட்காமல், ஒன்பது வரங்களின் பெயர்களை சொல்லி அத்தனையும் வேண்டும் என்று உரிமையோடு கேள் என்கிறார். இது எல்லாம் வேதவாக்கியங்களில் ஆதாரம் இல்லாத ஒரு மனிதனுடைய பிதற்றுதல் ஆகும். ஆவியின் வரங்கள் குறித்து நாம் திட்டவட்டமாக 1கொரி.12அதியில் போதிக்கப்பட்டிருக்கிறோம். முதலாவது ஆவியின்அநுக்கிரகம் (வரம்) அவனவனுடைய பிரயோஜனத்திற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது இதிலிருந்து எல்லாருக்கும் அல்ல என காண்கிறோம். இதனால் தான் எல்லாரும் அந்நிய பாஷையை (Speak with Tongues not Unknown Tongue) பேசுகிறார்களா? என பவுல் எழுதுகிறான். ஒருவனுக்கு ஒரு வரம். மற்றொருவனுக்கு மற்றொரு வரம், இப்படியாக வரம் அவரவர்களின் பிரயோஜனத்திற்காக பகிர்ந்து ஆவியானவரால் கொடுக்கப்படுகிறது. வரங்கள் நம்முடைய சித்தத்தின்படியல்ல, விருப்பு வெறுப்பின்படியும் அல்ல. ஆவியின் வரங்களை பகிர்ந்து கொடுப்பது ஆவியானவருடைய சித்தம். மேலும் ஒன்பது வரங்களும் ஒருவனுக்கு மாத்திரம் அல்ல. ஆவியானவர் தம்முடைய சித்தத்தின்படி அவனவனுக்கு அவனுடைய பிரயோஜனத்திற்கு பகிர்ந்து கொடுக்கிறார். தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம் பண்ணும் பொருட்டு வரங்களை பெற்றுக்கொண்டீர்.(சங்.68:18) பெந்தெகொஸ்தே நாளன்று அவர் மனுஷர்களுக்குள் வாசம் பண்ணும் பொழுது ஆவியின் வரங்களை நமக்கு அருளினார். இதுவே வேதப்பூர்வமான உபதேசம். ஆதலால் சகோ.ஜெபத்துரை உபதேசம் குப்பை தொட்டி சென்றடைவதற்கே தகுதியானது.
(M) ஜெபிக்கும்போது அந்நிய பாஷையாக ஜெபிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். அதாவது அந்நிய பாஷை பேச கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். அப்படியானால் அந்நிய பாஷை கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாஷையா? ஆனால் வேதவாக்கியமானது அதை ஒரு வரம் என்றே கூறுகிறது. அப்படியானால் அந்நிய பாஷை கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு வரமா? என்ன மடமையான ஒரு போதனை? ஆவியோடும் கருத்தோடும் ஜெபிக்கும்போது அத்துடன் அந்நிய பாஷை கொண்டுவந்து பழகுங்கள் என்கிறார். அதாவது அந்நிய பாஷை பேசுவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும், அதில் பழக வேண்டும் என்கிறார். மாணவர்கள் பள்ளியில் தங்கள் அறியாத ஜென்ம பாஷைகளை, கிரேக்க பாஷைகளை கற்றுக்கொள்வது போன்று இவர் அந்நிய பாஷைகளை கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். இதிலிருந்து இவர் பிசாசினால் வழிநடத்தப்பட்டார் என்பது நிச்சயமே. குறிப்பு: வேதவாக்கியங்களில் பற்பல பாஷைகள் என கூறப்பட்டுள்ளதை இவர் அந்நிய பாஷை என கருத்தில் கொள்ளுகிறார்.
(N) இவர் தங்களுடைய ஆயுள் முழுவதும் ஒரே மாதிரியான அந்நிய பாஷையை பேசிக்கொண்டிருக்கிறார்கள். காலப்போக்கில் அந்நிய பாஷை பழைய பாஷையிலிருந்து வேறுபட்டு புதிதாக மாறும் என்கிறார். அதாவது ஒருவர் ஒரே அந்நிய பாஷையில் பேசிக்கொண்டே இருக்க கூடாது. அது காலப்போக்கில் அதை மாற்றிக்கொள்ள வேண்டும்

என்கிறார். அதாவது அந்நிய பாஷை பேசுவது நம்முடைய சுயசித்தத்திற்கு உட்பட்டது. ஆதலால் அதை காலப்போக்கில் நாகரீகமானது மாறிக்கொண்டே செல்வது போன்று அந்நிய பாஷையும் மாறிக்கொண்டே இருக்க வேண்டும் என்கிறார். இது எல்லாம் என்ன? பிசாசுக்கடுத்த ஆலோசனையேயன்றி வேறென்ன? சிந்தியுங்கள்.
(O) முதலாவது நாம் அந்நிய பாஷையில் (பல பாஷை) பேச ஆரம்பித்தால் பின் மற்ற வரங்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக கடந்து செல்லலாம் என்கிறார். பாருங்கள் இது எவ்வளவு கொடூரமான ஒரு ஆலோசனை. நிச்சயமாக இவர் தன் சுயபுத்தியின்மேல் சார்ந்து, தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களுக்கு தன் விளக்கத்தை கொடுக்கிறார் என்றால், அது என்ன? பிசாசு.

16. **மேலும் இவரது அந்நிய பாஷையின் லௌகிக ஞானத்தை கவனியுங்கள்.**
1. அந்நிய பாஷை வரத்தை பெற்ற பின்பு தான் தீர்க்க தரிசனம் வரம் கிரியை செய்ய ஆரம்பிக்கிறது என்கிறார்.
2. அந்நிய பாஷை என்றால் என்ன என்று தெரியாத இவர் அந்நிய பாஷையில் பேசுவது பரிசுத்த ஆவியின் நிறைவுக்கு ஆரம்ப அடையாளம் என்கிறார்.
3. பக்திவிருத்தியின் மேல் ஆசையுள்ளவர்கள் அந்நிய பாஷை பேசுவார்கள் என்கிறார்.
4. ஒருவன் அந்நிய பாஷையில் பேசும்போது தெய்வீக பிரசன்னம் அவனை சூழ்ந்து கொள்கிறது என்கிறார். கவனியுங்கள் நாம் தமிழில் பேசும் போது தெய்வீக பிரசன்னம் நம்மை சூழ்ந்துக்கொள்ளாதா?
5. உங்கள் உள்ளம் புலம்பும்போது, ஒரு நிமிடம் கண்களை மூடி கல்வாரி சிலுவையை நோக்கி பார்த்து அந்நிய பாஷையில் பேசுங்கள். இமைப்பொழுதில் ஒரு தெய்வீக சமாதானம், இளைப்பாறுதல் உங்களை சூழ்ந்துக்கொள்ளும் என்கிறார். ஏன் நான் என் ஜென்ம பாஷையில் பேசும்போது இந்த அனுபவம் கிடைக்காதா?
6. அந்நிய பாஷையில் ஜெபிக்கும்போது தேவனுடைய திட்டங்கள், தேவனுடைய ஆலோசனைகள் எல்லாம் ஒருவனுடைய மனக்கண்களுக்கு முன்பாக தரிசனமாக வெளிப்படுகிறதாம். அப்படியானால் அவரவர்கள் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் ஜெபிக்கும்போது இவைகள் நிகழாதா?
7. பரிசுத்த ஆவியானவர் ஒருவனுடைய உள்ளத்தை நிரப்பும்போது, அவர் உள்ளம் தானாகவே பரலோக வல்லமையினாலும், கல்வாரியின் அன்பினாலும் நிரம்பி அவனுடைய உதடுகள் அந்நிய பாஷைகளை பேசும் என்கிறார். இதெல்லாம் வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் அற்ற உபதேசங்கள்.
8. நாம் யாவரும் அந்நிய பாஷையில் ஜெபிக்க கற்றுக்கொள்ள வேண்டும். இவரிடம் இந்த பெந்தெகொஸ்தே சபையினரின் ஆவி தான் இவரில் தங்கி இருக்கிறது. வேதவாக்கியங்களை குறித்து இவருக்கு ஒன்றும் தெரியாது.
9. நாம் ஆவியோடும் கருத்தோடும் ஜெபிக்கிற ஜெபத்தை அப்படியே அந்நிய பாஷையில் கொண்டு வந்து பழக வேண்டும் என்கிறார். அந்நிய பாஷையை கொண்டுவந்து என்பது தேவனுடைய வார்த்தையில் இவர் ஒன்றை கூட்டுகிறார்.
10. ஒருவர் பேசும் அந்நிய பாஷை காலப்போக்கில் பழைய பாஷையிலிருந்து வேறுபட்டு புதிதாக மாறும். சிலர் தங்களுடைய வாழ்க்கையில் உள்ள குறைகளை நீக்க முன்வராதபடிக்கு ஆயுள் முழுவதும் ஒரே மாதிரியான அந்நிய பாஷைகளை பேசிக்கொண்டிருக்கிறார்களாம். ஒருவன் தன் குறைகளை அறிக்கை செய்யும் போது கர்த்தர் நலமான, புதிதான, மேன்மையான பாஷைகளை கட்டளையிடுகிறாராம். இது என்ன மடமை?
11. ஆவியானவருடைய பாஷையோடு நம்முடைய பாஷையை இணைத்து சாத்தானுக்குகூட தெரியாதபடி கர்த்தரிடத்தில் நாம் பேச முடியுமாம். இவருடைய ஆலோசனைகள் எல்லாம் இவரோடு, இவருடைய ஆலோசனையைக் கேட்கும் மற்றவர்களையும் பாதாளத்திற்கு வழிநடத்துகிறதாகவே இருக்கிறது.
12. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள் பல வேளைகளில் எரிச்சலும், கோபமும் அடைவதற்கு காரணம் அவர்கள் அந்நிய பாஷையில் பேசி தேவனை துதிக்கவில்லையாம்.பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள் கூட கோப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. அவர்கள் கோப்படுவதினால் அவர்கள் அந்நிய பாஷை வரத்தை உடையவர்கள் அல்ல என்பது தவறு. இது குறித்து கவனியுங்கள்: (அ) இயேசு விசனப்பட்டு கோபம் கொண்டார்(மாற்3:5). (ஆ) தேவனுடைய கோபம் அவர் மேல் நிலைநிற்கும்(யோ3:36). தேவ கோபம் என்பது தேவன் தன்னில் கொண்டுள்ள கோபம் தானே? தேவனிடத்தில் கோபம் காணப்படுகிறது ஏன்? மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும், அநியாயத்துக்கும் விரோதமாக(ரோ1:18) கோபாக்கினையை செலுத்துகிற தேவன் அநீதராயிருக்கிறார் என்று சொல்லக் கூடுமோ?(ரோ3:5) நாம் தெய்வீக கோபத்திற்கு பல வேளைகளில் உடந்தையாகி விடுகிறோம். தெய்வீக கோபத்திற்கும் மாம்சரீகமான கோபத்திற்கும் வித்தியாசங்கள் உண்டு. பாருங்கள் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்ள கூடாது (மத்5:22). முற்கோபம் கூடாது (தீத்1:7) இது என்ன? எதையும் கேட்டு, விசாரித்து முடிவு எடுக்காமல் அரைகுறையாக கேட்டு முன் கோபம் கொள்வதாகும். பாருங்கள் இப்படிப்பட்ட கோபங்களெல்லாம் மாம்ச ரீதியானது. இது தவறு.
13. நாம் அந்நிய பாஷையில் பேசினால் தான் / ஜெபித்தால் தான் ஆவியானவருக்கு மகிழ்ச்சியாம். பரலோக பிதாவுக்கும் மகிழ்ச்சியாம். அப்படியானால் நாம் நம்முடைய ஜென்ம பாஷையில் பேசுவது ஜெபிப்பது தேவனுக்கு மகிழ்ச்சியற்றதா?
14. அந்நிய பாஷையின் வரம் ஆவிக்குரிய வரங்களின் ஆரம்பம் என்கிறார். இதுவும் ஒரு தவறான போதனை. இது ஆவிக்குரிய வரங்களில் கடைசியாக உள்ளது.
15. ஆவிக்குரிய வரத்தை விடாப்பிடியாக கர்த்தரிடத்தில் கேட்க வேண்டும் என்கிறார். இதுவும் ஒரு தவறான போதனை. ஏனென்றால் ஆவிக்குரிய வரத்தை ஒருவன் கேட்டு பெற்றுக் கொள்ள முடியாது.
16. இவர் பற்பல பாஷைகளை பேசுவதிலும், அந்நிய பாஷை பேசுதலையும் ஒன்றாகவே இணைத்து பேசுகிறார். இதிலிருந்து இவருக்கு இரண்டுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் தெரியாது. குருடர்களுக்கு வழிகாட்டும் குருடனாகவே இருந்தார். அவர் மடிந்து போனார். ஆனால் அவரை நம்பியவர்களின் நிலை அந்தோ பரிதாபம்!

17. **இப்பொழுது டாக்டர்.புஷ்பராஜ் அவர்களின் அந்நிய பாஷை குழப்பம் வெளியீட்டை சற்று தியானிப்போம்.** இந்த அந்நிய பாஷை குறித்து டாக்டர்.புஷ்பராஜ் எழுதியதின் சுருக்கம். 1906ல் அமெரிக்கா நாட்டில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில், அசுசா என்ற தெருவில் ஒரு சிறு வீட்டில், ஒரு சிலராக கூடி ஜெபித்து வந்தார்கள். அங்கிருந்த ஒரு வாலிப பெண் ஜென்னிமூர், பரவசம் அடைந்து சப்தமாக ஏதோ கூறி உளறினாள். அவள் இட்ட சத்தத்தை கூடி இருந்தவர்கள் உற்சாகப்படுத்தினார்கள். இவள் வீட்டிற்கு முன் வீட்டில் குடியேறியவன் வில்லியம்மோர். இவன் ஒரு விசுவாசி. இவன் ஜென்னிமூருடன் பழகி அவளை திருமணம் செய்து கொண்டான். இது ஒரு காதல் திருமணம். இவன் தன் மனைவியின் உளறலை பெரிதுபடுத்தி, மற்ற சபைகளுக்கு தன் மனைவியை அறிமுகப்படுத்தி அவள் பேசிய உளறலை அந்நிய பாஷை என அழைக்கலானான். பலர் ஜென்னி பேசிய அந்நிய பாஷையை பேசி பழகினார்கள். இந்த உளறல் அந்நிய பாஷையாக மாறி பல நாடுகளில், குறிப்பாக சீனாவில் பரவ ஆரம்பித்தது என்பதாகும். உதா. அந்நிய பாஷை ஒரு உளறல் கக்ரே, புக்ரே, லாவோ, பலரிப்பா, ரிக்கல் நிப்பல், சங்கர பல பல, கிபெலா, தோ! தோ! குறிப்பு: ஜென்னிமூர் அந்நிய பாஷை அனுபவம் போன்றுதான் அதனாசியஸ் என்பவரின் அனுபவ சித்தாந்தம் திரித்துவம் ஆகும். இந்த இரண்டும் வேத வாக்கியங்களில் இல்லாத ஒரு போதனை / உபதேசம். பிசாசின் தந்திரம்.இந்த டாக்டர் உலகத்தின் பற்பல பகுதிகளில் வாழும் தமிழர், மலையாளி மக்கள் மத்தியில் செல்வாக்குடையவர். ஸ்தாபன சபைகளின் தவறுகளை கண்டிப்பதில் மிக்க தைரியசாலி. ஆனால் ஆவிக்குரிய காரியங்களில் போதுமான தேர்ச்சி பெற்றவர் அல்ல. ஏனென்றால் இன்னும் இவருக்கு தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவு தேவனிடமிருந்து கிடைக்கவில்லை என்பது என் கணிப்பு. சத்தியத்தை அறியும் அறிவு இவரிடத்தில் இருந்தால் தேவன் திரியேகர். பிதா ஒருவர், குமாரன் ஒருவர் பரிசுத்த ஆவி மற்றொருவர் என வேறொரு சத்தியத்தை விசுவாசித்து, அதை பிரஸ்தாபப்படுத்த மாட்டாரே. இவருக்கும் அந்நிய பாஷை மற்றும் பற்பல பாஷைகளுக்குரிய வித்தியாசம் தெரியாது, இரண்டையும் அந்நிய பாஷை என்றே வர்ணித்து குழப்புகிறார். இப்பொழுது இவரது அந்நிய பாஷை குறித்தலான போதனைகளை சற்று ஆராய்ந்து பார்ப்போம். இவர் பரிசுத்த ஆவியானவரின் முதல் இறக்கத்தின்போது பெந்தெகொஸ்தே நாளன்று உலக சரித்திரத்தில் பதிவு செய்யப்பட்ட நான்கு முக்கிய சம்பவங்கள் என கீழ்கண்டவாறு எழுதுகிறார்.

(அ) பலத்த காற்று வீசும் சத்தம் (முழக்கம்) மேல் அறையில் பரிசுத்த ஆவியானவருக்காக காத்திருந்த அந்த 120 பேர்களும் இயேசு கூறியபடி பரிசுத்த ஆவியானவரால் இன்னும் வரவில்லையே! என்று ஏக்கத்தோடு ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, கர்த்தர் வாக்களித்தபடி ஆவியானவர் வந்துவிட்டார் என்பதை அறிகிறதற்காகத்தான் பலத்த காற்றின் அடையாளம் உண்டானது. காற்று பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளம் என்பதை பழைய ஏற்பாட்டில் காண்கிறோம் என்கிறார். மேலும் பலத்த காற்றின் மூலம் பரிசுத்த ஆவியானவர் இறங்கிவிட்டார் என்பதை இது விளக்குகிறது என்கிறார்.

(ஆ) இடி முழக்கம் போன்ற சத்தம் (இது காற்றோடு சேர்ந்து கேட்டது) பெரும் சத்தம் எப்போதும் ஆட்களை கூட்டிச் சேர்க்க பயன்படும். சிதறடிக்கப்பட்ட யூதர்களையும் மற்றவர்களையும் ஒரிடத்தில் கூட்டி சேர்க்கவும், அவர்கள் மேசியா வந்துவிட்டார் என்ற நற்செய்தியை அறிவிக்கவும் கர்த்தர் அந்த இடிமுழக்கத்தை உண்டாக்கினார். இப்பொழுது காற்றும், சத்தமும் என்னவாயிருக்கும் என்கிற ஆவலில் வீட்டிற்கு முன் அத்தனை யூதர்களும் மற்ற பாஷைக்காரரும் வெளிவந்து கூடினார்கள்.

(இ) அக்கினி மயமான நாவுகள் (flame – சுவாலை) காணப்பட்டது. வீட்டின் முன் ஜனங்கள் கூடி வந்து விட்டார்கள் என அறிந்தவுடன், ஜெபத்தில் நிலை கொண்டிருந்த 120 பேரும் வெளியில் வந்து நின்றார்கள். பரிசுத்த ஆவியானவர் அக்கினி மயமான நெருப்பு சுவாலையோடு 120 பேர்களின் மீதும் இறங்கினார். தீ சுவாலை 120 சீஷர்களின் தலையின் மேல் எரிகிறது. ஆனால் முடி பொசுங்கவில்லை. கர்த்தர் மோசேயுடன் முற்செடி எரியும் காட்சியின் வாயிலாக பேசினார். ஆனால் முற்செடி நெருப்பில் கருகவில்லை என்ற அதிசயத்தை பரிசுத்தர்கள் வாயிலாக கேட்டவர்கள், 120 சீஷர்கள் தலையில் காணும் நெருப்பு சுவாலையை கண்டபோது, இவர்களும் நம் தெய்வத்தை சேர்ந்தவர்கள்தான் என்பதை சுற்றி நின்ற பல பாஷைக்காரர்களும், பல தேசத்தார்களும் உணர முடிந்தது.

(ஈ) ஒருவர் வாயில் வெவ்வேறு பாஷைகள் வெளிப்பட்டு பேசப்பட்டது. இந்த 120 பேரும் கலிலேயர்கள். எபிரேய பாஷை பேசுகிறவர்கள். ஆனால் இந்த 120 பேரும் வெறுமென வாயை திறக்கிறார்கள். அப்பொழுது ஒவ்வொருவர் வாயிலிருந்தும் பலபல பாஷைகள் வெளிவருகிறது. ஒரு பாஷை வெளிவரவில்லை, பல்வேறு பாஷைகள் ஒருவர் வாயிலிருந்து வெளிவருகிறது என்கிறார். மேலும் பேசுகிற இந்த 120 சீஷர்களுக்கும் தங்கள் வாயிலிருந்து வரும் அந்த பாஷையை குறித்து ஒன்றும் தெரியாது. ஆனால் தங்களுக்கு முன்னே கூடிவந்து நிற்கும் யூதர்களும், மற்ற சகல பாஷைகாரர்களுக்கும் சீஷர்கள் பேசியது விளங்கிற்று. அவர்கள் என்னுடைய தாய் பாஷையில் பேசுகிறார்கள் என்றார்கள். மற்ற பாஷைகாரரும் அப்படியே சொன்னார்கள். சகல பாஷைகாரர்களும் நம் ஜென்ம பாஷையில் இந்த கலிலேயர்கள் பேசுவதை கேட்கிறோமே எப்படி? இவர்கள் தேவனுடைய மகத்துவங்களை பேசக்கேட்கிறோமே என்று ஆச்சரியப்பட்டார்கள். தேவனுடைய மகத்துவங்கள் (Mighty miracles of God) என்றால் பிதாக்கள் காலத்தில் கர்த்தர் செய்த அற்புதங்கள், அடையாளங்கள், கர்த்தர் தம் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தது, கடலை இரண்டாக பிளந்து தம் மக்களை விடுவித்தது, தம் மக்களின் எதிரிகளை அந்த கடலில் முழுவதுமாக அழித்தது, வானத்திலிருந்து மன்னாவினால் போஷித்தது, காடை இறைச்சிகளை கொடுத்து சாப்பிட வைத்தது. தாம் நேசிக்கும் மக்களுக்காக எதிரிகளோடு கர்த்தரே யுத்தம் செய்து, ஜெயம் கிடைக்க செய்தது. பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்தில் கொண்டு வந்து சேர்த்தது. வெள்ளத்தினால் உலகம் அனைத்தையும் அழித்தது. அதில் தன்னை நேசித்த குடும்பங்களை மட்டுமே அற்புதமாக காப்பாற்றியது. இன்னும் அநேக விதமான அற்புதங்களையும் கர்த்தர் தம் மக்களுக்கு செய்த மகத்துவங்களையும் சீஷர்கள் வாயினால் அவரவர்களின் பாஷைகளில் பேசி விளக்க வைத்தது. இவைகளைத்தான் அங்கிருந்த பல பாஷைகாரர்கள் கேட்டார்கள்.

18. பேதுரு பேசத்தொடங்கினான். சகோதரர்களே எப்படி இத்தனை பாஷைகளும் ஒருவனுடைய வாயிலிருந்து வெளிவரும்? தலைக்கு மேல் நெருப்பு சுவாலை, பயங்கர காற்று, இடிமுழக்க சத்தம் ஆகிய இவைகள் எல்லாம் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளாகும். நீங்கள் அறிந்திருக்கிறபடி அநேக ஆண்டுகளுக்கு முன்னே யோவேல் தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் அருளிய வாக்குதத்தமான பரிசுத்த ஆவியானவரின் அற்புத கிரியைகளாகும் என்றார். மேலும் இப்பொழுது நீங்கள் காண்கிற இந்த அற்புதங்கள் பிதாவானவர் நம்மை மீட்க அனுப்பிய நசரேனாகிய இயேசு கிறிஸ்துவை கொண்டு தேவன் உங்களுக்குள்ளே அடையாளங்கள் அற்புதங்கள் நடப்பித்து பிதா இயேசுவை மேசியாவாக உங்களுக்கு வெளிப்படுத்தினார். இயேசு நடப்பித்த அற்புத அடையாளங்களை நீங்கள் அறிந்தும், கண்டும் அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாமல், சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். இந்த இயேசுவை பிதாவானவர் உயிரோடு எழுப்பி பரலோகத்தில் தமது வலது பாகத்தில் வீற்றிருக்க செய்தார். அவர் உயிரோடு எழுந்திருந்ததையும், உயிரோடு இருப்பதையும் நேருக்குநேர் பார்த்த நாங்கள் எல்லாரும் சாட்சிகள். நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே நம்முடைய தெய்வம் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று நல்ல ஒரு சுவிசேஷ செய்தியை பிரசங்கித்தான். அந்த பிரசங்கத்தை கேட்ட கூடியிருந்த 16 பாஷைக்காரர்களும் கேட்டு இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக மனந்திரும்பி இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டு, ஞானமான ஆலோசனைகளை பெற்று சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பேதுரு பிரசங்கித்த அந்த முதல் பிரசங்கத்தில் 3000 பேர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். அவர்களை வைத்து தான் முதல் புதிய ஏற்பாடு சபை தொடங்கியது. இயேசு அன்று பேதுருவிடம் கூறியபடி சபைகளை உன் மூலமாக ஸ்தாபிப்பேன் என்ற வார்த்தை நிறைவேறிற்று. இவைகள் யாவும் டாக்டரின் லௌகிக ஞானம். டாக்டர் அவர்கள் தன் ஊழியத்தின் பாதையில் தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறது அறிவுக்கேற்ற வைராக்கியம் அல்ல. ஆனாலும் செய்த, செய்கிற ஊழியத்திற்கான பலனை இங்கு இந்த பூமியிலே அனுபவித்து வருகிறார். தேவபக்திகேதுவான சத்தியத்தை அறியாத இவரது ஊழியத்தை கர்த்தர் எப்படி அங்கீகரிப்பார்? ஆனால் சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். (யோ.16:13) நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது (1யோ.2:27). இவர் சத்தியத்துக்குள் வழிநடத்தப்படவில்லை.

19. இப்பொழுது டாக்டர் எழுதிய மேற்கண்ட அவருடைய சொந்த கருத்துக்களுக்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் உண்டா என்று ஆராய்ந்து பார்ப்போம். அவர் கூறியபடி பெந்தெகொஸ்தே நாளன்று நடந்த சம்பவத்தில் காணப்படும் நான்கு முக்கிய காரியங்களையும், அதற்கு அவர் கொடுத்த விளக்கங்களுக்கும் வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் உண்டா என்று பார்ப்போம்.

(அ)முதலாவது பெந்தெகொஸ்தே நாள் நிறைவாக வந்த போது (Fullycame) 120 சீஷர்களும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் கூடியிருந்தார்கள். அவர்கள் அந்த மேல்வீட்டில் ஒருமனப்பட்டு ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அப்பொழுது என்ன நடந்தது? திடீரென ஒருசத்தம் வானத்திலிருந்து வந்தது. (Suddenly there came a sound from heaven) அது எப்படி காணப்பட்டது? அது அதிக வேகமாக முந்திக்கொண்டு செல்லும் பலத்த காற்றைப்போல் இருந்தது (Like a rushing mighty wind). கவனியுங்கள் காற்று அந்தசத்தத்தை உண்டாக்கவில்லை. மாறாக அந்த சத்தம், அந்த காற்றைப்போல் இருந்தது. நான் சூறாவளி காற்று சுற்றி சுற்றி அடிக்கும்போது பார்த்திருக்கிறேன். உஷ் உஷ் என்ற பலமான சத்தத்துடன் முன்னேறுவதாக காணப்படும். வானத்திலிருந்து வந்த சத்தம் அதே போன்றஉஷ் உஷ் சத்தத்தை உடையதாகவேயிருந்தது. அதன்பின் என்ன நடந்தது? அந்த சத்தம் (உஷ் உஷ் போன்ற சத்தம்). அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. பரிசுத்த ஆவியானவர் இறங்கி அந்த வீடு முழுவதையும் நிரப்பினாரா? இல்லவே இல்லை. மாறாக அந்த சத்தம் அந்த வீட்டை நிரப்பினதேயன்றி, பரிசுத்த ஆவி இறங்கி வந்து அந்த வீட்டை நிரப்பினார் என்று டாக்டர் கூறுவது அவருடைய கற்பனைஆகும். மேலும் அவர் கூறுவது போன்று அங்கு இடிமுழக்கம் ஒன்றும் உண்டாகவில்லை. வேதவாக்கியங்களோடு ஒன்றை கூட்டுவதும் குறைப்பதுமே இவருடைய ஊழியமாக காணப்படுகிறது. ஆக முதலாவது வானத்திலிருந்து பலத்த காற்று அடிப்பது போன்ற ஒரு சத்தம் உண்டாகி, அது 120 பேர் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. பரிசுத்த ஆவி இறங்கி வீடு முழுவதையும் நிரப்பவில்லை. பலத்த காற்று வீசி வீடு முழுவதையும்நிரப்பிற்று. காற்று வீசியது பரிசுத்த ஆவிக்கு அடையாளம் என டாக்டர். புஷ்பராஜ் கூறுவது குருடர்களுக்கு வழிகாட்டும் குருடனுடைய உபதேசமாகும்.

(ஆ) இரண்டாவதாக நன்கு கவனியுங்கள். அக்கினி மயமான நாவுகளை போன்ற பிரிந்திருக்கும் நாவுகள், அதாவது அக்கினி மயமான நாவுகள் அல்ல, அதை போன்று பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டது. அது அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தது. அது அவர்கள் தலையின்மேல் அல்லது தோள்பட்டையின் மேலும், அல்லது சரீரத்தின் எந்த பாகத்தின் மேல் அமர்ந்தது என்று கூறப்படவில்லை. அவர்கள் மேல் அமர்ந்தது என்று மாத்திரமே கூறப்பட்டுள்ளது. அவ்வளவு தான். இந்த சம்பவத்தின் போது 120 பேரும் வெளிவந்து நின்றார்கள் என்பது டாக்டரின் கற்பனை. ஜனங்கள் வெளிவந்து நின்றபோது பரிசுத்த ஆவியானவர் அக்கினி மயமான நெருப்பு சுவாலையோடு 120 பேர்களின் மீதும் இறங்கினார் என பிதற்றுகிறார். 120 பேர் மீதும் அக்கினி மயமான நாவுகள் போன்ற பிரிந்திருக்கும் நாவுகள் அமர்ந்த போது அவர்கள் வீட்டில் தான் இருந்தார்கள். டாக்டர் கூறுவது போன்று அவர்கள் வீட்டை விட்டு வெளியே வந்தபிறகு அக்கினி மயமான நாவுகள் அவர்கள் மேல் வந்து அமரவில்லை. இவருக்கு பணத்திற்காக பல நாடுகளில் உள்ள தமிழ், மளையாள மக்கள் மத்தியில் சுற்றித்திரிந்து, ஜாமக்காரன் வெளியிடுவதற்கு பணம் சேகரிக்கத்தான் போதுமான நேரம் இருக்கிறதேயன்றி வேதவாக்கியங்களை தியானிக்க, ஆராய்ந்து பார்க்க நேரம் இல்லை. இவர் செல்லும் நாடுகளில் எல்லாம் கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை வைத்திருக்கிறார். இவர் சென்றுதான் அங்கு மக்களை வழிநடத்த வேண்டுமென்று தேவையில்லை. அங்கு தேவனுடைய வார்த்தைக்கும், ஊழியர்களுக்கும் பஞ்சமில்லை. இவர் பண வசூல் வேட்டைக்காகவே பல நாடுகளில்

தமிழ் மற்றும் மலையாள மக்கள் மத்தியில், ஏற்கெனவே ஊழியக்காரர்கள் அங்கு இருந்தும், இவர் அங்கு சென்று ஊழியம் செய்து வருகிறார். தேவன் தம்முடைய ஜனங்களை அவரவர்கள் இருக்குமிடத்திலே அவர்களுக்கு அங்கே ஊழியக்காரர்களைக் கொண்டு போஷிக்கிறார். அமெரிக்காவில் உள்ள சபைகளில் மக்களுக்கு போதிக்கவும், மன்னாவினால் போஷிக்கவும் அமெரிக்கர்கள் இருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து சிலர் சென்று அவர்களுக்கு போதிக்க வேண்டுமென்று தேவையில்லை. அவ்வாறாக ஒவ்வொரு நாட்டினருக்கும் ஆங்காங்கு சுவிசேஷகத்தை பிரசிங்கிக்க, சபைகளை பக்திவிருத்தி அடையச்செய்ய தேவன் போதுமான ஊழியக்காரர்களை வைத்திருக்கிறார். இந்தியர்கள் வெளிநாடுகள் செல்கிறார்கள் என்றால் ஊழியத்திற்காக அல்ல, மாறாக பணவேட்டைக்காகவே. நன்கொடைகளும் உதவிகளும் பெறுவதற்காகத்தான். ஆண்டில் ஓரிருமுறை வெளிநாடுகள் சென்று வந்து பணம் சேகரித்து பின் சொந்த நாட்டிலிருந்து கொண்டு மாடு அசை போடுவது போன்று இங்கு ஜீவனம் செய்கிறார்கள். ஆக, இந்நாட்களில் கிறிஸ்தவ ஊழியம் ஒரு பிழைப்புக்கடுத்த தொழிலாக, ஊழியமாக மாறிவிட்டது.

20. அடுத்து இவரது ஜோக்கை கவனியுங்கள். தீ சுவாலை 120 சீஷர்களின் தலையின் மேல் எரிந்துக்கொண்டிருந்ததாம். ஆனால் அவர்கள் தலைமுடி பொசுங்கவில்லையாம். இதற்குகர்த்தர் மோசேயுடன் முட்செடியிலிருந்து பேசியதை எடுத்துக்காட்டுகிறார். ஆனால் அப்.2:3 கூறுவதை கவனியுங்கள். (And there appeared unto them cloven tongues as of fire) கவனியுங்கள்: தீ சுவாலைகள் அல்ல, மாறாக தீ சுவாலை போன்றுபிரிந்திருக்கும் நாக்குகள். அதாவது தீயை போன்று பிரிந்திருக்கும் நாக்குகள் (cloven tongues) அவர்களுக்கு தோன்றி அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தது. அதாவது அக்கினி மயமானதை போன்ற (அக்கினி அல்ல) பிளவுள்ள நாக்கு (நாவு) அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தது. இவரும் அப்.2அதி சம்பவத்தை மற்றவரை போன்று குழப்பியே வருகிறார். சத்திய ஆவி இவரிடத்தில் இல்லாததால் தான் இவர் சத்தியத்தில் வழிநடத்தப்படவில்லை. ஒருவன் சத்தியத்திற்குள் வழிநடத்த அவனுக்குள் சத்திய ஆவி வாசம் பண்ண வேண்டும்.

21. முதலாவது வானத்திலிருந்து ஒருசத்தம். அது பலத்த காற்று அடித்ததினால் உண்டாகும் சத்தம் போல் இருந்தது. அந்த சத்தம் வீடு முழுவதையும் நிரப்பிற்று. அடுத்து பிரிந்திருக்கும் நாக்குகள் அக்கினி மயமான நாவு போன்று காணப்பட்டு 120 பேர் மேலும் வந்து அமர்ந்தது. ஆனால் அது அக்கினியல்ல. இதன்பின்பு அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறார்கள். (Filled with the Holy Ghost) இது என்ன? பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம். மேலும் அப்போஸ்தலர்கள் இயேசுவினிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறுதல் (அப்.1:4,5) இவர்கள் தேவனுடைய மகத்துவங்களை பேசினார்கள். இங்கு இவர்கள் ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே (Other Tongues) பேசினார்கள். அந்நிய பாஷைகளிலே (Unknown Tongue)பேசத் தொடங்கினார்கள்அல்ல.Other Tongues என்று கூறும்போது அங்கு ஒருவர் அறிந்த பாஷையும் உண்டு, அறியாத பாஷையும் உண்டு. எனக்கு தாய்மொழி தமிழ். இதர பாஷைகள் யாவும் நான் அறியாத, இதர பாஷைகளாகினும், இதில் எனக்கு தெரிந்த பாஷைகள் உண்டு. ஆங்கிலம், ஹிந்தி, மளையாளம் இது நான் அறிந்த வெவ்வேறு பாஷைகளாகும். பெந்தெகொஸ்தே நாளன்று நடந்தது என்ன? இதோ பேசுகிறவர்கள் இவர்கள் எல்லாரும் கலிலேயரல்லவா? கலிலேயர் பேச, நாம் நம்மில் அவரவர்களுடைய பாஷையிலே இவர்கள் பேசக்கேட்கிறோமே இது எப்படி? (அப்.2:7-8) இங்கு அந்நிய பாஷை என்று ஒன்றும் இல்லை. அந்நிய பாஷை என்பது வேதப்பூர்வமானதுமல்ல. இது ஒரு பாஷை. பேசுகிறவர்கள் கலிலேயர். (அப்.2:7) இப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேச கேட்கிறோமே. அங்கு தெரியாத பாஷை ஒன்றுமேயில்லை. கேட்டவர்கள் அவரவர்களுக்கு தெரிந்த ஜென்ம பாஷையிலே கேட்டார்கள். நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளில் இவர்கள் பேச கேட்கிறோமே? பேசியவர்கள் அவர்கள் ஜென்ம பாஷையில் தான் பேசினார்கள். கேட்டவர்கள் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் தான் அவர்கள் பேசுகிறதை கேட்டார்கள். தங்களுக்கு புரியாத (Unknown Tongue) பாஷைகளில் அவர்கள் பேச, இவர்கள் கேட்கவில்லை. கலிலேயர்கள் கலிலேய பாஷையில் பேசுகிறதை நாம் அனைவருமே நமது ஜென்ம பாஷையில் கேட்கிறோமே என்றார்கள்.

22. அடுத்து டாக்டருடைய நவீன, ஆதாரமற்ற சாதூரியமான உபதேசத்தை கவனியுங்கள். 120 பேரும் கலிலேயர்கள். எபிபேயர் பாஷை பேசுகிறவர்கள். (Ok) ஆனால் இந்த 120 பேரும் வெறுமென வாயை திறந்தார்கள். ஒவ்வொருவர் வாயிலுமிருந்து பல பாஷைகள் வெளிவந்தனவாம். ஒருவர் வாயிலிருந்து ஒரு பாஷை வெளிவரவில்லை, மாறாக பல்வேறு பாஷைகள் வெளிவந்ததாம். உதாரணமாக பேதுரு ஒரு எபிரேயன். இவன் வாயை திறக்க 17 தேசத்தார் பாஷைகள் இவன் வாயிலிருந்து பற்பல பாஷைகளாக வெளியே வந்தனவாம். என்ன முரண்பாட்டின் வித்து? பேசும் 120 பேருக்கும் அவர்கள் வாயிலிருந்து வரும் பாஷை எத்தேசத்தாருடையது? மேலும் அந்த பாஷை குறித்துஒன்றுமே தெரியாதாம். கவனியுங்கள். சுமார் 17 தேசத்தார், 17 மொழிகளையுடையவர்கள் அங்கு கூடியிருந்தார்கள். இந்த 17 மொழிகளில் அங்கு கூடியிருந்தவர்கள் கேட்க பேசியவர்கள் 120 பேரும் பற்பல பாஷைகளை பேசவேண்டுமா? இந்த 120 பேரில் ஒவ்வொருவரும் இரண்டு பாஷைகளை பேசினார்கள் என்றாலே அவர்கள் பேசின பாஷை சுமார் 240 ஆகும். ஆனால் இங்கு கூடியிருந்தவர்கள் 17 தேசத்தார். 17 தேசத்தார் கேட்க 240 பாஷைகளில் பேச வேண்டுமா? என்ன மடமை? இதற்கு இவர் ஆதாரங்கள் எங்கிருந்து எடுத்தார்? எல்லாம் தன் சொந்த சரக்கு தானா? இவருக்கு இந்த சொந்த சரக்கு எங்கிருந்து வந்தது? பிசாசினிடமிருந்து தான், ஏனென்றால் அவன் தானே பொய்யன், பொய்க்கு பிதாவானவன். சரடு விடுவதிலும் ஒரு லிமிட் வேண்டாமா? இதில் இவருடைய மேதாவித்தனம்தான் காணப்படுகிறது.

23. இங்கு நடந்த காரியம்தான் என்ன? 120 பேரும் கலிலேயர்கள். அவர்கள் அந்நிய பாஷையில் (Unknown Tongue) பேசவில்லை. அவர்கள் கலிலேயர் பாஷையில் தான் பேசினார்கள். அவர்கள் தேவனுடைய மகத்துவத்தை பேசினார்கள். ஆனால் இங்கு கூடிவந்திருந்த 17 தேசத்தாரும் அவர்கள் பேசுவதை தங்கள் ஜென்ம பாஷையில் கேட்டார்கள். அதுதான் காரியம்.ஒரே நேரத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷம் அனைத்து தேசத்தாரருக்கும் சென்றது. 17 தேசத்தார் ஒரே நேரத்தில் சுவிசேஷத்தை தங்கள் தங்கள் ஜென்ம பாஷையிலே கேட்டார்கள். நித்திய சுவிசேஷமானது பூமியில் வாசம் பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரர்களுக்கும், ஜனக்கூட்டத்தார்களும்ஒரே நேரத்தில் கேட்க, அறியத்தக்கதாக இந்த நிகழ்ச்சி நடந்தது. (வெளி.14:6) வாருங்கள் உலக பிரகாரமான ஒருஎடுத்துக்காட்டு: ஐக்கிய நாடுகளின் சபைக்கு வருவோம். இதில் பல தேசத்தார் அங்கத்தினராக உள்ளனர். ஐ.நா. சபையின் பொதுக்கூட்டம் நடக்கிறது. அங்கு ஒருவர் தன் ஜென்ம பாஷையில் பேசுகிறார். அவருக்கு இதர பாஷைகள் எதுவும் தெரியாது. அவர் ஜெர்மனிய பாஷையில் பேசுவதை இதர தேசத்தார் அனைவரும் ஒரே நேரத்தில் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் அவர்கள் கேட்கும்படியாக மொழிபெயர்த்துக்கொடுக்க விஞ்ஞானம் இன்று வளர்ச்சியடைந்துள்ளது. அது போன்ற சம்பவம் தான் அன்று நடந்தது. சீஷர்கள் கலிலேயர். எபிரேயர் பாஷையில் பேசினார்கள், கேட்டவர்கள் அனைவரும் அவரவர்கள் ஜென்ம பாஷையில் கேட்டார்கள். அன்று இது தேவனுடைய மகத்துவம். இன்று நம் மத்தியில் இது விஞ்ஞானத்தின் வளர்ச்சி. அதோடுமட்டுமல்ல அவர்கள் பேதுரு பிரசங்கித்ததை கேட்டார்கள். பேதுரு எபிரேய பாஷையில் பேசினான். அந்த 17 நாட்டினரும் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையிலே கேட்டார்கள். இருதயத்திலே குத்தப்பட்டார்கள், மனந்திரும்பினார்கள், எல்லாரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஏறக்குறைய 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். மேலும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாரருக்கும் அவருடைய நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) பிரசங்கிக்கப்பட்டது. (லூக்.24:47) இயேசு கூறியது நிறைவேறியது. சகோ.சாம்ஜெபத்துரையும், டாக்டர் புஷ்பராஜ் அவர்களும் தேவனுடைய வார்த்தையின் கருத்தை புரிந்துக்கொள்ள முடியவில்லை. அது அவர்களுக்கு தோன்றாமல் மறைபொருளாயிருக்கிறது. (லூக்.9:45)இவர்களுடைய மனக்கண்கள் தேவனால் திறக்கப்படவில்லை. ஆதலால் இவர்கள் ஒன்றையும் அறிந்து புரிந்துக்கொள்ள முடியவில்லை. (லூக்.24:45) சகோ.சாம் ஜெபத்துரை நம் மத்தியில் இல்லை, ஆனாலும் அவர் எழுதிய புத்தகங்கள் நம் மத்தியில் உள்ளது. சகோ.சாம் ஜெபத்துரை தன் இரட்சிப்பை இழந்துவிட்டார். இது வேதபூர்வமானது. அடுத்து டாக்டர்.புஷ்பராஜ் தன் இரட்சிப்பை இழந்து நிற்கிறார். இதுவரை தேவனுடைய பார்வையில் அவர் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. ஆனால் மனுஷர்கள் பார்வையில் இவர் இரட்சிக்கப்பட்ட ஒரு பெரிய ஊழியக்காரர். இதுதான் தேவனுடைய, மனுஷர்களுடைய பார்வையில் காணப்படும் வித்தியாசம். இவர் இன்னும் இரட்சிப்பை தன் உடமையாக்கிக்கொள்ளவில்லை. தன் இருதயத்தை இன்னும் கடினப்படுத்தாவிட்டால் மனம்மாற, மனந்திரும்ப கர்த்தர் இவர்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.

24. டாக்டர். புஷ்பராஜ் தனக்கு அருளப்பட்ட, தன்னிடத்தில் உள்ள லௌகிக ஞானத்தை கொண்டு எழுதும் மேலும் சில காரியங்களை இங்கு தியானிப்போம். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கின்படி போதிக்க வேண்டும், தன் சுயகருத்துக்களை உபதேசங்களாக கொண்டுவரக்கூடாது. காலேப் யோசுவா ஆகிய நானும் எதிலாவது தவறி இருந்தால் அதை எனக்குத் தெரியப்படுத்துங்கள், எனக்கு உபதேசம் பண்ணுங்கள். ஆனால் அது வேதவாக்கியங்களை ஆதாரமாக கொண்டதாக இருக்க வேண்டும். என்னில் நான் மேன்மை பாராட்ட என்னிடம் ஒன்றுமேயில்லை. நான் ஒரு வெறுமையான பாத்திரம். அவர் அதை நிரப்புகிறார். நான் கனிகொடுக்கிறேன்.

(அ) முதல் தம்பதிகள் (ஆதாம், ஏவாள்) மூலமாக மனித பெருக்கம் உண்டாயிற்று. அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டதையும், அது எபிரேயர் மொழி என்பதையும் அறிய முடிந்தது என டாக்டர் எழுதுகிறார். கவனியுங்கள் மோசேயின் மாமன் ஒபால். இந்த ஒபாலின் புத்திரர் கேனியர். இந்த கேனியனான ஏபேர் (Heber). இந்த Heber (Kenite) ல் இருந்துதான் Hebrew என்ற பேர் வந்தது. எபிரேயர் பாஷை ஆபிராம் காலத்திற்கு பிறகுதான் உண்டாயிற்றேயன்றி ஆதாம் ஏவாள் காலத்தில் உண்டானது அல்ல. ஆபிராம் எபிரேயன் என அழைக்கப்பட்டான், ஆதாம் அல்ல. தேவன் ஆதாமோடு பேசினார். ஆனால் எந்த பாஷையில் ஆதாமோடு பேசினாரோ அதே பாஷையில்தான் ஆதாம் ஏவாள் பேசியிருக்க வேண்டும். எபிரேயர் பாஷை ஆபிரகாமுடைய சந்ததியினரால் பேசப்பட்டது. அது யூதர் பாஷையாகும். யூதர்கள் எபிரேயர் என்று அழைக்கப்பட்டார்கள். (எரே.34:8) இந்த வேதப்பூர்வமான ஆதாரங்கள் கொண்டு ஆதாம் ஏவாள் எபிரேயர் பாஷையில் பேசினார்கள் என்பது அடிப்பட்டு போகிறது.

(ஆ) இவர் பரலோகத்தில் கர்த்தரால் வேலைக்காரனாக உண்டாக்கப்பட்ட ஒருவன்தான் பிசாசு என்கிறார். இதுவும் தவறான போதனை. இந்த பிசாசு யார்? இவன் தேவனுடைய பர்வதத்தில் இருந்த காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப். இவன் சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவங்கி இவனில் அநியாயம் கண்டுப்பிடிக்கப்பட்டது மட்டும் தன் வழிகளில் குறையற்றவனாயிருந்தான். (எசே.28:14,15) மேலும் இவன் விசித்திரமாய் செய்யப்பட்ட முத்திரை மோதிரம், ஞானத்தால் நிறைந்தவன், பூரண அழகுள்ளவன். இவனை சகலவித இரத்தினங்களும், பொன்னும் மூடிக்கொண்டிருந்தது. சிருஷ்டிக்கப்பட்ட நாளில் மேள வாத்தியங்களும், நாகசுரங்களும் அவனிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது. (எசே.28:12,13) சமுத்திரத்தின் நடுவே வீற்றிருந்தான். (எசே.28:2) இவன் தானியேலை பார்க்கிலும் ஞானவான், இரகசியமானதொன்றும் இவனுக்கு மறைபொருளல்ல. (எசே.28:3) ஆனாலும் தன் அழகினால் இவனுடைய இருதயம் மேட்டிமை கொண்டது. அவனுடைய மினுக்கினால் தன் ஞானத்தை கெடுத்தான். தரையிலே தள்ளப்பட்டான். (எசே.28:17) ஆக இவனை கர்த்தர் பரலோகத்தில் ஒரு வேலைக்காரனாக சிருஷ்டிக்கவில்லை. இவர் எபி.1:14 யை சரியாக புரிந்துக் கொள்ளவில்லை. பணிவிடை ஆவிகளுக்கும், லூசிபர் சிருஷ்டிக்கப்பட்டதிற்கும் வித்தியாசங்கள் உண்டு. என்னுடைய நிதானிப்பில் தேவன் தூதர்களோடு பேசினார், சாத்தானோடு பேசினார். இது பரலோகத்துக்குரிய பாஷை. அடுத்து தேவன் ஆதாமோடும், ஏவாளோடும் பேசினார்.

இது மனுஷ பாஷையாகும். மனுஷனோடு தேவன் பரலோகத்துக்குரிய பாஷையில் பேச வாய்ப்பில்லை. ஏனென்றால் மனுஷன் பூமிக்குரியவன். ஆக தேவன் ஆதாம் ஏவாளோடு பேசிய மனுஷ பாஷையே ஒரே பாஷையாக பிற்காலங்களில் இருந்து வந்தது.
(இ) திருச்சபை மக்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும் ஏற்பாட்டை இயேசு கிறிஸ்து பிறக்கும் முன்னே பிதா யோவேல் தீர்க்கதரிசி மூலம் முன் அறிவித்தப்படியே சம்பவம் சம்பவிக்க செய்தார். மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று யோவேல் 2:28,29ல் தீர்க்கதரிசி கூறிய வசனத்தின்படியே நிறைவேறியது என்பதும் தவறான போதனை. இதற்கு பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் : அப்பொழுது உங்கள் குமாரரும் (Sons) உங்கள் குமாரத்திகளும் (Daughters) தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் : உங்கள் மூப்பர் (Old Men) சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் (Young Men) தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் (Servants) மேலும், ஊழியக்காரிகள் (Handmaids) மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். (யோவேல் 2:28,29). இது பரிசுத்த ஆவியை குறித்த ஒரு வாக்குத்தத்தம் (The Promise of the Holy Spirit) இது பெந்தெகொஸ்தே நாளன்று நிறைவேறியது (அப்.2:16) இங்கு நீங்கள் நன்கு கவனித்தீர்கள் என்றால் இங்கு ஊழியக்காரர் (Servants), ஊழியக்காரிகள் (Handmaids), சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் ஊழியக்கரார்களையும், ஊழியக்காரிகளையும் குறித்து கூறப்படவில்லை. மாறாக வீட்டில் பணிபுரியும் வேலையாளையும், வேலைக்காரிகளையும் குறித்தே கூறப்பட்டுள்ளது. ஒரு Handmaid என்பது சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் ஒரு பெண் அல்ல. ஆதலால் ஊழியக்காரிகள் மீதும் (வீட்டு வேலை செய்யும் வேலைக்காரிகள் மீது) பரிசுத்த ஆவி ஊற்றப்படுவது கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க என்பது ஒரு கபடமான உபதேசம். நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்பதன் நிறைவேறுதலாகும்.

25. இதிலிருந்து திருச்சபை மக்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் ஏற்பாட்டை பிதா யோவேல் தீர்க்கதரிசி மூலம் முன் அறிவித்து சம்பவிக்க செய்தார் என்பது தவறு. மாறாக இது மாம்சமான யாவர் மேலும் பெந்தெகொஸ்தே சம்பவத்திற்கு பிறகு, பேதுரு பிரசங்கித்த பிறகு, விசுவாசிகள் மாறுபாடுள்ள சந்ததிகளை விட்டு, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெற்றபிறகு, இவ்வாறாக இரட்சிக்கப்படுகிறவர்களைத்தான் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். அப்பொழுதுதான் சபை ஆரம்பமானது. (அப்.2:38, 40, 47) ஆக திருச்சபை மக்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்கும் (யோவேல்.2:28,29); இவ்வாறாக இரட்சிக்கப்படுகிறவர்களை அநுதினமும் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என்பது இரு வித்தியாசமான சம்பவங்கள், நிகழ்ச்சிகள். யோவேல்.2:28,29 வுடன் அப்.2:37,40,47 யை இணைக்க கூடாது.

26. மேலும் இவர் தன் மனம்போன போக்கில் தேவஆவியினால் ஏவப்பட்டு தேவனுடைய மனிதர்கள் எழுதிய வேதவாக்கியங்களை கூட்டுகிறார், குறைக்கிறார். பாருங்கள் பிதா யோவேல் தீர்க்கதரிசி மூலம் முன் அறிவித்தபடியே என எழுதுகிறார். இங்கு பிதா என்ற வார்த்தை வேதவாக்கியங்களில் உள்ளதா? நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவர் என்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லை (யோவேல்.2:27) என்று கூறியவர்தான் யோவேல் 2:28-32 வரை கூறினார். பிதா முன்னறிவித்தார் என்பது பிசாசின் வேலை. பிசாசின் வேலையைத்தான் டாக்டர் புஷ்பராஜ் செய்துவருகிறார். அப்படியானால் அவர் செய்து வரும் ஊழியங்கள் குறித்து என்ன? தேவசித்தத்திற்கு புரம்பாக, அவருக்கென்று ஒரு ஊழியத்தை செய்து வருகிறார். அதற்குரிய பலனை இம்மையில் அனுபவித்தும் வருகிறார்.இவர்இந்த பூமியில் தன் பிரயாசத்திற்குரிய பலனை பெற்றும், அனுபவித்தும், சுகமாக வாழ்ந்தும் வருகிறார். மறுமையில் இவருடைய பலன் என்ன? அவர் சிந்தித்து செயல்பட வேண்டிய நேரம் இது.

27. நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று ஒரு சுவிசேஷ செய்தியை பேதுரு பிரசங்கித்தார் என எழுதுகிறார். Ok. நல்லது. ஆனால் அதன்பின் நடந்ததை மூடி மறைத்து தனக்கு சாதகமாக தேவனுடைய வார்த்தையை கூட்டியும், குறைத்தும் எழுதுகிறாரே? தேவனுடைய ஆவியை உடையவன் அப்படி எழுத மாட்டானே? ஆம், இல்லை என்று தானே எழுதுவான். அந்த பிரசங்கத்தை அங்கு கூடியிருந்த 16 பாஷைக்காரர்களும் கேட்டு இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக மனந்திரும்பி, இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டு இனி நாங்கள் என்ன செய்ய வேண்டும் என கேட்டு, ஞானஸ்நான ஆலோசனை பெற்று, சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அன்று பேதுரு பிரசங்கித்த முதல் பிரசங்கத்தில் 3000 பேர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். முதல் புதிய ஏற்பாடு சபை தொடங்கப்பட்டது என எழுதுவதோடு மாத்திரமல்ல. இயேசு அன்று பேதுருவிடம் கூறியபடி சபையை உன் மூலமாக ஸ்தாபிப்பேன் என்ற வார்த்தை நிறைவேறியது என்கிறார். என்ன மாய்மாலம்? இவர் தேவனுடைய வார்த்தையை புரட்டுவதில் ஓயமாட்டார் என தெரிகிறது. சாத்தான் இவருக்கு ஒரு பேர் பிரஸ்தாபத்தைக் கொடுத்து இவர் மூலமாக சபைமக்களை ஏமாற்றுகிறான். ஞானஸ்நான ஆலோசனை என்ன என்பதை இவர் கூறவில்லை. அதுதானே ஒருவனுடைய இரட்சிப்புக்கு முக்கியம். அதை மறைத்து விட்டது ஏன்? கர்த்தர் தம்முடைய சபையில் சேர்த்துக் கொண்டதுஞானஸ்நான ஆலோசனை பெற்றவர்களையா? அல்லது ஞானஸ்நானம் பெற்றவர்களையா? டாக்டர் அவர்களே இதற்கு பதில் கூறுங்கள். ஏவாளை சாத்தான் வஞ்சித்தது போல நீங்களும் சபை மக்களை வஞ்சிக்கிறீர்களே. சகோ.மோகன்சிலாசரசும் இந்த வஞ்சிப்பைத்தான் செய்கிறார்.நீங்கள் இருவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். கொஞ்சம் கடினமாகத்தான் எழுதுகிறேன். ஆனால் அதற்கு நிர்பந்தப்படுத்தப்படுகிறேன், ஆவியானவரால் தூண்டப்படுகிறேன். ஏனென்றால் இருவரும் ஞானஸ்நானத்திற்கடுத்த காரியத்தில் அப்.2:38ல் பாதியை வாசித்து பாதியை விழுங்கி மாய்மாலம்

பண்ணுகிறார்கள். அப்.2:38 யை முழுவதுமாக வாசிக்க ஏன் மனமில்லை இந்த மாய்மாலகாரர்களுக்கு? சாத்தான் உங்கள் வாயை அடைத்தானோ? உங்கள் இருவருக்கும் ஊழியங்கள் ஒரு கேடாகத்தான் தெரிகிறது.

28. ஞானஸ்நான ஆலோசனை என்ன? இதை பேதுருவின் பிரசங்கத்தை அவர்கள் (யார்-17 தேசத்தார்) கேட்ட பொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும், மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து – சகோதரர்களே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். (பாருங்கள் அவர்கள் ஆலோசனை கேட்கிறார்கள்) இப்பொழுது பேதுரு ஆலோசனை கொடுப்பதை பாருங்கள். பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றான். பரலோக ராஜியத்தின் திறவுகோல்களை பேதுரு பெற்றிருந்தான். (மத்.16:19) அதாவது பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கான திறவுகோல்களை பெற்றிருந்தான். பெந்தெகொஸ்தே நாளில் பேசுவதற்கு அதிகாரம் பெற்றிருந்தான். ஏனென்றால் அவன்தான் பரலோக ராஜ்ஜியத்திற்குரிய, பரிசுத்த ஆவியை பெருவதற்குரிய திறவுகோல்களை உடையவனாக இருந்தான். அவன் தன்னிடமிருந்த திறவுகோலையை (அப்.2:38) கொண்டு திறந்தான். ஆனால் மக்களை பரலோக ராஜியத்தில் பிரவேசிக்க விடாதபடிக்கு, இந்த இரு கள்ளகபடமுள்ள வேலையாட்கள் அப்.2:38 ல் சொல்லப்பட்ட தேவ ஆலோசனைகளை, திறவுகோல்களை மறைத்து மக்களை திசை திருப்புகிறார்கள். உங்களுக்குரிய ஆக்கினை உங்களுக்காகவே காத்திருக்கிறது. குருடர்களுக்கு வழிகாட்டும் குருடர்களே உங்களுக்கு ஐயோ!

29. அடுத்து டாக்டர் அன்று இயேசு பேதுருவிடம் கூறியபடி சபையை உன்மூலமாக ஸ்தாபிப்பேன் என்ற வார்த்தை நிறைவேறியது என போதிக்கிறார். இயேசு இவ்வாறாக கூறியதாக வேதவாக்கியங்களில் எங்கும் காணப்படவில்லை. இந்த மனுஷனுடைய உபதேசத்தைநம்பி மக்கள் மாண்டு போனார்களே,போகிறார்களேயன்றி இரட்சிக்கப்பட்டதாக தெரியவில்லை. பாதாளத்தை நோக்கி வீரநடை நீங்கள் போடுவது மட்டுமின்றி மற்றவர்களையும் இழுத்து செல்வதுதான் பரிதாபமாக இருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். இன்று கிறிஸ்தவ சமுதாயத்தில் வேதவாக்கியங்களுக்கு புறம்பாக போதிக்கும் மோசம்போக்கும் இப்படிபட்ட மோசடிகாரர்களை மக்களால் அடையாளம் கண்டுக்கொள்ளப்படவில்லையே, இதுதான் பரிதாபமாக தெரிகிறது. இப்பொழுது கவனியுங்கள், இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என கேட்டார். அதற்கு அவர்கள் சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறுசிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக : நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி : யோனாவின் குமாரனாகிய சீமோனே : நீ பாக்கியவான் : மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்தில் இருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார், மேலும் நான் உனக்கு சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், இந்த கல்லின் மேல் என் சபையை கட்டுவேன் ; பாதாளத்தின் வாசல்கள் இதை மேற்கொள்வதில்லை. பரலோகத்தின் திறவுகோல்களை நான் உனக்கு தருவேன் ; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது ஏதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். (மத்.16:13-19) கவனியுங்கள்: நான் உனக்குத் தருவேன் என்றார். அதன்படி பெந்தெகொஸ்தே நாளன்று பரலோகத்தின் திறவு கோல்களை(அப்2:38)கொடுத்தார். அல்லேலூயா! இந்த திறவுகோலுக்கடுத்த காரியத்தில் மற்ற அப்போஸ்தலர்களுக்கு பங்கோ பாத்தியமோ எதுவும் கிடையாது. மாறாக இது பேதுருவுக்கடுத்த காரியமாகவே இருந்தது. மேலும் இந்த சம்பவம் பஸ்கா பண்டிகைக்குப் பின் வந்த 50வது நாளான சீலான் மாதம் 6ம் தேதி, ஆங்கில மாதம் மே 29ம் தேதி பெந்தெகொஸ்தே நாளன்று காலையில் ஒன்பது மணிக்கு(பொழுது முடிந்து மூன்றாம் மணி வேளை) நிகழ்ந்தன என சகோ. அ. பெஞ்சமின் தனது வெளியீடு **திறந்த வாசல்** புத்தகத்தில் எழுதியுள்ளார். மேலும் இவர் மத்.28:19ல் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் **நாமத்தினாலே** அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள் என்றார் இயேசு. இந்த **நாமத்தினாலே**என்ற மர்ம முடிச்சை, மர்ம கட்டை போதுரு நீங்கள் மனந்திரும்பி, எல்லோரும், பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே(கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறி, அந்தக் கட்டை பூமியிலே அவிழ்த்தான். அது பரலோகத்துக்கு வாசலைத் திறந்தது என்று எழுதுகிறார். அன்றையத் தினம் 3,000 பேருக்கு பரலோகத்தின் வாசல் திறந்து கொடுக்கப்பட்டது. அதாவது 3,000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். பூலோகத்திலே நீ கட்டவிழ்த்ததெதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும். இதை கண் திறக்கப்பட்ட அட்வெந்து திருச்சபையைச் சார்ந்தவர் எழுதுகிறார். இவர் எழுதியுள்ள புத்தகத்தில் எனக்கு அநேக காரியங்களில் ஒருமனப்பாடு கிடையாது. ஆனாலும் திறவு கோலுக்கடுத்த காரியத்தை வரவேற்கிறேன்.

30. இங்கு இயேசு எங்கும் பேதுருவை நோக்கி: என் சபையை உன் மேல் ஸ்தாபிப்பேன் என்று கூறவேயில்லை. இது டாக்டர் புஷ்பராஜ் அவர்களின் அதிக பிரசங்கித்தனம் அல்லது இல்லாத ஒன்றை இருப்பதாக கூறுவது. கவனியுங்கள் இயேசுவை குறித்து பலர் பலவிதமாக அந்நாட்களிலும் சொன்னார்கள். இந்நாட்களிலும் சொல்லி வருகிறார்கள். சிலர் தேவத்துவத்தின் மூவர் உண்டு. அதில் இரண்டாவது நபர் இயேசு என்கிறார்கள். சிலர் அவர் தேவகுமாரன், பிதாவின் குமாரன், பிதாவுக்கு கீழானவர் என்று அவரவர் அறிந்ததை தங்கள் தங்கள் மனம்போன போக்கில் கூறுகிறார்கள். அந்நாட்களில் இவர் யோவான் ஸ்நானன் என்றும், எலியா என்றும், எரேமியா என்றும் சொன்னார்கள். ஆனால் பேதுரு அப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று கூறாமல், நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். அப்பொழுது இயேசு மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்தில் உள்ள என் பிதா உனக்கு இதை வெளிப்படுத்தினார் என்றார். அவர்கள்

தங்கள் மாம்ச, இரத்தத்தினாலே என்னை எலிசா, எரேமியா, யோவான் ஸ்நானன் என்றார்கள். ஆனால் நான் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற வெளிப்பாட்டை பிதா உனக்கு வெளிப்படுத்தினார். இந்த கல்லின்மேல் என் சபையை கட்டுவேன் என்றார். பேதுருவின் மேல் தேவன் தம்முடைய சபையை கட்டுவேன் என்று கூறவில்லை. மாறாக அவன் பெற்ற வெளிப்பாடாகிய அந்த கல்லின்மேல் என் சபையை கட்டுவேன் என்றார். ஆம், இயேசு யார் என்கிற அந்த வெளிப்பாட்டின்மேல், பிதா யார், குமாரன் யார், பரிசுத்த ஆவி யார் என்கிற வெளிப்பாட்டின்மேல் தமது சபையை கட்டுவேன் என்று கூறினாரேயன்றி பேதுருவின் மேல் அல்ல. இந்த வெளிப்பாடு, மேதைகள், கல்விமான்கள், ஞானிகள் இவர்களுக்கு வெளிப்படுத்தப்படாமல் அதாவது ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஆக பேதுரு பெற்ற வெளிப்பாட்டின்மேல் தான் இயேசு தன் சபையை கட்டினாரேயன்றி பேதுருவின்மேல் அல்ல. பரிசுத்த வேதாகமம் தன்னில் தானே அநேக வெளிப்பாடுகளை கொண்ட ஒரு புத்தகம். தேவன் எவனுக்கு தன்னை வெளிப்படுத்த சித்தம் கொண்டுள்ளாரோ அவனுக்கே வெளிப்படுத்துகிறார். அனைவருக்கும் அல்ல. ஆதலால் வேதவாக்கியங்களை அனைவரும் அறிந்துக்கொள்ள முடியாது. 10 என்ன 100 முறை படித்தாலும் அறிந்துக் கொள்ள முடியாது. தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும் (தீத்.1:3) அனைவருக்குமல்ல.

31. பொதுவாக டாக்டர் புஷ்பராஜ், சகோ.மோகன்சிலாசரஸ், சகோ.ஜெகன் போன்றவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்கிறார்கள். நல்லது. ஆனால் அவரை விசுவாசிக்கும் இவர்கள் அவருடைய நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) பாவமன்னிப்பை பெற்றார்களா? (அப்.10:43) பாவமன்னிப்பின் நிச்சயத்தை, அனுபவத்தை பெறாத, இந்த பாவிகளிடம் கர்த்தர் எப்படி இடைப்பட்டு தம்முடைய ஊழியத்தை இவர்களுக்கு ஒப்புக்கொடுப்பார்? ஆக இவர்கள் தேவசித்தத்திற்கு புறம்பாக, அவர்களுக்கென்று ஒரு ஊழியம் செய்வதால் வார்த்தையின் கருத்துக்களை புரிந்துக்கொள்ள முடியவில்லை. கர்த்தாவே, கர்த்தாவே; அல்லேலூயா, ஸ்தோத்திரம் என்ற ஆர்ப்பரிப்பு. ஆனால் அக்கிரம செய்கைக்காரர்களே நான் உங்களை அறியேன் என்ற பதில் உண்டாகும். அதுதான் இவர்கள் முடிவு. இது என்னுடைய தீர்ப்பு அல்ல. மாறாக தேவனுடைய வார்த்தை இந்த தீர்ப்பை கூறுகிறது. நாம் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். தியானியுங்கள் மத் 7:22,23

32. இங்கு சற்று கவனியுங்கள். இயேசு சொன்னது : பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். பிதா தவிர வேறு ஒருவனும் குமாரனை அறியான். குமாரனும், குமாரன் எவனுக்கு பிதாவை வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான். (மத்.11:25-27) இந்த இரு வசனங்களையும் நன்கு தியானியுங்கள். ஒருவனுக்கு பிதா யார் என குமாரன் வெளிப்படுத்த வேண்டும். அதுபோன்று ஒருவனுக்கு குமாரன் யார் என்று பிதா வெளிப்படுத்த வேண்டும். குமாரன் யார் என்கிற வெளிப்பாட்டை பேதுரு பிதாவிடமிருந்து பெற்றான். (மத்.16:17) அடுத்து குமாரன் பிதா யாரென்று ஒருவனுக்கு வெளிப்படுத்த வேண்டும். இயேசு : என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் (Known), அவரை கண்டும் (Seen) இருக்கிறீர்கள் என்றார். பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே பிதாவை எங்களுக்கு காண்பியும், அது எங்களுக்கு போதும் என்றான். இது பிலிப்புவின் ஒரு சரியான நியாயமான கோரிக்கையாக இருந்தது. அதற்கு இயேசு பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும், நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன், பிதாவை கண்டான். இப்படியிருக்க பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று எப்படிசொல்லுகிறாய் என்றார். நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள் என்றார். (யோ.14:6-11) என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரை காண்கிறான் என்றார்(யோ12:45). கவனித்தீர்களா? இங்கு குமாரன்,பிதா யார் என்றுபிலிப்புக்கு வெளிப்படுத்துகிறார். இந்த வெளிப்பாட்டின்மேல் தேவன் தம்முடைய சபையை கட்டுகிறார். பெந்தெகொஸ்தே நாளன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று பாவமன்னிப்பை பெற்ற ஏறக்குறைய 3000 பேரை மற்றும் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார். (அப்.2:37-47)அதன்படி பார்த்தால் சகோ.சாம்ஜெபத்துரையோ தன் இரட்சிப்பை இழந்துவிட்டார். டாக்டர் அவர்களே உங்கள் இரட்சிப்பு மிக அருகில் இருக்கிறது, நீங்கள் உங்கள் ஓட்டத்தை ஓடி முடிக்கும் முன் இந்த இரட்சிப்பை பெற்றுக்கொள்ளுங்கள், பற்றிக்கொள்ளுங்கள்.இதுவேஉங்களுக்கு, உங்களது செப்டம்பர்,2020 ஜாமக்காரனைப் பார்த்த பிறகு என் ஆலோசனை.

33. இப்பொழுது யூதர்கள் : இவர் கல்லாதவராகயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள். (யோ.7:15) பேதுருவும், யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்கள் என்றும், பேதைமையுள்ளவர்கள் என்றும் அறிந்திருந்தபடியினால் ஆச்சரியப்பட்டார்கள். (அப்.4:13) இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? கல்வி ஒருவனுடைய ஊழிய அழைப்புக்கு ஒரு தகுதியல்ல. கல்வி அறிவு இல்லாதவர்கள் உலகத்தை கலக்குகிறவர்களாயிருந்தார்கள் (அப்.17:6) இன்று ஊழியம் செய்கிறதற்கு டாக்டர் பட்டம், கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்ற B.Th, M.Th போன்ற கணக்கில் அடங்கா பட்டங்கள், இன்னும் தலைமை போதகர், பிரதம பேராயர், பேராயர் போன்ற பதவிகள் M.A., M.Sc., M.Phil, M.E., போன்ற உலகப்பிரகாரமான கல்லூரி பட்டங்கள் தேவைப்படுகிறது. அநேகர் இப்படிப்பட்ட பட்டங்களையும் பதவிகளையும் கொண்டு தங்களை கிறிஸ்துவின் ஊழியக்காரன் என அலங்கரித்துக்கொள்கிறார்கள். தேவன் ஒரு மனிதனை தம்முடைய பணிக்கு மேற்கூறிய பட்டங்களையும், பதவிகளையும் கொண்ட ஒரு நபரை அழைப்பதேயில்லை. அதாவது தேவன் உன்னை ஒரு தகுதியோடு ஊழியத்திற்கு அழைப்பதில்லை. மாறாக உன்னை வெறுமையாய் அழைத்து, அழைத்த ஊழியத்திற்கென அவர் உன்னை தகுதிபடுத்துகிறார். வெறும் பாண்டத்தை அவர் நிரப்புகிறார்,

உபயோகப்படுத்துகிறார். ஆனால் தேவனால் அழைக்கப்பட்டவர்கள் படிப்பறியாதவர்களாகத்தான் இருந்தார்கள். இவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டு போவதில்லை என்று ஏசாயா.35:8ல் காண்கிறோம். இவர்களை யாரும் வஞ்சிக்க முடியாது. இவர்களை யாரும் திசைதிருப்ப முடியாது. ஏனென்றால் தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவு, பிதா குமாரன், பரிசுத்த ஆவியை அறிகிற அறிவுயாவும் ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. (மத்.11:25) இந்த பட்டதாரிகள் தங்கள் இருதயத்தில், தங்கள் வெளி வேஷத்தில் மேன்மை பாராட்டுகிறார்கள். இவர்கள் பாவமன்னிக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பாவமன்னிப்பை பெறாது, ஞானஸ்நானம் பெறாது, தங்கள் பாரம்பரிய மனம்போன போக்கில் போய் பாவங்கள் போக்க கழுவப்படாதபடி இருதயத்தின் கடினத்தின் நிமித்தம் தங்களை கடினப்படுத்திக்கொண்டார்கள். பாருங்கள் நான் டாக்டர், நான் பிஷப்,(சுமார் 8 பிஷப்கள் அவர்கள் சார்ந்திருக்கும் சபையின் சொத்துக்களை கொள்ளையடித்ததாக ஜாமக்காரன் செப்டம்பர் 2020 இதழில் வாசித்தேன்) நான் தலைமை போதகர் போன்றவை. பவுல் தன் படிப்பை பட்டத்தையெல்லாம் உதறி தள்ளிவிட்டு, கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் தன் படிப்பு, தன் அந்தஸ்து அனைத்தையும் நஷ்டம் என்று விட்டான். அவைகளை குப்பை என்று எண்ணினான். (பிலி.3:11) ஆக சத்தியத்தை அறிகிற அறிவு படித்த பட்டதாரிகளுக்கு அல்ல. ஆதலால் இவர்களை நம்பி மோசம் போகாதீர்கள்.Rev, Dr, D.Minபோன்ற பதவிகள், பட்டங்கள் அனைத்தும் குப்பையில் போடவே தகுதியானது. ஆதலால் எனக்குப் பிரியமான சகோதரன். வால்டர் ஜெயபாலன் அவர்களே உங்கள் கல்வி, பட்டம், பதவிகளில் மமதை வேண்டாம்.

34. டாக்டர்.புஷ்பராஜ் அவர்களின் ஆலோசனைகளில் சில: இவர் இந்நாட்களில் வேதஆராய்ச்சி செய்வதாக மார்ச்.2020 இதழ் மூலமாக அறியவந்தேன். வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2தீமோ.3:16) அதாவது ஆதி1:1 முதல் வெளி.22:21 வரை எழுதப்பட்டுள்ளவைகள் அனைத்தும் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேத வாக்கியங்களை ஆராய்ச்சி செய்யும் அளவுக்கு டாக்டருக்கு அறிவும், புத்தியும், ஞானமும் எங்கிருந்து வந்தது? பிரியமானவர்களே, தேவனுடைய வார்த்தைகளை ஆராய்ச்சி செய்வது பிசாசு. இவர் ஆராய்ச்சியின் பேரில் மக்களை திசை திருப்புகிறார். இவருடைய ஆராய்ச்சிகளில் ஒன்று: ஸ்திரீயே கேள் : நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதை புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள். இதை தேவன் அறிவார். (ஆதி.3:5) ஆனால் தேவனுடைய கட்டளை என்ன? அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய். (ஆதி.2:17) ஆக தேவனுடைய கட்டளையை சாத்தான் ஆராய்ச்சி செய்து,டாக்டர் பட்டம் பெற்று, அந்த ஆராய்ச்சியின் முடிவு என்ன என்பதை ஏவாளுக்கு கற்றுக்கொடுத்தான். அவனுடைய ஆராய்ச்சியின் முடிவு:விலக்கப்பட்ட கனிகள் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதாயும் இருந்தது என்பதாகும். ஆனால் அந்த ஆராய்ச்சியின் பலன் மரணம். இதுபோன்று தான் நமது டாக்டரின் மருந்து சீட்டு. அவர் எழுதி தரும் மருந்து சீட்டை வாங்கி மருந்துக்களை சாப்பிட்டால் அது மரணத்தைத்தான் நமக்கு கொண்டுவரும். பிரியமானவர்களே ஒருவனும் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய முடியாது. முடியவே முடியாது. பூமியில் எவனுக்கும் அந்த தகுதியில்லை. ஒரேயொரு வழி. அது நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து பார்க்கலாம். பெரோயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள்.(அப்.17:11) நீங்களும் நானும் இதைத்தான் செய்யக்கூடும். ஆதலால் டாக்டர் புஷ்பராஜ் அவர்களின் ஆராய்ச்சி குப்பையில் போடுவதற்குதான் தகுதியானது. இப்பொழுது இவருடைய ஆராய்ச்சியின் அடிப்படையில் இவரது ஆலோசனைகளை கவனியுங்கள்.

(அ) நீங்கள் மனந்திரும்பாதவர்களாகயிருந்தாலோ, வேதபுத்தகத்தை கிரமமாக வாசிக்காதவர்களாகயிருந்தாலோ, நான் (டாக்டர் புஷ்பராஜ்) எழுதிவரும் அந்நிய பாஷையை குறித்தும், பரிசுத்த ஆவியானவரின் கிரியை குறித்தும் உங்களுக்கு நிச்சயம் விளங்காது என்கிறார்.

(ஆ) இதை விசுவாசிக்கும் நீங்கள் தலைமை பாஸ்டராக, பிஷப்களாக, உலக பிரசத்தி பெற்ற பிரசங்கியாக இருந்தாலும், மனந்திரும்புதலின் அனுபவம் இல்லாமல் இருந்தால், நான் எழுதும் அந்நிய பாஷை குறித்து விளங்கிக்கொள்ள முடியாது. **அதாவது அந்நிய பாஷை குறித்து அறிந்துக்கொள்ள மனந்திரும்புதல், வேதபுத்தகத்தை கிரமமாக படித்தல் தேவைஎன்கிறார்.**

(இ) வேதாகம கல்லூரியில் உயர்ந்த பட்டங்கள் பெற்றிருந்தாலும் அல்லது அதில் ஆசிரியராக அல்லது புரப்பசராக இருந்தாலும் உங்களில் மனந்திரும்புதல் அனுபவம் இல்லாமல் போனால் நான் எழுதும் அந்நிய பாஷை விளக்கத்தை உங்களால் விளக்கிக்கொள்ள முடியாது என்பதை முதலில் நீங்கள் அறிய வேண்டும் என்கிறார்.

(ஈ) அப்படியே ஊழியர் அல்லது விசுவாசிகளாகயிருந்தாலும் சுகம் அளிக்கும் வரம் பெற்றவனாகயிருந்தாலும் பல வருடங்கள் சபை மக்களை அபிஷேகத்தின் வழி நடத்துகிறேன் என்றாலும் நீங்கள் மனந்திரும்புதல் இல்லாமல் அந்நிய பாஷை விளக்கத்தை விளங்கிக்கொள்ள இயலாது என்கிறார்.

(உ) சரியாக மனம் திரும்புதலின் அனுபவம் பெறாதவர்கள் அந்நிய பாஷை குறித்து கற்பிக்க, பேச, விமர்சனம் செய்ய தகுதியற்றவர்கள் ஆவார்கள் என்கிறார்.

மேற்கண்டவாறு டாக்டர் புஷ்பராஜ், செப்டம்பர் 2019 ஜாமக்காரன் வெளியீட்டில் அந்நிய பாஷை குழப்பம் (1ல்) மூன்றாவது பக்கத்தில் நான் எழுதப்போகும் விஷயம் என்ற தலைப்பில் எழுதியுள்ளார். இவர் ஜாமக்காரன் வெளியீட்டின் ஸ்தாபகர் மற்றும் ஆசிரியர்.

35. இந்த ஐந்து காரியங்களும் இவருடைய ஊழிய அனுபவத்தில் தோன்றிய சுயக்கருத்துக்களேயன்றி இதற்கு வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. சாத்தான் இவருடைய பேர்பிரஸ்தாபத்தைக்கொண்டு

இப்படிப்பட்ட உபதேசங்களினால் விசுவாசிகளை திசைதிருப்புகிறான். ஆனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை இவர் வஞ்சிக்க முடியாது.

36. **மனந்திரும்புதலுக்கும் அந்நிய பாஷைக்கும் உள்ள சம்பந்தம் என்ன?**
நாம் எல்லோரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளை செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களை போலே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிருபையினாலே இரட்சித்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டோம். இது தேவனுடைய ஈவு. இது ஒருவன் மேன்மை பாராட்டாதபடிக்கு அவனுடைய கிரியைகளினால் உண்டானது அல்ல. (தியானியுங்கள். எபே.2:1-9) ஆக தேவன் நமக்கு அருளும் இந்த இரட்சிப்பை பெற்றுக்கொள்ளுவதற்கு முதற்படி மனந்திரும்புதலாகும்.
(அ) இப்பொழுது மனந்திரும்புதல் குறித்து கவனியுங்கள். ஒருவன் தான் செய்த பாவத்தை பற்றிய குற்ற உணர்வை பெறாமல் மனந்திரும்ப முடியாது. பாவம் விசுவாசித்தினாலே வராத யாவுமாகும். (ரோ.14:23)வெறுமென பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு மனந்திரும்புதல் அல்ல. குற்ற உணர்வை பெறும் எல்லோரும் மனம் திரும்பினதும் கிடையாது. பாருங்கள் பவுல் நீதியையும், இச்சை அடக்கத்தையும் இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து பேலிக்ஸிடம் பேசுகையில் அவன் குற்ற உணர்வு அடைந்தான். ஆனால் அவன் மனந்திரும்பவில்லை. இப்பொழுது நீ போகலாம். எனக்கு சமயமானபோது உன்னை அழைப்பேன் என்றான்(அப்24:25).
(ஆ) நல்ல மனிதனாக வாழ்வது அல்லது அதற்கு முயற்சி செய்வது மனந்திரும்புதல் அல்ல. இது அவர்கள் தங்கள் சொந்த பலத்தில் முயற்சி பண்ணுகிறார்கள். சுய முயற்சியானது சுய நீதியே. இந்த சுய நீதியேஒருவன் தன் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டியதின் அவசியத்தை மறுக்கிறது. பரிசேயனை பாருங்கள். இந்த ஆயக்காரனைப்போல் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தின் இரண்டு தரம் உபவாசிக்கிறேன். காணிக்கை மற்றும் தசம பாகம் செலுத்துகிறேன். வாரத்தின் முதல் நாள் ஆராதனைக்கு செல்லுகிறேன். தான தர்மம் செய்கிறேன். ஆம் தன் சுயநீதியில் பெருமைபடுகிறார்கள். இது மனம் திரும்பின வாழ்க்கையல்ல.
(இ) வெறுமெனே வேதவாக்கியங்களை நன்கு அறிந்து வைத்திருக்கிறேன். ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளை நன்கு அறிந்து வைத்திருக்கிறேன். இரண்டையும் அநுதினமும் பல மணிக்கணக்கில் தியானிக்கிறேன். ஆவிக்குரிய புத்தகங்களை படிக்கிறேன், மொழிப்பெயர்க்கிறேன், வெளியிடுகிறேன். இதெல்லாம் ஒருவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறான் என்பதற்கு ஆதாரமாகயில்லை.

37. ஆக மனந்திரும்புதல் ஒருவன் தனக்குள்ளே செய்த பழைய பாவங்களை குறித்து வருத்தப்பட்டு, மனஸ்தாபப்பட்டு, தேவனிடத்தில் அறிக்கை செய்து வருத்தத்தை தெரிவிப்பதாகும். அதாவது தன் அக்கிரமத்தை மறைக்காமல் பாவத்தை அறிக்கை செய்து மீறுதல்களை கர்த்தருக்கு அறிக்கையிட்டு தேவனை நோக்கி திரும்பி தேவனே என் பாவத்தின் தோஷத்தை மன்னியும் என்பதாகும். (சங்.51:1-4, சங்.32:5, நீதி. 28:13) ஒருவன் தான் செய்த எல்லா பொல்லாப்பின் நிமித்தம் தன்னை தானே அருவருக்க வேண்டும். (எசே.20:43) ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாக வாங்கியதுண்டானால் நாலத்தனையாய் திரும்ப செலுத்துகிறேன். (லூக்.19:8) நான் என் ஊழியத்தின் பாதையில் என்னுடைய சாதூர்யமான பேச்சினால் மக்களை வசீகரித்து ஸ்தாபன சபை பிஷப்களைப் போன்று அவர்களை கொள்ளையடித்தேன், சேர்த்த சொத்து சுகங்கள் அனைத்தையும் நான்கு மடங்காய் திரும்ப செலுத்துகிறேன். நான் அக்கர, புக்கர என்று பேசி மக்களை வஞ்சிக்கிற சபைகளை விட்டு விலகிவிட்டேன். மாடமாளிகைகளில், சொகுசு பங்களாக்களில் வாழ்ந்தது போதும். பல்கலை கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் என்ற பேரில் சம்பாதித்த அனைத்தையும் பொது மக்களிடமே விட்டுவிட்டு நான் என்னை வெறுமையாக்கிக்கொள்ளுகிறேன். பணத்திற்காக அடிக்கடி வெளிநாட்டிற்கு சென்று ஊழியம் ஊழியம் என்ற பெயரில் பண வசூல் செய்து பிழைப்புக்கடுத்த வழியை ஏற்படுத்திக்கொண்டதை வெறுக்கிறேன். என் இதயத்தில் குத்தப்பட்டு உம்மிடத்தில் திரும்புகிறேன். தொழிலில் கொள்ளை, ஊழியத்தின் பேரில் கொள்ளை, சுகபோகமான வாழ்வு, கர்த்தருக்குரிய தசமபாக காணிக்கைகளை வஞ்சித்தல், இவைகளையெல்லாம் நாலத்தனையாக திரும்ப செலுத்துவதுதான் மனந்திரும்புதல். அதோடு மட்டுமல்ல நீ உலகத்தை விட்டு திரும்ப வேண்டும். உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூற கூடாது. உலகத்திற்கு சிநேகிதனாக இருக்க விரும்ப கூடாது. (யாக்.4:4) தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேட வேண்டும்.இதுதான் மனந்திரும்புதல்.

38. முடிவாக பாவியாக ஜீவித்துக் கொண்டிருக்கும் ஒருவன் தேவனுடைய வார்த்தைக்கு மாறாக அநேக அக்கிரமங்களை தன்னுடைய சுய நீதியின்படி செய்து ஒரு பாவ வாழ்க்கை வாழ்ந்து வந்தான். அது அவனுடைய விசுவாசத்திற்குட்பட்டதாக, தன் சுயநீதியின் கிரியைகளுக்குட்பட்டதாக,தன் விருப்பத்திற்கேற்ற நடத்தைக்குட்பட்டதாக இருக்கலாம். ஒரு காலகட்டத்தில் தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனிதன் பிரசங்கத்தை ஆலோசனையை போதனைகளை கேட்கிறான். கேட்டதை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அதை விசுவாசிக்கிறான். அதாவது நற்செய்தியை, சுவிசேஷத்தை ஒருவன் வாயிலாக கேட்டு, விசுவாசத்திற்குள் வருகிறான். இப்பொழுது இயேசு கிறிஸ்து அவன் உள்ளத்தில் விசவாசத்தை தொடங்குகிறார். (எபே.1:13, எபி.12:1) தான் தன் வாழ்க்கையில் செய்த மாம்சத்துக்கடுத்த காரியங்களை கொண்டு தேவனுடைய வார்த்தையின் மீது கொண்டிருந்த அவிசுவாசத்தை குறித்து இருதயத்தில் குத்தப்படுகிறான் (அப்.2:37) கேள்விப்பட்டதை விசுவாசிக்கிறான். விசுவாசம் கேள்வியில் வந்தது. கேள்வி தேவனுடைய வசனத்திலிருந்து வந்தது. (ரோ.10:14,15) அது அவனுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்தது. பழைய எண்ணங்களிலிருந்து, ஒரு புதிய எண்ணத்திற்கு திரும்புகிறான். பழைய எண்ணங்கள் ஒழிந்தன. இப்பொழுது சத்தியத்தை அறிகிற அறிவில் புதிய எண்ணங்கள்என் இருதயத்தில்

ஊற்றெடுத்தது. அவனுடைய வாழ்க்கையில் முற்றிலுமாக ஒரு மாற்றம். அந்த மாற்றம் தான் மனந்திரும்புதல். ஆனால் என்னுடைய மனமாற்றத்தை பின் நான் என் கிரியைகளில் பிரதிபலிக்க வேண்டும். கிரியை இல்லாத மனமாற்றம் செத்தது.

39. நான் பிசாசின் உபதேசமாகிய திரித்துவத்தில் பிறந்து வளர்ந்து வந்தேன். அறியாமலே பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றேன். சத்தியத்தை அறிகிற அறிவுக்கு வந்தேன். உள்ளத்தில் முற்றிலுமாக ஒரு மன மாற்றம் உண்டானது. திரித்துவத்தை உதறி தள்ளினேன். ஒரே தேவன், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. என் பாவத்திற்காக மன்னிப்பு, அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் என்ற விசுவாசம் வந்தது. உடனே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றேன். இது என்னுடைய மனந்திரும்புதலினால் பெற்ற இரட்சிப்பு.

40. இந்த மனந்திரும்புதலினால் ஒருவன் அந்நிய பாஷை குறித்து அறிந்து, புரிந்துக்கொள்ள முடியாது. இந்த அந்நிய பாஷைக்கடுத்த காரியத்தில் சகோ.சாம் ஜெபத்துரை மற்றும் டாக்டர்.புஷ்பராஜ் ஒரு மாயையான தோற்றத்தை உருவாக்கிவிட்டார்கள். குழப்பத்திற்குள்ளாக மக்களை தள்ளிவிட்டார்கள். மேலே எழுதியபடி ஒருவன் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவனே (அப்.2:38) பரிசுத்த ஆவியை பெற்றவனே, அந்நிய பாஷை மற்றும் பற்பல பாஷை பேசுவதை குறித்து அறிந்து புரிந்துக்கொள்ள முடியும். அந்த அநுகிரகத்தை ஆவியானவரிடமிருந்தே பெற்றுக்கொள்கிறான். ஏனென்றால் அது அவனுக்குள்ளே வாசம் செய்யும், தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவி எல்லாவற்றையும் போதிப்பார். (யோ.14:16) சத்திய ஆவியாகிய அவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துவாராக. (யோ.16:13) ஆக அந்நிய பாஷை குறித்து அறிந்து புரிந்துக்கொள்ள மனந்திரும்புதல் மாத்திரம் போதாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானத்துடன் பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் தேவை. ஏனென்றால் அந்நிய பாஷை மற்றும் பற்பல பாஷைகளை பேசும் வரம் மனந்திரும்புதலால் கிடைப்பது அல்ல, மாறாக அது பரிசுத்த ஆவியின் வரமாயிருக்கிறது.

41. நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு அர்த்தமேயில்லாத சில வார்த்தைகளை உளறுகிறீர்கள். இந்த உளறுதல் பரிசுத்த ஆவியினால் உண்டானது அல்ல. அவர்கள் ஏதோ ஒன்றை உளறிக்கொண்டு அந்நிய பாஷை பேசுகிறோம், பரிசுத்த ஆவியை பெற்றுள்ளோம் என்கிறார்கள். மோசம் போகிறார்கள். நான் சமீபத்தில் 08.07.2020 ல் வெண்ணிற ஆடை அணிந்த இரு பெண்கள் அந்நிய பாஷை பெயரில் உளறுகிறதை கேட்டேன். அவர்கள் பேச நான் என்னால் கிரகித்துக் கொள்ள முடிந்தவரை கேட்டதாவது: சுந்தர நந்தர நந்தர நந்தர கந்தர கந்தே ஓரீபட கந்தட கந்தட கந்தட பூதளு பூதளு நந்தா. தேவனுடைய வல்லமை, தேவனுடைய பிரசன்ன வல்லமை தேவனுடைய ராஜரீக வல்லமை இப்போ இப்போ உன் பிள்ளைகளுக்குள்ள ஆவி, ஆத்துமா, சரீரத்துக்குள்ள, நாடிக்குள்ள, நரம்புகளுக்குள்ள, வீடுகளுக்குள்ள, வாசஸ்தலங்களுக்குள்ள இறங்குகிறது. சம்பப்பப்ப நத்தர கந்தர ரத்தல கந்தர ரத்தே ஓரீபட பௌதல கந்தட பௌதட ரத்தல பௌதட ரந்தா ஓ கப்பட கந்தல ரத்தல ரத்தல ரத்தல ரத்தல ரந்தா ஓ ரப்பல ரப்பல ரப்பல ரந்தல ரைத்தா ஓ....... சுவரா ரரா சுவராரரா சந்தன ரராரா ரராரா கர்த்தருடைய மகிமை, கர்த்தருடைய பிரசன்னம் வீடுகளுக்குள்ள இறங்குகிறது. தேவ பிரசன்னம் அப்படியாகவே ரந்தா ரந்தன ரந்தன ரந்தன ரந்தா ரம்பர ரம்பர ரம்பர ரம்பர ரம்பர ரம்பே ரம்பர ரம்பர ரம்பர ரம்பர நந்தர நந்த நந்தா அந்தர அந்தர அந்தர அந்தர ரந்தா ஓ நன்றி நன்றி நன்றி என்று நாள்தோறும் பாடிடுவேன்.அந்நிய பாஷை பெயரில் இதை உளறிய சகோதரிகள் தெபோரா ஆகாய் மற்றும் டெய்சி டேனியல் ஆகும்.அவர்களுடைய உளறுதலிலிருந்து இது ஒரு மாயையான பித்தலாட்டம் என புரிந்துக்கொண்டேன். நாம் பேசும் அந்நிய பாஷைகளினால் அல்ல, மாறாக எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒரு ஆவிக்குள்ளாக தாகம் தீர்க்கப்பட்டோம். (1கொரி.12:13) தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசகளையும், மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும் பின்பு குணமாக்கும் வரங்களையும் ஊழியங்களையும் ஆளுகையையும் பலவிதமான பாஷைகளையும் (Diversities of Tongue) ஏற்படுத்தினார். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களை செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களை உடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷை பேசுகிறார்களா? (Speak with Tongue) (1கொரி.12:28-30) இல்லை, இல்லை என்பதே இதன் பொருள். அந்நிய பாஷை, பற்பல பாஷைகளை பேசுகிறேன் என்பது இந்த வெண்ணிற ஆடை பெந்தெகொஸ்தேயினரின் கேலிக்கூத்தாகும்.

42. மேலும் நான் இதுகுறித்து நவம்பர் 2002-ல் **மதமாற்ற தடைச்சட்டமும், ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலும்** என்ற தலைப்பில் ஒரு நிருபத்தை எழுதியுள்ளேன். அதில் பத்தி 21 முதல் 46 வரை தியானியுங்கள். மேலும் நான் மனந்திரும்புதல் குறித்து எனது செய்தி **இந்த பொல்லாத, விபச்சார சந்ததியை விட்டு விலகி உங்களைஇரட்சித்துக்கொள்ளுங்கள்** என்ற தலைப்பில் ஒரு நிருபத்தை நவம்பர் / டிசம்பர் 2010-ல் எழுதியுள்ளேன். இதிலிருந்து பத்திகள் 53 முதல் 60 வரை இங்கு தொகுத்துக்கொடுத்துள்ளேன். அதையும் தியானியுங்கள். நீங்கள் மனந்திரும்புதலைக்குறித்து மிக்க விளக்கமாக தெரிந்து, அறிந்து , புரிந்துக்கொள்ளலாம். கிறிஸ்துவ வாழ்க்கையில் சரியான மனந்திரும்புதல் இல்லாததினால் அநேகர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றும் வாழ்க்கையில் பின்மாற்றத்தை சந்திக்கிறார்கள். வாழ்க்கையில் பின்மாற்றம் ஏன்? அது சரியான முறையான மனந்திரும்புதல் இல்லை.

43. ஒருவனுக்கு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளுகிறவர் இயேசு. (அப்.5:31) தேவன் புறஜாதிகளுக்கு ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை அருளிச்செய்தார். (அப்.11:18). தேவன் மனந்திரும்புதலை அருளுகிறார். (2தீமோ.2:25) பவுல், தீத்துக்கு எழுதும் பொழுது நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் தேவன்

நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சித்தார் என்கிறான். (தீத்.3:5) இந்த மறுஜென்மமுழுக்குக்கு, அதாவது ஞானஸ்நானத்திற்கு முன்பு ஒருவனுடைய உள்ளத்தில் மனந்திரும்புதல் தேவை. அப்.2:38. ஒருவனுடைய இரட்சிப்புக்கு முதற்படி மனந்திரும்புதல். The first step towards salvation is Repentance.

44. மனந்திரும்புதல், இதன் கிரேக்கச் சொல் மெற்றனாயா (Metanoia). இதற்கு பின்எண்ணம் (Afterthought) என்று பொருள். இதன் ஆங்கிலேயச் சொல் ரிப்பென்டன்ஸ் (Repentance). இதன் பொருள் செய்த குற்றத்திற்காக வருந்துதல் ஆகும். வருத்தம் ஒருவனுக்கு அவனுடைய கடந்தகால வாழ்க்கையில் அவனது சிந்தனைகள், செயல்கள், சென்ற வழிகள் அனைத்தும் பாவமானது, தேவனுக்கு விரோதமானது என்ற உணர்வு உள்ளத்தில் உருவாக, அதற்காக தன் இருதயத்தில் குத்தப்பட்டு, அவன் மனஸ்தாபப்படுவதால் அவனுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. அதாவது பிற்காலத்தில் கிடைத்த அறிவினால், பின்எண்ணத்தினால் முற்காலத்தில் கொண்டிருந்த கருத்துக்களில், எண்ணங்களில், நடைமுறைகளில் உண்டாகும் மாற்றம் மனமாற்றம்.

45. **கருத்துக்களில், எண்ணங்களில், நடைமுறைகளில் உண்டாகும் மாற்றங்களுக்கு எடுத்துக்காட்டு:**
அ. முன்பு நான் தேவத்துவத்தில் மூவர் உண்டு என்ற எண்ணத்தில் இருந்தேன். தேவரீர் ஒரே தேவனும், ஒரே கர்த்தருமாய் இருக்கிறீர், ஒருவராய் மாத்திரம் இல்லாமல் ஒரே தத்துவமுடைய மூவராய் இருக்கிறீர் என தென்னிந்திய திருச்சபை ஜெப புஸ்தகம் பக்கம் 115-ல் கூறுவதை விசுவாசித்தேன். தேவத்துவத்தில் மூவர் உண்டு என நம்பி மூவருக்கு ஆராதனை செய்தேன். பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமையுண்டாவதாக எனப் பாடினேன். இப்பொழுதோ பிதா குமாரன் பரிசுத்த ஆவி ஒரே தேவனின் மூன்று தன்மைகள் (Attributes) என்ற பின் எண்ணம் கொண்டு தேவன் ஒருவர் என்ற விசுவாசத்துக்குள்ளானேன். ஒரே தேவன், அவர் எல்லார் மேலும் (பிதா), அவர் எல்லைரோடும் (குமாரன்), அவர் எல்லாருக்குள்ளும் (பரிசுத்த ஆவி) என உணர்ந்தேன் (எபே4:6).
ஆ. முன்புஎன் அறியாமையினால் குழந்தை ஞானஸ்நானம் பெற்றோர்களின் சம்பிரதாயத்தின்படி பெற்றேன். பரிசுத்த வேதாகமத்தை தியானிக்க ஆரம்பித்தபோது அது தவறு என உணர்ந்தேன்.ஒருவன் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுக்க வேண்டும், அதோடு மட்டுமல்ல பிதா குமாரன் பரிசுத்தஆவி என்ற தேவனுடைய தன்மைகளின் பெயரை உச்சரித்து ஞானஸ்நானம் பெறாமல் மூன்று தன்மைகளுக்குரிய நாமத்தினால் அதாவது நான் மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டும்(அப்2:38) என்ற பின்எண்ணம் கொண்டேன்.
இ. முற்காலத்தில் பெண்களின் தலைமுக்காடு அவர்கள் தங்கள் சேலை முந்தாணையால் தங்கள் தலைமயிரை மூடிக்கொள்வதே என்ற எண்ணத்தில் இருந்தேன். ஆனால் பிற்காலத்தில் அது தவறு, பெண்களின் நீண்ட தலைமயிரே அவர்களது தலைமுக்காடு என்ற பின்எண்ணம் கொண்டேன் (1கொரி11:15).
ஈ. ஒரு பெண் அவள் தன் தலைமயிரை பின்னி, விலை உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி, தன்னை பொன் ஆபரணங்களினால் அலங்கரிப்பதே அவளது அலங்கரிப்பு என்று நினைத்தேன். ஆனால் இப்பொழுது அப்படியல்ல, அவள் இருதயத்தில் மறைந்திருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய குணமே அவளது அழியாத அலங்கரிப்பு, அதோடு மட்டுமல்ல அவள் தன் கணவனுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிந்து தன்னை அலங்கரிக்க வேண்டும் என்ற பின்எண்ணம் கொண்டேன் (1பேது3:3-6).
உ. முன் பெண் பிரசங்கிகளை வரவேற்றேன். இப்பொழுதோ பெண்கள் தேவனுடைய வார்த்தையை கொண்டு பிரசங்கம் செய்யக்கூடாது, புருஷர்கள் மீது தேவனுடைய வார்த்தையை கொண்டு அதிகாரம் செலுத்தக்கூடாது என்று சத்தியத்தை அறிந்து பின்எண்ணம் கொண்டேன் (1கொரி14:34,35).
ஊ. முன்பு பெண்கள் குடும்ப பாரத்தை தாங்க வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் இருந்தது. இப்பொழுது அது தவறு, அவள் வீட்டில் இல்லத்து ராணியாக இருக்க வேண்டும், அவள் வேலை செய்ய வெளியே செல்லக்கூடாது என சத்தியத்தை அறியும் அறிவைப் பெற்று முன் எண்ணத்திலிருந்து ஒரு பின்எண்ணம் கொண்டேன் (தீத்2:4,5).
எ. முன்பு தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று அறிந்திருந்தாலும் அதைக்கொடுக்க முன்வரவில்லை. இப்பொழுதோ கைக்கு வருமானம் வந்தவுடன், உடனே தேவனுக்குச் செலுத்த வேண்டியதைச் செலுத்த வேண்டும் என்று தீர்மானித்து சம்பளம் வாங்கியவுடன் முதல் வேலையாக கர்த்தருக்குரிய தசமபாகத்தைச் செலுத்துகிறேன். தேவனை கொள்ளையடிக்க விரும்பவில்லை (ஆதி.14:20, லூக்.11:42, யோ.8:39, எபி.7:4).பாஸ்டராகிய நான் சபைக்கு வரும் தசமபாகத்தை(காணிக்கைகளை அல்ல) இதர நான்கு வகை ஊழியங்களுக்கும் இப்பொழுது பகிர்ந்து கொடுக்க மறப்பதில்லை.

46. இப்படியாக முற்காலத்தில் கொண்டிருந்த கருத்துக்களில், எண்ணங்களில், நடைமுறைகளில் ஒரு பின்எண்ணம் உண்டாகி, அந்த எண்ணம் என்னில் மனந்திரும்புதலைக் கொண்டு வந்தது. பாவத்தை நேசித்தேன், பாவியாய் இருந்தேன். என் பாவங்களை அறிக்கை செய்து அவைகளை விட்டுவிட்டு பரிபூரணமாய் தேவனிடத்திற்கு திரும்பினேன். அதுவே மனந்திரும்புதல். இது குறித்து ஒரு பக்தன் கூறும் போது: பாவத்தில் விழுந்து வாழும் நூறு ஆண்டுகள் வாழ்வை விட தேவனிடத்தில் மனந்திரும்பின நூறு நாட்கள் வாழ்வே சிறந்தது என்கிறான். ஏனென்றால் மனந்திரும்பி குணப்படாத வாழ்க்கை, பாவ வாழ்க்கை. பாவத்தின் சம்பளம் மரணம்.

47. ஆக ஒருவன் உலகச்சிநேகத்தை, கண்களின் இச்சைகளை, மாம்சத்தின் இச்சைகளை, ஜீவனத்தின் பெருமைகளை முற்றிலுமாக வெறுத்து,(1யோ2:16) தன்னைபிரியமுமான ஜீவபலியாக தேவனுக்கென்று ஒப்புக் கொடுத்து, தன்னை தேவசித்தத்துக்கு அர்ப்பணித்தலே மனந்திரும்புதல் ஆகும். அது அவன் தேவனிடத்திற்கு திரும்புதல் ஆகும். கர்த்தருடைய ஆவியே பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயதீர்ப்பைக் குறித்தும்

கண்டித்து உணர்த்தி அவனில் மெய்யான மனந்திரும்புதலைக் கொண்டு வருகிறது. (ரோ.16:7-11) ஒருவன் தன் சுயமுயற்சியினால் தனக்குள் வருவித்துக்கொள்ளும் ஒரு மனநிலை மனந்திரும்புதல் அல்ல. கர்த்தரே மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் ஒருவனுக்கு அருள வேண்டும். (அப்.5:31, 1118.)

48. ஒருவனுடைய சன்மார்க்க ஜீவியம் மனந்திரும்பின வாழ்க்கையல்ல. சன்மார்க்க ஜீவியம் சுயநீதியாகும். தேவன் நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் நம்மை இரட்சிக்கவில்லை. (தீத்.3:5) பாருங்கள், கொர்நெலியு, தேவபக்தியுள்ளவன், தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்து வாழ்ந்தான். தானதர்மங்களைச் செய்தான். ஜெபத்தில் இடைவிடாது தரித்திருந்தான். ஆனால் அவனுடைய வாழ்க்கை ஒரு மனந்திரும்பின வாழ்க்கையல்ல. (அப்.10:2, 11:14) பரிசேயனுடைய சுயநீதியின் மேல் தேவன் பிரியமாயிருக்கவில்லை. (லூக்.18:11-13) சுயநீதியை நிலைநிறுத்துகிறவர்கள் தேவநீதிக்கு கீழ்படியவில்லை. (ரோ.10:3) நாம் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசம் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவர்களாய் இருக்க வேண்டும். (பிலி.3:9) ஏனென்றால் நம்முடைய சுயநீதி அழுக்கான கந்தைபோல் இருக்கிறது. (ஏசா.64:16) ஆதலால் நாம் நம்முடைய சுயநீதிகளை அல்ல, தேவனுடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, நம்முடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் தேவனிடம் ஏறெடுக்க வேண்டும். (தானி.9:18) சன்மார்க்கர்களைத் தேவன் அழிக்கிறார். (யோபு.9:22) ஆதலால் ஒருவனுடைய சன்மார்க்க ஜீவியத்தைக் கொண்டு அவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறான் எனக் கூறமுடியாது.

49. இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கிற அறிவைக் கொண்டு ஒருவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறான் எனக் கூற முடியாது. சீமோன் பேதுரு இயேசுவை நோக்கி: நீர் ஜீவனுக்குள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி : யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான் என்றார். (மத்.16:16,17) லேகியோனும், இயேசுவே உன்னதமான தேவனுடைய குமாரனே என்று அறிக்கை செய்தான். (மத்.5:7) ஆதலால் லேகியோனும், பாக்கியவான் என்று கூறமுடியுமா? பிசாசும் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசித்து நடுங்குகிறான். (யாக்.2:19) இந்த விசுவாசம் பிசாசை நீதிமான் ஆக்குமா? ஆக ஒருவனின் ஒரே தேவன் உண்டு என்று விசுவாசத்தைக்கொண்டு, இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கிற அறிவைக்கொண்டு, சத்தியத்தை அறிந்திருக்கிற அறிவைக்கொண்டு, இக்காலத்துக்குரியச் செய்தியை அறிந்திருக்கிற அறிவைக்கொண்டு அவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழும் ஒரு இரட்சிக்கப்பட்டவன் என்று கூற முடியாது. பிசாசும் அவனுடையவர்களும் தங்கள் மூளையிலிருந்து விசுவாசிக்கிறார்கள். இது பேர்விசுவாசியின் தன்மை. இவன் மணல்மேல் கட்டப்பட்ட வீடு. ஆனால் ஒரு உண்மையான விசுவாசி தன் இருதயத்திலிருந்து விசுவாசிக்கிறான். அதாவது தன் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும், முழு ஆத்துமாவோடும் விசுவாசிக்கிறான். இவன் பதறான். இவன் கற்பாறையின் மேல் கட்டப்பட்ட வீடு.

50. ஒருவன் வரங்களைப் பெற்றிருப்பது மனந்திரும்பின வாழ்க்கை எனக் கூறமுடியாது. (ரோ.11:29) வரங்களின் கிரியை, தேவனுடைய அழைப்பு ஒருவன் மனந்திரும்பாமலே நிலை நிற்பதாகும். For the gifts and callings of God are without repentance. பாருங்கள், அக்கிரம செய்கைகாரர்கள் தீர்க்கத்தரிசனம் உரைத்தார்கள். பிசாசுகளை துரத்தினார்கள், அற்புத அடையாளங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் செய்தார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களை ஒருக்காலும் அறியவில்லை எனக் கூறினார். (மத்.7:21-23). இயேசு கிறிஸ்துவை பின்பற்றாதவன் ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பிசாசுகளை துரத்தினான். மாற்.9:38-41. ஆனால், நீங்கள் உங்கள் பாஸ்டர் பாடும் பாடல்களைக் கொண்டு, கொடுக்கும் செய்திகளைக் கொண்டு, இக்காலத்துக்குரிய செய்திகளை அறிந்திருக்கும் அறிவைக் கொண்டு, அவரால்ஒருசில வியாதியஸ்தர்கள் சுகமாவதைக் கொண்டு, அவர் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர் என்று நினைக்கிறீர்கள். அது முற்றிலும் தவறான எண்ணமாகும். அவர் தேவனுடைய மனுஷனாக இருப்பாராகில் சபையை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்தி செல்வார். தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் முற்றிலுமாக கீழ்படிந்து சபையை வழிநடத்துவார். அந்த சபை சத்தியத்துக்கு தூணும், ஆதாரமுமாய் காணப்படும். இயேசு கிறிஸ்துவை பின்பற்றாதவர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பிசாசுகளை துரத்தினார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அற்புத அடையாளங்களை செய்கிறவர்கள் யாவரும் கிறிஸ்துவுக்குள் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்ந்து, ஊழியத்துக்காக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என நம்பி மோசம் போகாதீர்கள். அநேகர் இந்த நம்பிக்கையில் மோசம் போனார்கள் தெயுதாஸ் மற்றும் யூதாஸ் கூட்டத்தார் (அப்5:36,37) கள்ள, கபடமுள்ள வேலையாட்களே நம் மத்தியில் அதிகமதிகம் என்பதை மறந்துவிடாதீர்கள். ஊழியத்தின் பேரில் சொத்துக்கு மேல் சொத்துக்களைக் குவித்துக் கொண்டு, ஒரு ஆடம்பரமான வாழ்க்கை, வாரிசுகளுக்கும் பல தலைமுறைகளுக்காகச் சேர்த்து வைக்கும் ஒரு ஊழியக்காரன் கள்ள கபடமுள்ள வேலையாளே.

51. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் மெய்யான மனந்திரும்புதலைக் கொண்டவர்கள் எனக் கூறமுடியாது. உதாரணமாக மாயவித்தைக்காரனாகிய சீமோன் விசுவாசித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றான். (அப்.8:13) ஆனாலும் தேவனுடைய வரத்தை பணத்தைக்கொண்டு சம்பாதிக்க நினைத்தான். (அப்.8:17,18)அவனுடைய மனந்திரும்புதல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதல் இல்லை. இவ்வாறாக நம் மத்தியிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, தேவ சித்தத்துக்கு புறம்பாக தன்னை ஒரு பாஸ்டராக அழைத்துக்கொண்டு தசமபாகம், காணிக்கைக்காக ஊழியம் செய்கிறவர்கள் உண்டு. வெளிநாட்டு சகோதரர்களை நம்பி, அவர்களுடைய பண உதவியை நம்பி, அவர்கள் உபதேசிக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆம், ஆமென் என்றும் கூறிக்கொண்டு, அவர்கள் உபதேசங்களை தங்கள் உபதேசங்களாகக் கொண்டு ஊழியம் செய்கிறவர்கள் உண்டு. தன்னுடைய ஜெபம்

வியாதியஸ்தர்களை குணமாக்குகிறது என்று கூறிக்கொண்டே, பொருளாசை மீது கண் வைத்து வியாதி குணமாக்கப்பட்டவர்களிடம் காணிக்கை பெற்று ஊழியம் செய்கிறவர்களும் உண்டு. இவ்வாறாக பணத்துக்காக, புகழுக்காக ஊழியம் செய்து வருகிறவர்களை அடையாளம் கண்டுகொண்டு அவர்களை விட்டு விலகுங்கள்.தேவனுக்குப் பயந்து காணிக்கை, தசமபாகம் கொடுக்கிறவன் குடிசைகளில் பணக்கஷ்டத்தின் மத்தியில் வாழ்கிறான். தேவனுக்குப் பயமில்லாது காணிக்கை, தசமபாகம் பெறுகிறவன் பங்களாவில் சுகபோகமாக வாழ்கிறான். காணிக்கை, தசமபாகம் ஊழியக்காரனுக்கு கொடுக்கிறவன் ரூ.10/-க்கு ஒரு வடை வாங்கி சாப்பிடுகிறான். ஆனால் ஊழியக்காரனோரூ.300/-க்கு ஒரு வடை வாங்கி சாப்பிடுகிறான். இவ்வாறாக நான் காணிக்கை கொடுக்கும் விசுவாசிக்கும், அதை அனுபவிக்கும் ஊழியக்காரனுக்கும் அடுத்த காரியங்களை எழுதிக்கொண்டு போகலாம். இது தான் இன்றைய ஊழியம். இது தான் இன்றைய வஞ்சகம். இதை என் ஜனங்கள் என்றுதான் உணர்வார்களோ!

52. ஒருவன் கற்பனைகள், பிரமாணங்கள், கட்டளைகளைக் கைக்கொண்டு வருவதால் அவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறான் என்று கூறமுடியாது. இவைகளை கடைபிடித்து வந்த ஒரு வாலிபன், இயேசுவிடம் நித்திய ஜீவனை அடைவதற்கு தான் எந்த நன்மைகளை செய்ய வேண்டும் என்று கேட்டான். (மத்.19:16-22) கற்பனைகளை, பிரமாணங்களை, கட்டளைகளைக் கைக்கொண்டவர்கள் நித்திய ஜீவனைப் பெறவில்லை. ஏனென்றால் அவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படவில்லை. மேலும் பிரசேயனும் அவைகளை கடைபிடித்து வந்தான். ஆனாலும் அவன் நீதிமானாக்கப்படவில்லை. (லூக்.18:12-14) ஆக மனுஷன் தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்படிந்து நடப்பதும், பரிசேயனுடைய நீதியும் மனந்திரும்பின வாழ்க்கை எனக் கூற முடியாது. (கொலோ.2:21,23)

53. ஜெபஆலயத் தலைவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழவில்லை. ஜெபஆலயத் தலைவனாகிய கிறிஸ்பு சுவிசேஷத்தைத் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று அவன் வீட்டார் அனைவரோடும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.18:8) அப்படியானால் ஞானஸ்நானத்துக்கு முன் அவனது பதவி, வாழ்க்கை ஒரு மனந்திரும்பாத வாழ்க்கையாகும். இன்றைக்கு நம் மத்தியில் உள்ள ஸ்தாபன சபைகளின் குருமார்கள், பாஸ்டர்கள், இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் எனக் கூறும் அநேக பாஸ்டர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்த இரட்சிக்கப்படாதவர்களே. இவர்களும் கிறிஸ்புவைப் போன்று இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே எனது வாஞ்சை.

54. பொதுவாக சபைகளில் மனுஷர்களால் ஏற்படுத்தப்பட்ட பதவிகளில் உள்ளவர்கள் உதாரணமாக மூப்பர்கள், டீக்கன்கள் மனந்திரும்பாத வாழ்க்கை வாழ சாத்தியம் உண்டு. ஆனால் எபே.4:11-13ன் படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் மனந்திரும்பாத வாழ்க்கை வாழ, சத்தியத்தை அறியாத வாழ்க்கை வாழச் சாத்தியமில்லை. அவர்கள் அனைவரும் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தவர்கள். ஆனால் கள்ள, கபடமுள்ள வேலையாட்கள் சபையில் நிறைந்திருப்பதால், அவர்களுடைய கிரியைகளினாலும், உபதேசங்களினாலும் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படுகிறது.

55. தேவனைக் குறித்து வைராக்கியம் உள்ளவர்கள், கல்விமான்கள், வேதப்பிரமாணத்தின்படி போதிக்கப்பட்டவர்கள் அனைவரும் மனந்திரும்பின வாழ்க்கையுடையவர்கள் எனக் கூறமுடியாது. உதாரணமாக பவுலின்(சவுல்) முந்தின வாழ்க்கை, சகல ஜனங்களாலும் கனம் பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேலின் வாழ்க்கை.

56. தேவனை விசுவாசித்து, அவரை ஆராதித்து வருகிறவர்கள், சுவிசேஷ கூட்டங்களுக்கு ஒழுங்காக சென்று வருகிறவர்கள் அனைவரும் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள் எனக்கூற முடியாது. உதாரணமாக லீதீயாள் தேவனை ஆராதித்து வந்தாள்.சபைக்கு, ஜெபக்கூட்டங்களுக்கு ஒழுங்காக சென்று வந்தாள். ஆனாலும் அவள் மனந்திருந்தின வாழ்க்கை வாழவில்லை. ஒரு நாள் பவுல் பிரசங்கிக்க, ஜெபக்கூட்டத்தில் அவன் பிரசங்கத்தைக் கேட்டு, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று அவளுடைய வீட்டார் அனைவரோடும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றாள். (அப்.16:14) அவளுடைய பிந்தின வாழ்க்கையே மனந்திரும்பின வாழ்க்கை. அவளுடைய முந்திய வாழ்க்கையைவிட பிந்தின வாழ்க்கையே பிரகாசமாக இருந்தது.

57. கர்த்தருக்கு செலுத்த வேண்டிய தசமபாகத்தைக் கொடுக்காதவர்கள், காணிக்கைகளை ஒழுங்காகச் செலுத்தாதவர்கள் அனைவரும் மனந்திரும்பாதவர்களே. தேவனை வஞ்சிக்கிறவர்கள் எப்படி மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறார்கள் என கூறமுடியும்? (மல்.3:8,9) சபையின் பண்டகசாலைக்கு வரும் தசமபாகத்தை இதர ஊழியர்களுக்குப் பகிர்ந்து கொடுக்காது தனது தொந்தியிலே போட்டுக்கொள்ளும் பாஸ்டர்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் மனந்திரும்பினவர்களும் அல்ல. அவர்கள் தேவசித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்கள். தங்கள் வயிற்றிற்கே ஊழியம் செய்கிறவர்கள். இவன் இதர ஊழியங்களுக்குரிய தசமபாகத்தை பலாத்காரமாய் பறித்துக்கொண்டு, தன் அயலானாகிய இதர ஊழியர்களுக்கு இடுக்கண் செய்கிறவனே. ஆதலால் இவன் கர்த்தருக்கு விரோதமாய் அநியாயம் செய்கிறவன். மெய்யான மனந்திரும்புதலைப் பெற்றவர்கள் சத்தியத்தை அறியும் அறிவையும் அடைந்திருப்பார்கள். அதற்கு கீழ்ப்படிகிறவர்களாகவும் இருப்பார்கள்.

58. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, தன் மயிரைப் பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, புறம்பாக தன்னை அலங்கரிப்பவள் தன் செல்வ செருக்கினால் சுகபோகமாக வாழ்கிறவள். அவள் உயிரோடே செத்தவள். அவள் மனந்திரும்பாமலே ஞானஸ்நானம் பெற்றவள். ஏனென்றால் அவள் இன்னும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவில்லை.

59. சகோதரன் எனப்பட்ட ஒருவன், உனக்கு விரோதமாக குற்றஞ்செய்தால், அவனை கடிந்துகொள். அவன் மனஸ்தாபப்பட்டால் அவனை மன்னி. (லூக்.17:3,4) ஆனால் திரும்பத்திரும்ப அதே குற்றத்தை செய்துகொண்டு வருவானாகில், அவன் தான் செய்த குற்றத்துக்காக மனஸ்தாபப்பட்டானேயல்லாமல் மனந்திரும்பவில்லை. மனந்திரும்பியிருந்தால் அவன் அந்த குற்றத்தை மீண்டும் செய்ய மாட்டான். இங்கு அவனுடைய குற்ற உணர்வு மனஸ்தாபத்தைக் கொண்டு வந்ததேயன்றி மனந்திரும்புதலைக் கொண்டு வரவில்லை. ஒருவனுக்கு தன் தவறைக் குறித்த, பாவத்தைக் குறித்த குற்றவுணர்வு மனஸ்தாபத்தையும், மனஸ்தாபம் மனந்திரும்புதலையும் கொண்டுவர வேண்டும்.

60. உண்மையான மனந்திரும்புதலில் ஒரு அம்சம் பாவ உணர்வை, குற்ற உணர்வை உள்ளத்தில் கொண்டு வந்து, இருதயத்தில் குத்தப்படுதலாகும். வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த யூதர்களையும், தேவபக்தியுள்ள மனுஷர்களையும் பேதுரு நோக்கி : நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள் என்றான். இதைக் கேட்டவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டார்கள். (அப்.2:37) மனந்திரும்புதலுக்குரிய விசுவாசத்தை தேவன் அவர்கள் உள்ளத்தில் தொடங்கினார் (எபி.12:1). 3000 பேர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். இவர்களை கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையில் (நம் மத்தியில் காணப்படும் ஸ்தாபன சபைகளில் அல்ல) அவயவங்களாக சேர்த்துக் கொண்டு வந்தார், இன்றும் சேர்த்துக் கொண்டு வருகிறார்.

61. இருதயத்தில் குத்தப்பட்ட பின்பு மனங்கசந்து அழுவதாகும். அப்பொழுது கர்த்தர் திரும்பி பேதுருவை நோக்கிப் பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவு கூர்ந்து வெளியே போய், மனங்கசந்து அழுதான். (லூக்.22:62,63) ஆயக்காரன் தன் மார்பில் அடுத்துக்கொண்டான். (லூக்.18:13)

62. மனங்கசந்து அழுதபின்பு ஒருவன் தன் பாவத்தை அறிக்கை செய்ய வேண்டும். கெட்ட குமாரனுக்கு புத்தி தெளிந்த போது, அவன் என் தகப்பனுடைய வீட்டில் அவர் கூலிக்காரராய் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது. நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து என் தகப்பனிடத்துக்குப் போய் தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் நான் பாவம் செய்தேன், இனிமேல் நான் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுகிறதுக்குப் பாத்திரவான் அல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி, எழுந்து புறப்பட்டு தன் தகப்பனிடத்தில் வந்தான். (லூக்.15:18-20)

63. பாவத்தை அறிக்கை செய்தபின் அதை முற்றிலும் விட்டுவிட வேண்டும். விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைகாரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களை கொண்டுவந்து எல்லாருக்கும் முன்பாக சுட்டெரித்தார்கள். (அப்.19:18,19) இது பாவச்செயல்களை அறிக்கையிட்டு விட்டுவிடுவதாகும். (நீதி.28:13) நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்தார்கள். (எபே.1:9)

64. பாவத்தை அறிக்கை செய்து, அதை முற்றிலுமாக விட்டுவிட்டு, பின் முடிவில் செய்த பாவத்துக்கு, குற்றங்களுக்கு ஒருவன் பரிகாரம் செய்யும் போது உண்மையான இரட்சிப்பு கிடைக்கிறது. உதாரணமாக சகேயு கர்த்தரை நோக்கி : ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தணையாக திரும்பிச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி : இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே என்றார். (லூக்.19:8,9) ஒருவன் மனந்திரும்பி, தேவனிடத்திற்கு திரும்பினால் மட்டும் போதாது, மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளையும் செய்ய வேண்டும். (அப்.26:20) அவ்வாறாக மனந்திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். (லூக்.15:7)

65. அக்டோபர் மாதம், நான் சென்னையில் இருந்த நாட்களில் ஒரு முஸ்லீம் மார்க்கத்தாரை சந்திக்க நேர்ந்தது. அவர் என்னிடம் ஒருவன் வட்டிக்கு பணம் கொடுத்து, மக்களை ஏமாற்றி, அரசாங்கத்தை ஏமாற்றி, தகாத முறையில் சொத்து சுகங்களைச் சேர்த்து, பின் ஒரு நாள் நான் மனந்திரும்பிவிட்டேன், இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன், அவர் என்னுடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்து, நானும் அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு, அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டு அவருடனே கூடப்பிழைத்திருக்கிறேன். என் பாவஜீவியத்திலிருந்து அவர் என்னை விடுதலையாக்கிவிட்டார், நான் இப்பொழுது அவருடையவன், அவர் என்னுடையவர் என அறிக்கை செய்தால் போதுமா? கொள்ளையடித்து சம்பாத்தியம் பல தலைமுறைக்கு சேர்த்து வைத்துவிட்டு நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என்று கூறுகிறார்களே! இது சரியா? என்றுக் கேட்டார். நான் அவருக்கு சகேயுவின் வாழ்க்கையைக் கூறி அதுதான் உண்மையான மனந்திரும்புதல், இரட்சிப்பு எனக்கூற, அவர் அதிலும் திருப்தியடையவில்லை. ஒருவன் அநியாயமாக சம்பாதித்து பின் அதற்கு ஈடாக தன் ஆஸ்தியில் பாதி மற்றும் ஒரு ரூபாய்க்கு நான்கு ரூபாய் கொடுக்க முன்வந்தால் அவன் எத்தனை மடங்கு சம்பாதிக்க வேண்டும். ஆதலால் அவன் தான் நேர்வழியில் சம்பாதித்ததுப் போக தவறான வழியில் சம்பாதித்த

அனைத்தையும் திரும்பச் செலுத்த வேண்டும் எனக் கூறினார். அவர் கூறியதிலும் உண்மைகள் இருப்பதாகவே எனக்கு தோன்றியது.

66. சில வேளைகளில் ஒருவனிடத்தில் மெய்யான மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகள் காணப்பட்டாலும் அது பிற்காலத்தில் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட ஒருவிதமான பயமாகத்தான் தெரிகிறது. உதாரணமாக பார்வோனையும், அவனுடைய அறிக்கையையும் பாருங்கள், நான் பாவஞ்செய்தேன், கர்த்தர் நீதியுள்ளவர் நானும் என் ஜனமும் துன்மார்க்கர்கள் என்றான். (யாத்.9:27,35) வாதை நின்றபின் அவன் தன் இருதயத்தை கடினப்படுத்தினதைக் காண்கிறோம். இவனைப் போன்று சிலர் இம்மைக்குரிய இப்பிரபஞ்சத்துக்குரிய நன்மைகளுக்காகவே கர்த்தரிடத்தில் திரும்புகிறார்கள். நன்மைகளை பெற்றவுடன் பின்வாங்கிப் போகிறார்கள். சிலர் ஒரு நல்ல மாப்பிள்ளை / பெண் கிடைத்திருக்கிறது என்பதற்காக ஞானஸ்நானம் பெற்று திருமணம் செய்கிறார்கள். திருமணத்திற்காக ஞானஸ்நானம் பெறுகிறார்கள். ஆனால் திருமணத்திற்கு பிந்தின வாழ்க்கை, முந்தின வாழ்க்கையாகவே காணப்படுகிறது. இவர்களை என்ன என்று சொல்வது?

**67. உள்ளத்தில் மெய்யான மனந்திரும்புதலைப் பெற்றவர்கள்:**

அ. இனி தனக்கென்று பிழைத்திருக்காமல், தங்களுக்காக மரித்து உயிர்தெழுந்தவருக்கென்று பிழைத்திருக்கிறார்கள். (2கொரி.5:15) இவர்கள் முதலாவது தேவனுடைய இராஜ்யத்துக்குரியவைகளை தேடுகிறார்கள். பின்பு தனது குடும்பத்துக்குரியது. அதன் பின்பு தனக்குரியது. இவர்கள் தங்கள் ஜீவனை வெறுத்தவர்கள். (லூக்.14:26) இவர்கள் தங்கள் சுயவிருப்பு வெறுப்புகளிலிருந்து திரும்பி தங்களைத் தேவனுடைய சித்தத்துக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுத்து மனந்திரும்பினவர்கள் செயலில் மனந்திரும்பின வாழ்க்கையை காட்டுகிறவர்கள்.

ஆ. இவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்துக்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பினவர்கள். (அப்.28:18) தேவன் ஒளியில் இருக்கிறதுபோல இவர்களும் ஒளியிலே நடந்து, ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்பார்கள். (1யோ.1:7) ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் இல்லாததால் இவர்கள் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பார்கள். இவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருப்பதினால் அநீதியுடன் இவர்களுக்கு சம்பந்தம் இருக்காது. இருளுடன் ஐக்கியம் இருக்காது, அவிசுவாசிகளுடன் பங்கு இருக்காது, விக்கிரகங்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இருக்காது, இவர்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய் அசுத்தமானதை தொடாதிருப்பார்கள். (2கொரி.6:14-18)

இ. இவர்கள் பாவத்திலிருந்து, கண்களின் இச்சைகளிலிருந்து, மாம்சத்தின் இச்சைகளிலிருந்து, ஜீவனத்தின் பெருமைகளிலிருந்து திரும்பினவர்கள். (கலா.5:19-21, கொலே.3:5, 1யோ.2:15,16) அதாவது பாவத்தின் கிரியைகளிலிருந்து திரும்பிவிட்டார்கள். மரணத்தை மேற்கொண்டார்கள். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஈ. இவர்கள் உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூறுவதில்லை. உலகத்தை விட்டுத் திரும்பினவர்கள். (1யோ.2:15, யாக்.4:4). உலகத்தின் பெருமை, செல்வத்தின் பற்று அனைத்தையும் விட்டுத் திரும்பினவர்கள். இவர்கள் சாத்தானுடைய அதிகாரத்திலிருந்து திரும்பிவிட்டார்கள். (அப்.26:18) இவர்களுக்கு அவனிடத்தில் பங்கு இல்லை. இவர்கள் இந்தப் பூமியில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறார்கள்.

உ. இவர்களுடைய குடியிருப்பு பரலோகத்தில் இருப்பதால், பூமியில் உள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுகிறவர்கள். (கொலோ.3:2)இனி இவர்கள் உலகத்தை பின்னிட்டு பார்க்க மாட்டார்கள். (அதி.19:26, லூக்.9:62)

ஊ. ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைப் பெற்ற இவர்கள் (அப்.11:18) தங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து விட்டார்கள். (ரோ.6:13) அதாவது தங்களை ஜீவபலியாக தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். இவர்கள் தேவனை நோக்கித் திரும்பிவிட்டார்கள். (சகரி.1:3) அவரும் இவர்களிடத்திற்குத் திரும்பிவிட்டார். இவர்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறார்கள் (1கொரி.3:16)

68. **மனந்திரும்புதல் குணப்படுதலுடன் பிணைக்கப்பட்டுள்ளது**. குணப்படுதல், பரிசுத்த ஆவியை பெறுதலாகும். (லூக்.22:32) நாம் நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு மனந்திரும்பி குணப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். (அப்.3:20) விசுவாசம் மனந்திரும்புதலைக் கொண்டுவருகிறது. மனந்திரும்புதல் குணமாக்கப்படுதலுடன் சம்பந்தப்பட்டுள்ளது. மனந்திரும்பு, வியாதியில் இருந்து விடுதலை பெறு. மனந்திரும்புதலே சத்தியத்தை அறியும் அறிவை கொண்டு வருகிறது. (2தீமோ.2:25). மனந்திரும்புதல் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள வழிவகுக்கிறது. (அப்.11:18) மனந்திரும்புதல் ஒருவனை பூரண புருஷனாக மாற்றுகிறது. (எபி.6:1,2)

69. **ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதல் : இந்த பொல்லாத விபசார சந்ததியை விட்டு வெளியே வர முதலாவது படி :** தேவனிடமாய் மனந்திரும்புகின்ற காரியம். பின்பு அதை தொடர்ந்து தண்ணீர் ஞானஸ்நானம். பாருங்கள் நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் உங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் (அப்.2:38) **பழையபாவங்கள் மன்னிக்கப்படுதலை அல்லது உண்மையான மனந்திரும்புதலை ஞானஸ்நானமானது காட்டுகிறதாயுள்ளது.அதே வேளையில் வருங்காலத்தின் பாவத்திற்கும் இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.** பாருங்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புகென்று ஞானஸ்நானம் பெற்ற காரியம் பழைய பாவங்கள் எடுக்கப்படுதலையே குறிக்கிறதாய் உள்ளது. அதாவது உன் பழைய பாவங்கள் அழிக்கப்படுகிறது. ஆனால் வருங்காலத்தின் பாவங்களுக்கும் இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்போது இங்கு இருக்கும் ஜென்ம சுபாவமான, சர்ப்பத்தின் காரணமாக நீங்கள் செய்த பழைய பாவங்கள் எடுக்கப்பட்டு போகின்றன. ஆனால் இதை செய்ய காரணமாயிருந்த காரியம் இன்னும் அங்கேதான்

இருக்கிறது. அது தான் பழைய வேராகிய பொல்லாங்கு. நீங்கள் மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அவர் உங்கள் பாவங்களை மன்னிக்கிறவராயிருக்கிறார். சாத்தானின் கருவியாக இருந்த நீங்கள் இப்பொழுது மீட்கப்பட்டிருக்கிறீர்கள்.

70. **மனந்திரும்புதல் என்பது என்ன?**நான்ஒரு காரியத்தை குறித்து இந்த, இந்த எண்ணங்களை என் உள்ளத்தில் கொண்டிருந்தேன். இப்பொழுது சத்தியத்தை அறியும் அறிவு எனக்குள் வந்ததால், பழைய எண்ணத்திலிருந்து என்னை மாற்றி. புதிய எண்ணத்திற்குள் வருகிறேன். அதாவது ஒரு மனமாற்றம். பழைய எண்ணத்திலிருந்து புதிய எண்ணத்திற்கு ஒரு மனமாற்றம்.

அ.**முதலாவது படி:**தேவத்துவத்தில் மூன்று பேர்கள் உண்டு என்ற எண்ணத்தைமுன்பு நான் உடையவனாயிருந்தேன். இப்பொழுது எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு : அவர் எல்லார்மேலும் (பிதாவாக) அவர் எல்லாரோடும் (இந்த பூமியில் குமாரனாக) அவர் உங்கள் எல்லாருக்குள்ளும் (நமது உள்ளத்துக்குள் பரிசுத்த ஆவியாக) இருக்கிறார் என எபே.4:6யை தியானிக்கும்போது, மேலும் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது என கொலோ.2:9 யை தியானித்தபோது தேவத்துவத்தில் மூன்று பேர்கள் அல்ல, மாறாக ஒருவரே என்ற அறிவை உடையவனானேன். என் பழைய எண்ணதித்ல ஒரு புதிய திருப்பம். முன்பு தேவத்துவத்தில் மூன்று பேர்கள் என்கிற எண்ணத்தில் இருந்தேன். இப்பொழுது தேவத்துவத்தில் ஒருவர் என்ற எண்ணம் கொண்டேன். ஒரு மனமாற்றம்.விசுவாசத்தில் மாற்றம்.

ஆ. அன்று வேதவாக்கியங்களில் எங்கும் கொடுக்க, எடுக்கப்படாத ஞானஸ்நானத்தை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியென உச்சரித்து பெற்றேன். இப்பொழுது எனது உள்ளத்தில் ஒரு மனமாற்றம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து விசுவாசிக்கிறவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துநாமத்தினால் பாவமன்னிப்பை பெறவேண்டும். (அப்.10:43) நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என அறியவந்தேன். (அப்.4:12) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என அறிய வந்தேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களையே கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார் (அப்.2:47) என அறியவந்தேன். ஆதலால் இப்பொழுது வேதவாக்கியங்களில் அனைவரும் பெற்ற / கொடுத்தபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுப்பதே சரி என்ற ஒரு புதிய எண்ணம் / மனமாற்றம் கொண்டு மனந்திரும்பி பின்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் 19.11. 1978 அன்று ஞானஸ்நானம் பெற்றேன்.

இ. முன்பு கர்த்தருடைய இராபோஜனத்தை, பகல் போஜனமாக ஆசரித்தேன். இப்பொழுது கர்த்தருடைய பஸ்கா குறித்து யாத் 12 அதிகாரத்தை தியானித்தேன். இயேசு கிறிஸ்து நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாக அடிக்கப்பட்டார் (1கொரி.5:7) என அறியவந்தேன். ஆட்டுக்குட்டி அன்று மாலை அடிக்கப்பட்டு, இரவில் புசிக்கப்பட்டது. நாமும் இயேசு கிறிஸ்து மாலையில் அடிக்கப்பட்டார் என அறிவோம். பஸ்காவாகிய அவருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் நாமும் இரவிலே புசிக்க, பானம் பண்ண வேண்டும் என்ற அறிவை அடைந்தேன். (1கொரி.11:23) எனது மனதில் ஒரு மாற்றம். அது வேதவாக்கியங்களை கொண்டு ஏற்பட்டது. இப்பொழுது நான் இரவிலே கர்த்தருடைய இராபோஜனத்தைப் புசிக்கிறேன். அதுவும் வருடத்தில் ஒரு நாள் அல்ல அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகளின் உபதேசத்தின்படி வாரத்தின் முதலாம் நாள் நாம் புசிக்க வேண்டும். (அப்.20:7) இப்பொழுது எனது மனதில் கர்த்தருடைய இராப்போஜன பந்தியை இரவு நேரத்தில்தான் ஆசரிக்க வேண்டும் என்றஒரு மனமாற்றம்.

ஈ. முன்பு நான் இருமனைவிகளை உடையவனாயிருந்து கர்த்தர் என்னை ஊழியத்திற்கு ஏற்படுத்தினார் எனக்கூறி, தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து (பாஸ்டர் ஊழியம்) வந்தேன். இப்பொழுது வேதவாக்கியங்களை கொண்டு நான் தவறு செய்ததை அறியவந்தேன் (1தீமோ.3வது அதி) முன்பு எனக்கு குழந்தை பாக்கியம் இல்லாவிட்டாலும் கர்த்தர் என்னை பாஸ்டர் ஊழியத்திற்கு அழைத்தார் எனக் கூறி என்னை நானே ஏமாற்றிக்கொண்டிருந்தேன், மக்களையும் ஏமாற்றினேன். இப்பொழுது பாஸ்டர் மனைவி மக்களையுடைய ஒரு குடும்பஸ்தனாக இருக்க வேண்டும் என அறிய வந்தேன்(1தீமோ.3:4-6). எனது உள்ளத்தில்ஒரு மனமாற்றம். எனது பாஸ்டர் ஊழியத்தை விட்டு விட்டேன். விசுவாசியாக இன்று சபையில் இருக்கிறேன்.

உ. முன்பு கர்த்தருடைய தசமபாகம் பாஸ்டருக்கு மட்டுமே உரியது என கூறி, கர்த்தருடைய தசமபாகத்தில் என் பங்கை எடுத்துக்கொண்டு மீதமுள்ள நான்கு பங்கையும் இதர ஊழியங்களுக்கு பங்கிட்டுக்கொடுக்காது என் வயிற்றையே நிரப்பினேன். இதர ஊழியர்களை வஞ்சித்து நான் மட்டும் உல்லாசமாய் வாழ்ந்துவந்தேன். நான் ஊழியத்தின் பாதையில் சென்னை செல்லும் போது அங்குள்ள லாட்ஜ்யில் ஒரு நாளைக்கு ரூ.14,000/- வாடகை கொடுத்து தங்கினேன். இப்பொழுது ஒரு மனமாற்றம். கூடியமட்டும் விசுவாசிகளுடைய இல்லத்திலே தங்கிக் கொள்ளுகிறேன். கர்த்தருடைய தசமபாகத்தை ஐந்து வகை ஊழியங்களுக்கும் பகிர்ந்துக்கொடுப்பேன் என்ற மனமாற்றம். அப்படியே பகிர்ந்தும் கொடுக்கிறேன்.

ஊ. முன்பு என்னை அகில உலக பிரசங்கி, அப்போஸ்தலன், சுவிசேஷகன், மேய்ப்பன் என அழைத்துக்கொண்டு மக்களையும் ஊரையும் ஏமாற்றி அனைத்து ஐந்து வகை ஊழியங்களையும் எனக்குள் கொண்டு ஒரு பந்தா ஊழியம் செய்தேன். இப்பொழுது ஐந்துவகை ஊழியங்களும் தனித்தன்மை வாய்ந்தது என அறியவந்தேன். எனது அழைப்பை சரிசெய்துக் கொண்டேன். ஊழியத்தை விட்டு விலகி இப்பொழுது எனது மற்றும் என் குடும்பத்தினர் இரட்சிப்புக்கு வழி தேடுகிறேன். மனதில் ஒரு மாற்றம்.

எ. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது (மத்.6:24), தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும் தன்னை சேவகம் செய்ய எழுதிக்கொண்டவருக்கு ஏற்றவனாய் இருக்கும்படி பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளகூடாது என 2தீமோ 2 அதி மூலம் அறியவந்தேன். முன்பு அரசாங்க மற்றும் பொது ஸ்தலங்களில் பணிபுரிந்து கொண்டு வந்து ஊழியம் செய்து வந்து, இரு எஜமான்களுக்கு ஊதிய ஊழியம் செய்து வந்து, அத்துடன் திருமணம், கொள்ளுதல் கொடுத்தல் காரியங்களில் ஒரு புரோக்கராக, தரகராக இருந்து மக்களை

ஏமாற்றி பணம் சம்பாதித்ததிலிருந்து ஒரு மனமாற்றம் ஏற்பட்டது. இப்பொழுது நான் என்னை மாற்றிக்கொண்டேன். ஊழியத்தை விட்டு விட்டேன். பிறரை ஏமாற்றாது என் கைகளின் பிரயாசங்களைக் கொண்டு வாழ்கிறேன்.

ஏ. முன்பு பலவிதமான இசைக்கருவிகளை கொண்டு தேவனை ஆராதனை செய்யும் ஸ்தலத்தில் இசைத்து, ஆடிப்பாடி கிழக்குக்கும் மேற்குக்கும், தெற்குக்கும் வடக்குக்குமாக துள்ளிக்குதித்தேன். இப்பொழுது ஆவியோடும் கருத்தோடும் தேவனை துதித்துப்பாடவேண்டும் என உணர்ந்தேன் (1கொரி.14:15) எனது உள்ளத்தில் ஒரு மனமாற்றம். இப்பொழுது தேவனை ஆராதிக்க இசைக்கருவிகளை உபயோகிப்பது இல்லை. இசைக்கருவி மாம்ச இச்சைகளை தூண்டுகிறதாகயிருக்கிறது என்பதை உணர்ந்தேன். பற்பல இசைக்கருவிகளைக் கொண்டு, உயிரற்ற வாத்தியங்களைக் கொண்டு, அதனுடைய இசைக்கு ஏற்றவாறு ஆடிப்பாடி துள்ளிக் குதித்து, நடனமாடி தேவனைத் துதிப்பது சாத்தானுடைய செயல்பாடுகள் என என் உள்ளத்தில் உணர்ந்தேன் . இன்று சபைகளில் இது போன்ற பிசாசுக்கடுத்த களியாட்டங்கள்தானே அரங்கேற்றப்படுகிறது.

இப்படியாக பல எண்ணங்களிலிருந்து ஒரு மனமாற்றம் ஏற்பட்டு சத்தியத்தின்படி ஒருவன் தன்னை சீர்திருத்திக்கொள்வதே மனந்திரும்புதல்.

71. **இரண்டாவது படி:**பரிசுத்தமாகுதலாகும். இது உங்களை பரிசுத்தமாக்குதலுக்கும், சரியானபடி யோசனை செய்வதற்கும் உங்கள் மனதை ஆயத்தப்படுத்துகிறது. பரிசுத்தமாகுதல் என்ற பதம் சுத்தப்படுத்தி ஊழியத்திற்கென்று தனியே, பிரத்தியேகமாக வைக்கப்படுதல் என்ற கூட்டு அர்த்தமுள்ளதாயிருக்கிறது.

72. **மூன்றாவது படி:** பரிசுத்த ஆவியாகிய அக்கினி. தேவன் தாமே நமக்குள் வாழ்வதாகும். தேவஅக்கினி நம்முடைய இருதயத்தை பாவத்தினின்று சுத்திகரித்து, பரிசுத்த ஆவியை நமக்குள் ஊற்றப்படுவதாகும். பரிசுத்த ஆவி நமக்குள் வாசம் செய்வதால் அதே ஜீவனை நாம் மீண்டும் கொண்டுவருகிறோம். நாம் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்கிறோம். தேவனுடைய ஆவி நமக்குள் வாசமாயிருப்பதால் நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம்.

73. ஒரு மனிதன் மனந்திரும்பும்போது, ஒருவேளை அவனுடைய பழைய வாழ்க்கை துன்மார்க்கமாயிருந்தது என வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு துன்மார்க்க ஸ்திரீயை பார்க்கும்போதும் அவன் சோதனைக்குட்படுகிறான். அதே விதமாக ஒரு மனிதனின் பழைய வாழ்க்கை குடிகாரனாக இருந்திருக்கலாம். ஒவ்வொரு சமயமும் மதுவின் வாசனையை அவன் நுகரும்போதெல்லாம் அவன் சோதனைக்குட்படுகிறான். பாருங்கள் இன்னுமாக பாவம் அங்கே உள்ளது. ஆனால் அவன் பரிசுத்தமாகும்போது பாவம் செய்ய வேண்டும் என்ற ஆசை அவனிலிருந்து அகன்றுவிடுகிறது. ஆனால் அவன் இன்னுமாக சோதனைக்குட்படுகிறவனாக இருந்தாலும் பாவம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் / ஆசை அவனிலிருந்து அகற்றப்படுகிறது. தேவன் மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். (தீத்.3:5) அதாவது ஒரு மனிதன் மனமாறும்போது அவன் பாவி என்ற நிலையிலிருந்து பரிசுத்தமான ஒரு நிலைக்கு மாறுகிறான். பழைய நிலையிலிருந்து ஒரு புதிய நிலைமைக்கு மாற்றப்படுகிறான்.

74. பாருங்கள் இருந்தாலும் அவன் இன்னுமாக சரியாக இல்லை. பின்பு அவன்மூன்றாம்படியாகிய பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் பெறும்போது அது அவனை சுத்திகரித்து அக்கினினால் சுட்டெரித்து தேவனுடைய ஊழியத்தில் வைக்கிறது. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் (1பேதுரு.1:12) ஆனால் பரிசுத்தமாகுதல் (இரண்டாம்படி) ஊழியத்திற்கென்று அவனை ஆயத்தப்படுத்துகின்றதாயிருக்கிறது. மூன்றாம் படி ஊழியத்தில் வைக்கிறது.

75. இயற்கைப் பிறப்பு ஆவிக்குரிய பிறப்புக்கு ஒப்பனையாயுள்ளது. இயற்கையில் ஒரு பெண் தன்னுடைய பிரசவத்தின் மூலம் ஒரு குழந்தையை பிறப்பிக்கும்போது முதலாவது அங்கு வெளிப்படும் காரியம் தண்ணீர். பின்பு இரத்தம். அதன் பின்புதான் ஜீவன். வெளி வந்த குழந்தையை எடுத்து ஒரு சிறு அடிகொடுக்கும்போது அது சத்தமிடுகிறதாயிருக்கிறது. அது என்ன? தண்ணீர், இரத்தம், ஆவி. ஒரு குழந்தை தேவனுடைய இராஜ்யத்தில் பிறக்கும்போதும் தண்ணீர், இரத்தம், ஆவி என்ற அதே விதமான வழியிலே வருகிறதாயிருக்கிறது.

76. தேவன் தாமே பரிசுத்த ஆவி (கிறிஸ்து) என்னும் நபராக மனித இருதயத்திற்கு வந்து வாழ்வதற்கு முன்பு, அவன் முதலாவதாக மனந்திரும்பி, அவன் யாருக்கு சொந்தம் என்பதை காண்பிப்பதற்காக அவருடைய நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டியதாயுள்ளது. கிறிஸ்துவை தரித்துக்கொள்ள வேண்டியதாயுள்ளது பின்பு அவன் இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படவேண்டும். அதன்பிறகு தேவனிடத்திலிருந்து பரிசுத்த அக்கினி வந்து உலகத்தின் தன்மையையும், பாவம் செய்ய வேண்டும் என்ற ஆவலையும் சுட்டெரிக்கின்றது. இப்பொழுது பாருங்கள், தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் (1யோ.5:18) பாவம் செய்வதற்கு அவனால் முடியாது. பாருங்கள் ஒரே சமயத்தில் அவன் பாவியாகவும், மீட்கப்பட்டவனாகவும், பாவியாகவும் பரிசுத்தவானாகவும், நல்லவனாகவும் கெட்டவனாகவும், புத்தியுள்ள கன்னிகையாகவும் புத்தியில்லாத கன்னிகையாகவும், வெளிச்சத்தின் பிள்ளையாகவும் இருளின் பிள்ளையாகவும், கற்புள்ளவளாகவும் விபசாரியாகவும் இருக்க முடியாது. அவ்வண்ணமாகவே ஒரே நேரத்தில் அவன் கிறிஸ்துவின் மீதும், உலகத்தின் மீதும் உரிமைக் கொண்டாட முடியாது. ஒரே நேரத்தில் அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைமீதும், ஸ்தாபனசபைகளின் மீதும் அங்கம் வகிக்கமுடியாது. ஒருவன் அடமானக்கடைக்குள் உள்ளேயும் வெளியேயும் இருக்க முடியாது. தேவனுடைய வார்த்தையை தங்கள் பின்புறமாக தள்ளிவிட்டு கிறிஸ்துவின் நாமத்தை போலியாக தரித்துக்கொண்டு தங்களை மணவாட்டி, ஐந்துவகை ஊழியங்களில் ஒருவர் எனக்கூறிக்கொண்டு மாய்மாலம் பண்ணும் மக்களை குறித்து என்ன சொல்லுகிறது? நிச்சயமாக அவர்களும் இந்த பொல்லாத விபசார சந்தியாரே.

77. ஆவியினுடைய அநுகிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. (1கொரி.12:7) இது ஆங்கிலத்தில் The Manifestation of the Spirit is given to every men to profit. எப்படியெனில் ஒருவனுக்கு (An Individual) ஆவியினாலே ஞானத்தை போதிக்கும் வசனமும் (1கொரி.12:8) வேறொருவனுக்கு (To Another) ஆவிகளை பகுத்தறிதலும், (1கொரி.12:10) கவனியுங்கள். ஒவ்வொருவனுக்கும் அதாவது ஒருவனுக்கும், மற்றொருவனுக்கும், கூட்டு மொத்தமாக ஒவ்வொருவருக்கும், அவனவன் பிரயோஜனத்திற்காக என புரிந்துகொண்டால் இதில் பிரச்சனைகள் எதுவும் இல்லை. பொதுவாக ஆவிக்குரிய வரங்கள் ஒருவனுடைய ஊழியத்தின் பாதையில் அவனுக்கு பிரயோஜனமாய் இருக்கும்படி அருளப்பட்டிருக்கிறதேயன்றி, அவனுடைய தனிப்பட்ட சுயநலனிற்காக / பிரயோஜனத்திற்காக அல்ல. தமிழ் மொழிப்பெயர்ப்பில் அர்த்தமும் மாறவில்லை, உபதேசமும் மாறவில்லை. என்னுடைய ஊழியத்தின் பாதையில் எனக்கு பகுத்தறிதல், மற்றொருவனுடைய ஊழியத்தின் பாதையில் அவனுக்கு பிரயோஜனமாக குணமாக்கும் வரமாகும். ஆக எங்கள் இருவருக்கும் அவரவர்கள் பிரயோஜனத்திற்காக பகுத்தறிதல் மற்றும் குணமாக்கும் வரங்கள். இந்த வார்த்தையில் தவறு என்ன? ஆக இந்த காரியத்திலேயும், நான் பகுத்தறிந்ததில் டாக்டர். புஷ்பராஜ் அவர்களிடம் அநேக தவறுகளை காண்கிறேன். அவனவனுடைய பிரயோஜனத்திற்கு என்ற உடன் ஒருவனுடைய தனிப்பட்ட பிரயோஜனத்திற்கு என்று கருதக்கூடாது. இதை பன்மையில் அவனவனுடைய ஊழியத்திற்கு என கூறப்பட்டுள்ளது. ஊழியங்களில் வித்தியாசங்கள் உண்டு. அவனவனுடைய ஊழியத்திற்கு என பிரயோஜனமாயிருக்க அவனவனுக்கு வித்தியாசமான வரங்கள். ஆதலால் தான் தொடக்கத்திலே வரங்களின் வித்தியாசம், ஊழியங்களில் வித்தியாசம் எனக்கூறப்பட்டுள்ளது.அதோடு மட்டுமல்ல கிரியைகளிலும் வித்தியாசங்கள் உண்டு. வித்தியாசமான பணிகள், வித்தியாசமான வரங்கள் அவனவனுடைய பிரயோஜனத்திற்காக / பணியின் நலத்துக்காக. Diversity of Gifts – வரங்களில் வித்தியாசம், Difference of Administration – ஊழியங்களில் வித்தியாசம், சபையை நிர்வகித்தல் – Diversities of Operation – கிரியைகளில் வித்தியாசம்.

78. 1கொரி.12:29-31 வசனங்களை டாக்டர் சுட்டிக்காட்டி எல்லாரும் அந்நிய பாஷை பேசுகிறார்களா? (Speak with Tongues) என்பது புறம்கூறுதல். எல்லாரும் அந்நியபாஷை பேச கூடாது என்று அர்த்தம் என்கிறார். இங்கு பவுல் பாஷைகளை குறித்து (Tongues) பேசுகிறாரேயன்றி அந்நிய பாஷை (Unknown Tongues) குறித்து அல்ல. இதை புரிந்துக்கொள்ளாமல் டாக்டர் விளக்கம் கொடுக்கிறார். வேதபுத்தகம் எழுதப்படாத காலத்திற்கு முன் சபைக்கு அந்நிய பாஷையும் அதற்கான வியாக்கியானம் வரமாக அருளப்பட்டது. அன்றைய சபைக்கு அந்நிய பாஷை வரம் தேவை என கர்த்தர் கண்டார். ஆனால் இப்பொழுது முழுதேசமும் கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய பாஷையையும் கிருபையாக மொழிப்பெயர்த்து வேதத்தை நம் கைகளில் தந்தருளியதால் அதினாலே சகல உபதேசங்களிலும் சொல்லி கொடுத்து விட்டார். நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம் என 1கொரி.13:30 ல் எழுதி விளக்குகிறார். எல்லாரும் அந்நிய பாஷை பேசக்கூடாது என்று அர்த்தம் என்கிறார். எல்லாரும் அந்நிய பாஷை பேசுகிறார்களே என்கிறார். அதாவது பேச வேண்டும் என்கிற தேவையில்லை என்கிறார். ஆனால் எல்லாரும் அந்நிய பாஷை பேசுகிறார்களா? என்றால் இல்லை. சிலர் பேசுகிறார்கள், அனைவரும் அந்நிய பாஷை பேசவில்லை. அவர்கள் மனுஷரிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறார்கள். அவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகும்படி பேசுகிறான். சபைக்கு பக்திவிருத்தி என்றால் அவன் அதன் அர்த்தத்தையும் சொல்ல வேண்டும். ஆதலால் அந்நிய பாஷை பேசுகிறதற்கு தடை பண்ணக்கூடாது.(1கொரி.14:39) ஆதலால் அந்நிய பாஷை பேசக்கூடாது என டாக்டர் எழுதுவது அவருடைய சொந்த கருத்து ஆகும். அது வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லை. இவர் அந்நிய பாஷை பேசுகிறதற்கும் பற்பல பாஷை பேசுகிறதற்கும் உள்ள வித்தியாசத்தை அறியாது ஏதேதோ எழுதி குருடர்களுக்கு வழிகாட்டும் குருடராயிருக்கிறார்.

79. மனந்திரும்பினவர்கள் எல்லார் மேலும் நாம் வேண்டிக்கொள்ளாமலே ஆவியானவர் நம்முடன் வந்து விடுகிறார் என எபே.1:13 யை சுட்டிக்காட்டி தன்னுடைய வேதவாக்கியங்களின் பேதமையினால் எழுதுகிறார்.எபே.1:13 என்னக் கூறுகிறது? நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தை கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குதத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டிருக்கிறீர்கள் என்பதாகும். மனந்திரும்பின எல்லார் மேலும் நாம் வேண்டிக்கொள்ளாமலே ஆவியானவர் நமக்குள் வந்துவிடுகிறார் என்று கூறப்படவில்லை. இவர் ஏனோதானோ என்றுதான் ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வேதவாக்கியங்களை கையாளுகிறார். பாருங்கள் ஒருவன் மனந்திரும்ப வேண்டும், அதில் அநேக காரியங்கள் உண்டு. பின் பாவமன்னிப்புக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால்ஞானஸ்நானம் பெற வேண்டும். பின் பரிசுத்த ஆவியை பெற வேண்டும். அதுதான் ஒருவனுடைய இரட்சிப்பு. இதை விட்டுவிட்டு ஜான், ஜோசப், மரியாள், லீதியாள் என்று பெயர்களை வைத்துக்கொண்டு, ஏதோ ஒருசபைக்கு சென்று வருவது, மனந்திரும்பின, இரட்சிப்பை பெற்ற அனுபவம் இல்லை. இதில் டாக்டர் பழகி விட்டதினால், இவருக்கு இரட்சிப்பு என்ன என்று தெரியவில்லை. இரட்சிப்பின் அனுபவம் இவரிடத்தில் இதுவரை கிடையாது. இங்கு ஒன்றை கவனியுங்கள். தமிழில் விசுவாசிகளானபோது என்று கூறப்பட்டுள்ளது. இது ஆங்கிலத்தில் After ye heard the word of Truth என உள்ளது. அதாவது நீங்கள் சத்திய வசனத்தை கேட்டு விசுவாசிகளான பிறகு என்று உள்ளது. விசுவாசிகளானபோது அல்ல. ஆக முதலில் விசுவாசம், மனந்திரும்புதல் பின் ஞானஸ்நானம், பின் பரிசுத்த ஆவி, பின் முத்திரையிடப்படுகிறோம். இவரது உபதேசம் மனந்திரும்பின எல்லார் மேலும் நாம் வேண்டிக்கொள்ளாமலே ஆவியானவர் நம்முள் வந்துவிடுகிறார் என எபே.1:13 யை எடுத்து தான் குருடனாயிருந்து குருடர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார் என்றே வேதவாக்கியங்களின் அடிப்படையில் தோன்றுகிறது.

80. பெரும்பாலானோர் ஆவிக்குரிய வரங்களுக்காக உபவாசம் இருந்து ஜெபித்து வருகிறார்கள். இந்த வரத்தை, அந்த வரத்தை தாரும் என குறிப்பிட்ட வரங்களுக்காக ஜெபிக்கிறார்கள். இவர்கள் வேதவாக்கியங்களை

அறியவில்லை. தேவனுடைய ஆவியையும் பெறவில்லை. ஆவியின் வரங்களை டாக்டர் கூறுவது போன்று கிறிஸ்துவின் மூலமாக கேட்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதும் தவறான போதனை. இயேசு என் நாமத்தினால் நீங்கள் வேண்டிக்கொள்வது எதுவோ அதை பிதாவானவர் உங்களுக்கு அருளுவார் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் டாக்டர் கிறிஸ்துவின் மூலமாக பிதாவிடம் கேட்டு பெற்றுக்கொள்ளலாம் என்று கூறுகிறார். கவனியுங்கள் நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்க வேண்டும் என 1யோ.5:14 ல் வாசிக்கிறோம். அப்படியானால் ஆவியின் வரங்கள் குறித்து அவருடைய சித்தங்கள் என்ன? இவைகளையெல்லாம் அதாவது வரங்கள் அனைத்தையும் அந்தஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு (ஒருவனுக்கும், மற்றொருவனுக்கும்) பகிர்ந்துக்கொடுக்கிறார். (As he will) ஆக ஆவியின் வரங்களை பகிர்ந்து கொடுத்தல் தேவனுடைய சித்தம். ஆவியின் வரங்களை பெற்றுக்கொள்வது டாக்டருடைய சித்தம் அல்ல, உங்களுடைய சித்தம் அல்ல, என்னுடைய சித்தம் அல்ல, அது நம்முடைய சுய விருப்புக்கு அப்பாற்பட்டது. ஆக டாக்டர் தன் லௌகிக ஞானத்தினால் எழுதும் ஆவியானவரை நோக்கி ஆவியானவரே எனக்கு இதை தாரும், அதை கொடும் என கேட்கக்கூடாது. மாறாக ஆவியினால் சம்பந்தப்பட்ட அனைத்தையும், கிறிஸ்துவின் மூலமாக கேட்டு பெற்றுக்கொள்ள முடியும் என்பது வேதவாக்கியங்களில் அவர் அறியாமையை சுட்டிகாட்டுகிறது. முடிவாக யாரும் ஆவியின் வரங்களை தன் சுய விருப்பத்தின்படிஜெபத்தினாலோ, உபவாசத்தினாலோ பெற்றுக்கொள்ள முடியாது.

81. ஒவ்வொரு வரமும் தனித்தன்மையுடையது. வேறொருவனுக்கு என்ற வார்த்தையைஒவ்வொரு வரத்தை குறிப்பிடும்போதும் எழுதுகிறார். அதன் அர்த்தம் எல்லா வரங்களையும் ஒருவனுக்கே கொடுப்பதில்லை என்று டாக்டர் எழுதுகிறார்.இது வரவேற்கத்தக்கது. ஆனால் சகோ.சாம் ஜெபத்துரை அனைத்து வரங்களையும் நாடுங்கள் என்கிறார். அது அவருடைய சுயகருத்து.இதற்குவேதவாக்கியங்களில் இடமில்லை.

82. பரிசுத்த ஆவியின் வரங்கள் ஆவியானவர் நமக்கு கொடுப்பதாகும். அவர் தமக்கு சித்தமானவனுக்கு அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்றே கொடுக்கிறார்.இதை யாரும் கேட்டு பெற்றுக்கொள்ள முடியாது. டாக்டர் சரியாக எழுதுகிறார். வரங்களை ஜெபத்தினாலோ, உபவாசத்தினாலோகேட்டு பெற்றுக்கொள்ள முடியாது.

83. டாக்டர் அடுத்தும்ஒரு தவறு செய்கிறார். பவுல் கொரிந்து சபைக்கு எழுதும் நிருபம், கொரிந்துவில் உள்ள சபைகளையும், சபைக்குள்ளே இருக்கும் விசுவாசிகளையும் மனதில் வைத்தே இந்த நிருபத்தை எழுதுகிறார். ஆகவே கூறுகிறேன்கொரிந்து சபைக்கு என்று எழுதுகிற விஷயம் மற்ற சபைக்கு பொருந்தாது. இது என்ன ஒரு விஷமத்தனமான உபதேசம்? கொரிந்து சபைக்கு, எபேசு சபைக்கு, கொலேசேயருக்கு எழுதினதான, இதுபோன்ற நிருபங்கள் யாவும் அந்தந்த சபைக்கு மாத்திரமே உரியது என்று கூறமுடியாது. நிருபங்கள் அந்தந்த சபைக்கு எழுதப்பட்டது உண்மைதான்.அவ்வாறாக எழுதப்பட்டாலும் அது அனைத்து சபைகளுக்கும் பொதுவானது. இது நம் அனைவருக்கும் திருஷ்டாந்தமாக எழுதி வைக்கப்பட்டுள்ளது. இது அனைத்து சபைகளுக்கும் பொருந்தும். ஒரு சபையில் காணப்படும் தவறுகள் இதர பல சபைகளிலும் காணப்படலாம். ஆதலால் உபதேசம் என்பது அனைத்து சபைகளுக்கும் பொருந்தக்கூடியது. தீத்துக்கு, தீமோத்தேயுவுக்கு எழுதும் நிருபங்கள் அனைத்தும் இந்த இருவருடைய நலனுக்காகத்தானா? மற்றவர்களுடைய நலனுக்காக இல்லையா? வேதவாக்கியங்கள் எல்லாம் (ஆதிமுதல் வெளிப்படுத்தல் வரை) தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன், அது இந்தியன், அமெரிக்கன், ரோமன் யாராக இருந்தாலும் சரி அவர்கள் அனைவரும் தேறினவனாகவும், எந்த நற்கிரியைகளையும் செய்ய தகுதி உள்ளவனாகவும் இருக்கும்படியாக,அவைகள் அனைத்தும் (கொரிந்து சபைக்கு எழுதியது, பிலதெல்பியா சபைக்கு எழுதியது, எபேசு சபைக்கு எழுதியது அனைத்தும்) உபதேசத்திற்கும் கடிந்துக்கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பித்தலுக்கும், பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கிறது. (2தீமோ.3:16,17) ஆக கொரிந்து சபைக்கு எழுதப்பட்ட நிருபம் கொரிந்து சபைக்கு மாத்திரம் அல்ல, இதர சபைகளுக்கும் திருஷ்டாந்தமாக எழுதப்பட்டது. பாருங்கள் அப்.பவுல் கொலேசேயருக்கு எழுதும் பொழுது இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்ட பின்பு இது லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள் : லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள் என்கிறானே (கொலோ.4:16) ஆக ஒரு சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தை அனைவரும் இதர சபையினரும் வாசிக்க வேண்டும். அதற்கு கீழ்படிய வேண்டும். ஏனென்றால் அவைஅனைத்தும் திருஷ்டாந்தமாக நம் அனைவருக்கும் எழுதப்பட்டுள்ளது. ஆக டாக்டர் தன் சுய ஞானத்தினால் கொரிந்து சபைக்கு எழுதப்பட்டது கொரிந்து சபைக்கு மாத்திரமே என்பதுஒரு தவறான போதனை. நாம் லவோதிக்கேயா சபைக்காலத்தில் வாழ்கிறோம். ஆனால் லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்டதை மாத்திரம் அல்ல, அனைத்து சபைக்கும் எழுதப்பட்டதை தியானிக்க வேண்டும், உபதேசங்களுக்கு கீழ்படிய வேண்டும்.

84. நிச்சயமாக வேதத்தை முறைப்படி வாசித்து, வசனத்தின் அடிப்படையில் ஜீவிப்பவர்கள் மட்டும்தான் இவர்களையும் (டி.ஜி.எஸ், மோகன் சிலாசரஸ்,ஆவின்பால் போன்றவர்கள்) இவர்களுக்கடுத்தகிரியைகளையும் அடையாளம் காணமுடியும். அதோடு மட்டுமல்ல டாக்டர் புஷ்பராஜ் அவர்களின் பித்தலாட்ட உபதேசங்களையும் மாறுபாடான போதனைகளையும் அடையாளம் காணமுடியும். என்னை போன்றவர்களுக்குத்தான் தெரியும். இவர்கள் அனைவரும் மக்களிடம் பொய் பேசுவதையே தங்களுடைய போதனைகளாக கொண்டுள்ளார்கள். தவறான உபதேசங்களை தங்கள் பேர் பிரஸ்தாபத்தைக்கொண்டு சபைக்குள், விசிவாசிகளுக்கு முன் விதைக்கிறார்கள். டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் தனக்குள்ளும் ஆவியானவர் உண்டு என்கிறார். நல்லது. ஆனால் அது களைமேல் விழுந்த மழையாக இருக்குமோ என்பது எனது பகுத்தறிதலாகும்.

85. இன்றைய சபைக்கு அந்நிய பாஷை கொடுக்கப்படவில்லை. அது உண்மை. ஆனால் இப்பொழுதும் அந்நிய பாஷை பேசுவது தனிநபரின் வழியாக செயல்படுகிறது என்று டாக்டர்தன் சுயஞானத்தினால் எழுதுகிறார். இப்பொழுது கவனியுங்கள். அந்நிய பாஷை பரிசுத்த ஆவியினால் சபை பக்திவருத்திக்காக கொடுக்கப்பட்டுள்ளது.

சபை பக்தி விருத்திக்காக கொடுக்கப்பட்ட ஊழியங்களும் உண்டு.தியானியுங்கள் 1கொரி.12:4,5,10 மற்றும் எபே.4:12,13 ஆக கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபை இருக்கும் வரை அந்நிய பாஷை பேசுதல் உண்மையான சபையில் காணப்படும். வரங்கள் எப்பொழுது ஓய்ந்து போகும்? கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியடையும்வரை, சபைக்காலம் நீடித்திருக்கும் வரை, சபை எடுத்துக்கொள்ளப்படுதல்வரை பரிசுத்த ஆவியும், வரங்களும், ஊழியங்களும், பற்பல பாஷைகளைப் பேசுதல், அந்நிய பாஷை பேசுதல் இருக்கும்.

86. அடுத்து டாக்டர். நான் இரட்சிக்கப்பட்ட போதே ஆவியானவர் எனக்குள் வந்துவிட்டார் என்று எபே.1:13, யோ.14:23,24,25 வசனங்களை குறிப்பிடுகிறார். இதுவும் தவறு. நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தை கேட்டு விசுவாசிகளானபோது என்று எபே.1:13ல் வாசிக்கிறோம். ஆனால் இது ஆங்கிலத்தில் After ye heard the word of Truth என உள்ளது. அதாவது சத்திய வசனத்தை கேட்டபிறகு என உள்ளது. சத்திய வசனத்தை கேட்டு விசுவாசிகளானபிறகு தான், விசுவாசிகளானபோது அல்ல.அடுத்துAfter ye believed என உள்ளது. அதாவது விசுவாசிகளான பிறகு, விசுவாசிகளானபோது அல்ல.

87. வசனம் என்ற ஞானப்பாலின் மூலமாகத்தான் நீஆவிக்குரிய ஜீவியத்தில் பக்தி விருத்தி அடைய முடியும். அந்நிய பாஷையோ அல்லது பற்பல பாஷைகளையோ பேசுவதினால் நீ பக்தி விருத்தி அடைய முடியாது. வசனம் ஜீவனுள்ளது. ஜெபம் சுகமாக்குகிறது. வசனம் கிரியை செய்கிறது. வசனத்திற்கு கீழ்படிகிறவர்கள் மேல் பிதா அன்பாயிருப்பார். (யோ.14:16,24,25) வசனமானது உன்னை புடமிடுகிறது.வசனமானது உன் வாழ்க்கை பாதைக்கு வெளிச்சத்தை கொடுத்து வழி நடத்துகிறது. வசனத்திற்கு பயப்படுகிறவர்களைத்தான் நோக்கி பார்ப்பேன் என்று கர்த்தர் கூறுகிறார். வசனத்திற்கு கீழ்படியாதவனுடைய ஜெபத்தை கர்த்தர் அருவருக்கிறார். (நீதி.29:3) இப்படியாக ஆவியானவர் தெளிவாக வசனத்தைக்குறித்துஎழுதி நம்மை உணர்த்தும்போது ஷிரபலா! சங்கர பலா! என உளறித்தள்ளி ஆவியானவரை அவமானப்படுத்துகிறார்கள்.

88. அடுத்து கிறிஸ்தவர்களுக்கு சுயபுத்தியில்லை என்பார்கள். இந்தியாவில் சபைக்குள் வந்த எல்லா புது புது உபதேசங்களும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும். ஒரு முறை ஒரு ஊழியர் அமெரிக்கா சென்று வந்தால் போதும். அவர் அங்கிருந்து ஒவ்வொரு புதுபுது உபதேசங்களையும் கற்றுக்கொண்டு பணத்தோடு இந்தியா இறங்கும்போது, கொண்டு வந்த பணத்தில் மூன்றில் இரண்டு பங்கை தனக்காக வைத்துக்கொண்டு, மீதமுள்ள ஒரு பங்கை தான் கொண்டு வந்த உபதேசங்களுக்காக செலவு செய்கிறார்.அதுதான் உண்மை. இப்பொழுது இவர் சென்றுவரும் வெளிநாடுகளிலிருந்து பணத்தை இறக்குமதி செய்யவில்லையா என்ற கேள்வி எழும்புகிறது.அதாவதுஅந்நிய பாஷை ஒரு போலியான பாஷை அனுபவம், ஒரு மாயை என எழுதுகிறார். அந்நியபாஷை ஒன்றும் போலியானது கிடையாது. இன்றைய பெந்தெகொஸ்தே சபையினர் அந்நியபாஷை என்று கூறி பேசும் அக்கர, புக்கர பாஷை யாவும் போலியானது.

89. **அந்நிய பாஷை (Unknown Tongue) குறித்த விஷயத்தில் 1கொரி.14 அதி அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.** ஆதலால் அதை வசனவாரியாக தியானிப்போம் :

1. வசனம் 2. அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்கள் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான். For he that speaketh in an unknown tongue speaketh not un to men but un to God : For no men understand him : however in his Spirit he Speaketh Mystries. அந்நிய பாஷையில் பேசுகிறவன் மனிதர்களிடத்தில் பேசவில்லை. மாறாக தேவனிடத்தில் பேசுகிறான். ஆதலால் அவன் பேசுகிறதை ஒருவனும் அறிகிறதில்லை. அவனும் அதை அறியாமல், தேவனிடத்தில் ஆவியில் இரகசியங்களை பேசுகிறான்.

2. வசனம் 4. அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாக பேசுகிறான். இவைகள் பேசுவதினால் சபைக்கோ இதர விசுவாசிகளுக்கோ பயன் இல்லை. மாறாக அது அதை பேசுகிறவனுடைய பக்திவிருத்திக்கடுத்ததாகும்.

3. வசனம் 5. பவுலின் சரியான ஆலோசனை. நீங்கள் அனைவரும் அந்நிய பாஷை பேசும்படி நான் விரும்புகிறேன், ஆனால் சபையில் அந்நிய பாஷை பேசுகிறவன் சபை பக்திவிருத்திக்காக தான் பேசிய அந்நிய பாஷையின் அர்த்தத்தை அவனே சபைக்கு சொல்ல வேண்டும்.

4. வசனம் 6. பவுல் அந்நிய பாஷை பேசுகிறவர்களிடம் ஒரு கேள்வியை முன் வைக்கிறான். நான் உங்களிடத்தில் வந்து அந்நிய பாஷைகளை பேசினால் என்னாலே உங்களுக்கு பிரயோஜனம் என்ன என்று கேட்கிறான். அது சரிதான். நீங்கள் சபையில் வந்து அந்நிய பாஷை பேசுகிறீர்கள். அதற்கு அர்த்தம் சொல்லப்படுவதில்லை. அப்படியானால் நீ தேவனிடத்தில் பேசுவதில் சபைக்கு என்ன பலன்? உங்கள் வீட்டில் நீங்கள் தனிப்பட்ட முறையில் பேசிக்கொள்ளலாமே. ஒருமுறை ஒரு சபை பாஸ்டர், வயதானவர், சத்தியத்தை அறிந்தவர், எனக்கு நன்கு அறிமுகமானவர். அவர் என்னிடம் கூறியதாவது : என்னுடைய சபையில் ஒருவர் இருக்கிறார். அந்நியபாஷை பெயரில் எதை எதையோ பேசி தொலைத்து விடுகிறார்.அவர்அதற்கு அர்த்தம் சொல்வதில்லை. சபையில் இதுகுறித்து பிரச்சனை எதுவும் வரக்கூடாது என்பதற்காக நானே ஒன்றை அர்த்தமாக சொல்லி தொலைக்க வேண்டியுள்ளது என்றார். எனக்கு அதில் ஒருமனப்பாடு இல்லை. ஆனாலும் சபையை திருப்தி படுத்த இப்படியாக ஒரு பொய்யான அர்த்தத்தை அந்த அந்நிய பாஷைக்கு சொல்லி சமாளித்து வருகிறேன் என்றார். பாருங்கள் அந்நிய பாஷையினால்சபைக்குள் இப்படிப்பட்ட விபரீதங்கள் அறிந்தோ அறியாமலோ நடைபெறுகிறது.

5. வசனங்கள் 7 முதல் 9 வரை.ஒருவன் அந்நியபாஷையில் பேசி அதற்கு அர்த்தம் சொல்லாவிட்டால், தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது என்னதென்று யாருக்கும் தெரியாது. அப்பொழுது அவன் அதை

ஆகாயத்தில் பேசுகிறவர்களைப்போல் இருப்பான் என கடிந்துக்கொள்கிறான். அதாவது சபையில் அந்நியபாஷை பேச தடையில்லை. பேசுங்கள். அப்படியானால் அதன் அர்த்தத்தை நீங்கள் சொல்ல வேண்டும். நீங்கள் சொல்லாவிட்டால் அது நீங்கள் ஆகாயத்தை பார்த்து ஆகாத பாஷை ஒன்றைப் பேசுவது போல் இருக்கும்.

6. வசனம் 10. உலகில் 6500 பாஷைகள் உண்டு என்ற கணக்கெடுப்பு. நீங்கள் பேசும் அந்நிய பாஷை இதில் ஒன்றாகயிருக்க முடியாது. ஆயினும் பேசும் அந்த பாஷைக்கு அர்த்தம் இருக்கும். அர்த்தம் இல்லாமல் பாஷை இல்லை. ஏனென்றால் ஒருவர் பேசுவது என்ன என்று அறிந்துக்கொள்ள அவர் பேசிய பாஷைக்குஅர்த்தம் வேண்டும். நாம் எப்படி தமிழில் பேசுகிறோமோ அதேபோன்று அந்த நபரும் தான் பேசும் அந்நிய பாஷையை கிரமமாக, ஒழுங்காகபேச வேண்டும். இதை விட்டுவிட்டு அக்கர, புக்கர என்பது என்ன? அது பிசாசு. இன்றைக்கு பெந்தெகொஸ்தே சபை பிசாசின் கரத்தில் தான் உள்ளது. பிசாசினால் தான் வழிநடத்தப்படுகிறது. ஆதலால் தான் நம் மத்தியில் உள்ளபெந்தெகொஸ்தே சபைகள் யாவும் தேவஆவியினால் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளுக்கு மாறாக செயல்பட்டு தங்கள் கோட்பாடுகளை, உபதேசங்களை சபைக்குள் நுழைத்து வருகிறது. அவர்கள் குருடர்களாயிருந்து குருடர்களுக்கு வழிகாட்டுகிறார்கள்.

7. வசனம்11. அந்நிய பாஷை பேசுகிறவனுடைய கருத்தை நான் அறியாதிருக்கிறபடியினால் பேசுகிறவனுக்கு நான் அந்நியன். பேசுகிறவனும் எனக்கு அந்நியனாவான் என எழுதுகிறான். இதுசரியே.

8. வசனம் 12. நீங்கள் ஆவிக்குரிய வரங்களில் எதில் பங்கு கொள்கிறீர்களோ அதினால் சுயபக்திவிருத்தி அடைய வேண்டும். சபை பக்திவிருத்தி அடையவே பரிசுத்த ஆவியின் வரங்கள். ஆவியின் வரங்கள் அதை பெறும் நபருக்காக, அவனுடைய பக்தி விருத்திக்காக மாத்திரம் அல்ல.நீ பெற்றுள்ள பரிசுத்த ஆவியின் வரத்தினால் தேவனுடைய சரீரமாகிய சபை பக்திவருத்தி அடைய வேண்டும்.

9. வசனம் 13. அந்நியபாஷையில் பேசுகிறவன், அதன் அர்த்தத்தை சொல்ல வேண்டும். ஏனென்றால் : வசனம் 14 நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணுகிறேன்.என் ஆவி தேவனோடு விண்ணப்பம் பண்ணுகிறது. ஆனால் அதன் கருத்து, என் விண்ணப்பத்தின் கருத்து சபைக்கு பயனற்றதாக இருக்குமே?

10. வசனம்16. நீ அந்நிய பாஷையில் ஆவியோடும், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுகிறாய். ஆனால் கல்லாதவன் உன்னுடைய விண்ணப்பத்திற்கும், ஸ்தோத்திரத்திற்கும் **ஆமென்** என்று அவன் எப்படி சொல்லுவான்? நீ பேசுகிறதை அவன் அறியானே. பாருங்கள் நம் மத்தியில் ஒருவர் ஜெபம் பண்ணுகிறரர். ஜெபம்பண்ணி முடிந்தவுடன் அப்படியே ஆக கடவது என்று கூறி **ஆமென்** என்கிறோம். ஜெபம் பண்ணுகிறவர் என்ன பேசினார் என்று எனக்கு தெரியாதிருக்கும் போது **ஆமென்** என்று நான் எப்படி சொல்லுவேன்?

11. வசனம் 17.ஆனால் இந்த ஜெபத்தினால், ஸ்தோத்திரத்தினால்ஒருவன் பக்திவிருத்தி அடைய மாட்டானே.

12 வசனம்.19. ஆதலால் தான் பவுல் கூறுகிறான் : நான் சபையில் அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளை பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளை பேசுகிறது என் விருப்பம் என்கிறான். ஆனால் நாமோ அடுத்தவர்களுக்கு பிரயோஜனமாக இருக்கிறோமோ, இல்லையோ ; நான் அந்நிய பாஷை பேசுகிறவன் என்று பெருமைபட்டு எதை எதையோ அக்கர புக்கர எனசொல்லி தீர்த்து விடுகிறோம்.முடிவில் அது அவன் என்ன பேசினான் என்பது அவனுக்கே தெரியாது. அவன் பேசிய கருத்தும் அவனுக்கே தெரியாத நிலையில் நமக்கு அதாவது அதை கேட்டவர்களுக்கு எப்படி தெரியும், புரியும்? ஆக இந்நாட்களில் இந்த பெந்தெகொஸ்தே சபையினர் பேசும் அந்நிய பாஷைகள் யாவும் மாயையும், மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது.

13. வசனம் 21. மறு பாஷைக்காரராலும் மறு உதடுகளாலும் (Men of other tongues and other lips) இந்த ஜனங்களிடத்திலே பேசுவேன். ஆனாலும் அவர்கள் எனக்கு செவி கொடுப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

(அ) நம்மத்தியில் உள்ள பெந்தெகொஸ்தே சபையை கவனியுங்கள். தேவபக்திகேதுவான சத்தியத்தை அறிகிற அறிவு முதலாவது இவர்களிடத்தில்கிடையாது. இவர்களுக்கு இந்த அக்கர புக்கர மாத்திரமேயன்றி, வேதவாக்கியங்களுக்கடுத்த காரியங்கள் எதுவும் தெரியாது. ஒரே தேவன் - பிசாசு விசுவாசித்து நடுங்குகிறான். (யாக்.2:19) ஆனால் இவர்களோ மூன்று தேவர்கள் என்கிறார்கள். அந்த ஒரே தேவனும் பிதாவும் நம் எல்லார் மேலும் (பிதா) எல்லாரோடும்(குமாரன்) எல்லாருக்குள்ளும் (பரிசுத்த ஆவி) இருக்கிறவர்.(எபே.4:6) ஒருவரே தேவன், பிதாவாக, குமாரனாக, பரிசுத்த ஆவியாக. ஆனால் அவர்கள் மூவர், மூவரும் சேர்ந்து ஒருவர் என்கிற திரித்துவம் ஒரு பித்தலாட்டம். இந்த பெந்தெகொஸ்தே போதகர்கள், ஜனங்கள் பிதா யார்? குமாரன் யார்? பரிசுத்த ஆவி யார்? என்ற வெளிப்பாடற்ற ஜனங்கள், மழையில் வளரும் களைகள்.

(ஆ) அடுத்து பாவமன்னிப்பு இயேசு கிறிஸ்து நாமத்தில் தான் உள்ளது. மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் இயேசு கிறிஸ்து நாமத்தினால் எருசலேமிலிருந்து பிரசங்கிக்கப்பட்டது. ஆனால் இவர்கள் ஒரு மனந்திரும்புதல் அற்ற, பாவமன்னிப்பு அற்ற, ஒருபேர் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள்.

(இ) தேவனுடைய வசனம் தூஷிக்கப்படாத படிக்கு, பாலியஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்கவேண்டும். ஆனால் இந்த பெந்தெகொஸ்தே பெண்களோ, வெள்ளாடை அணிந்து ஊர்ஊராக ஊழியத்தின் பெயரில் சுற்றி வருகிறார்கள்.

(ஈ) மயிரைப் பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலான, புறம்பான அலங்கரிப்பு, பெண்களுக்கு அலங்காரமாக இல்லை (1பேது.3:3) ஆனால் ஸ்தாபன சபை பெண்களோ தலை முதல் கால் வரை ஆபரணங்களை அணிந்து சிலையை போல் காணப்படுகிறார்கள். இப்படியாக நாம் எழுதிக்கொண்டே போகலாம். பாருங்கள் இவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுப்பதில்லை. ஆனாலும் அக்கர புக்கர எனக்கூறி அந்நிய பாஷை பேசுவதாக தங்களை வஞ்சித்துக்கொள்கிறார்கள்.

14. வசனம் 22. ஆக அந்நிய பாஷை விசுவாசிகளுக்கு அதாவது பரிசுத்த ஆவியை பெற்ற விசுவாசிகளுக்கு அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அடையாளம் இல்லை. ஏனென்றால் மழை நல்லோர் மீதும் தீயோர் மீதும் பெய்கிறது. கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம், பிசாசுகளை துரத்தினோம். அநேக அற்புதங்களை செய்தோம் என்பார்கள். இதற்கு பதில் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரம செய்கை காரர்களே என்னை விட்டு அகன்று போங்கள் என்பதாகும். ஏனென்றால் இவர்கள் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரம் இருந்தார்கள். அதன்படி தங்களை காத்துக்கொள்கிறவர்களாக இருக்கவில்லை. கேட்டதை மறந்தார்கள். கிரியை

இல்லாத விசுவாசத்தை உடையவர்ளாயிருந்தார்கள். ஆனால் கிரியை இல்லாத இவர்களுடைய விசவாசமோ செத்தது.

15. வசனம் 26. நீங்கள் கூடி வந்திருக்கிற போது (சபை) ஒருவன் சங்கீதம் பாடுகிறான். ஒருவன் போதகம் பண்ணுகிறான். ஒருவன் அந்நிய பாஷை பேசுகிறான். ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான். ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான் இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாக செய்யப்பட கடவது. கவனியுங்கள் அந்நிய பாஷை, இரகசியம், வியாக்கியானம் இந்த மூன்றும் சபை கூடுகிற வேளையில் இணைந்து செயல்பட வேண்டும்.

16. வசனம் 27. சபையில் இரண்டு பேர் மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் பேசலாம். இந்த மூவரும் ஒவ்வொருவராக பேச வேண்டும். ஆளுக்கொரு பக்கம் பேச கூடாது. ஒருவனால் பேசப்பட்ட அந்நிய பாஷைக்குஅவனோ அல்லது மற்றொருவனோ அர்த்தம் சொல்ல வேண்டும். பாருங்கள் சபையில் பேசப்படும்அந்நிய பாஷைக்கு / பரலோக பாஷைக்கு அர்த்தம் சொல்லப்பட வேண்டும்.

17. வசனம் 28. சபையில் பேசப்படும் அந்நிய பாஷைக்கு அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாமல் சபையில் பேசக்கூடாது. மாறாக உனக்கும், தேவனுக்கும் தெரியும்படியாக, உன் வீட்டில் பேசிக்கொள்.

18. வசனம் 39,40. முடிவாக அந்நிய பாஷை பேசுகிறதற்கு தடைபண்ணாதிருங்கள். சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை, சபை இந்த பூமியில் இருக்கும் வரை அந்நிய பாஷை பேசுகிறதற்கு தடைபண்ணக்கூடாது. அதே வேளையில் நாம் மேற்கண்ட படி சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும், செயல்பட வேண்டும்.Let all things be done decently and in order.

19. பெந்தெகொஸ்தே சபை ஆவிக்குரிய சபை என்று கூறிக்கொண்டு தேவனுடைய நாமத்தை தூஷிக்கிறார்கள். பெந்தெகொஸ்தே நாள் சபை எப்படி உருவாகியது? தேவனுடைய வசனத்தை கேட்ட ஜனங்கள், இருதயத்தில் குத்தப்பட்டார்கள். மனந்திரும்பினார்கள் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஏறக்குறைய 3000 பேர் பெந்தெகொஸ்தே நாளன்று ஞானஸ்நானம் பெற்றார்கள். அவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். இதே அனுபவம் இன்றைய பெந்தெகொஸ்தேகாரர்களிடம் உண்டா? இல்லையே. ஆக பெந்தெகொஸ்தே சபை என்பது ஒரு ஸ்தாபனம் அல்ல.மாறாக இது ஒரு அனுபவம். இந்த அனுபவம் ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் உரியது. ஆம் இது ஒரு உன்னத அனுபவம். நம்மத்தியில் உள்ள பெந்தெகொஸ்தே சபைகள் இம்மைக்குரிய, இப்பிரபஞ்சத்திற்குரிய அனுபவங்களை கொண்டு வழிநடத்தப்படும் ஒரு உலக பிரகாரமான ஸ்தாபன சபையாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றவர்களை கொண்ட ஜனங்கள்தான் தேவனுடைய சபை. இதற்கு தலை கிறிஸ்து. இந்த சபை கிறிஸ்துவுக்கு கீழ்படிந்திருக்கிறது. பிரதம பேராயர், பேராயர் என்ற ஒரு நபருக்கு அல்ல, தலைமை போதகர் என்ற மனுஷருக்கு அல்ல. மாறாக கிறிஸ்துவுக்கே கீழ்படிகிறது. அதாவது தேவனுடையவார்த்தைக்கே கீழ்படிகிறது.தியானியுங்கள் அப்.2:38, 1பேது.3:3, 3:5, 4:13, 5:2,3, 5:5, யாக்.13:15, தீத்.2:5, 1கொரி..14:13, பிரச.8:4 போன்ற வசனங்களுக்கு கீழ்படிகிறது. தேவன் தமக்கு கீழ்படிகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியை தந்தருளுகிறார். (அப்.5:32)

**90. நாம் வேதவாக்கியங்களில் காணும் சில பாஷைகள் :**

1. தூதர் பாஷைகள் – Tongues of Angels (1கொரி.13:1)
2. சீரிய பாஷை – Syrian Languages (Aramaic) (2ராஜா.18:26, தானி.2:4)
3. யூத பாஷை- -Jew's Language (1ராஜா.18:26, நெகே.13:24)
4. அஸ்தோத் பாஷை- Ashdod Language(நெகே.13:24)
5.கல்தேயரின் பாஷை – Tongues of Chaldeans – தானி1:4
6.கானான்பாஷை – Cannan எகிப்தியரின் பாஷை – ஏசா.19:18.
7. எபிரேய பாஷை – Hebrew - .யூதரின் பாஷை – யோ.19:20.இயேசு அரமேயக் பாஷையில் பேசினார். பவுல் எபிரேயர் பாஷையில் பேசினார். அப்.21:40, 9:5, 10-21, 23 அப்.2:9-11.
8. கிரேக்க பாஷை – Greek – யோ.19:20
9. லத்தின் பாஷை – Latin – யோ.19:20
10. பார்த்தருடைய பாஷை – Parthians
11. மேகருடைய பாஷை –Mydes
12. ஏலாமீத்தருடைய பாஷை – Elamites
13. மொசொப்பேதாமியரின் பாஷை – Mesopotamia
14. கப்பத்தோனிக்கியரின் பாஷை – Cappadocia
15. பொந்துநாட்டினரின் பாஷை- Pontus
16. ஆசியா நாட்டினரின்பாஷை – Asia
17. பிரிக்கியா நாட்டினர் பாஷை – Phrygia
18. பம்பிலியா நாட்டினரின் பாஷை- Pamphylia
19. லீபியா திசைகளில் குடியிருக்கிறவர்களின் பாஷை- Libya, Cyren
20. யூதமார்க்கத்தமைதவர்களின் பாஷை – Proselytes
21. அரபியருடைய பாஷை – Arabians
22. லிக்கலோனியா பாஷை –Lycaonia – அப்.14:11
23. கிரேத்தர் – Cretans.
24. இஸ்ரவேலர் அறியாத அந்நிய பாஷைகாரர்கள் – Strange Language – சங்.116:1
25. மனுஷர் பாஷைகள் – Tongues of Men- 1கொரி.13:1.
26. தூதர் பாஷைகள் – Tongues of Angels- 1கொரி.13:1

27.சுத்தமானபாஷை –Pure Tongue
28. கடினமான பாஷை- Strange Speech – எசே.3:5,6
29. விளங்காத பாஷை – A deeper language that cannot perceive, cannot understood - எசா.33:19
30. அந்நிய பாஷை – Unknown Tongue – 1கொரி.14:2,27
31. பரியாச உதடு -Stammering Lips – எசா.28:11
32. அறியாத பாஷை - Language thou knowest not and understand what they say – எரே.5:15

91. (அ) வெவ்வேறு பாஷை – Other Tongue – அப்.2:4 இது நான்அறிந்தோ அறியாததுமான இதர பாஷை.பெந்தெகொஸ்தே நாள் பேசியவர்கள் கலிலேயர்கள். ஆனால் கேட்டவர்கள் அவரவர்களுடைய ஜென்ம பாஷையில் கேட்டார்கள். அது எப்படி? இங்கு அந்நிய பாஷைக்கு ( Unknown Tongue) இடமேயில்லை. பேசியவர்கள் கலிலேயர், ஆதலால் அவர்கள் எபிரேயர் பாஷையிலே பேசினார்கள். கேட்ட 17 தேசத்தார்கள் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையிலே அதைக் கேட்டார்கள். கேட்டவர்கள் அந்நிய பாஷையிலே கேட்கவில்லை. ஆதலால் அங்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுகிறவர்களுக்கு தேவையில்லாமல் போயிற்று. பேசுகிறவர்கள் அந்நிய பாஷை பேசியிருந்தால், கேட்டவர்களுக்கு வியாக்கியானம் பண்ணுகிறவர்கள் தேவைப்பட்டிருக்கும். இங்கு கேட்டவர்கள் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் அதாவது தங்கள் தாய் மொழியில், தங்கள் நாட்டுமொழியில் கேட்டார்கள். அது அவர்களுக்கு அந்நிய பாஷையாக இல்லை. 120 பேரும் அந்நிய பாஷை பேசியிருந்தால் அவர்கள் அதற்கு விளக்கம் கொடுத்திருக்க வேண்டும். அல்லது வேறுயாராவது விளக்கம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இங்கு அவர்கள் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையிலே கேட்டார்களேயன்றி அந்நியபாஷையில்கேட்கவில்லை. ஆதலால் பெந்தெகொஸ்தே நாள் அந்நியபாஷை உருவானது, ஊற்றெடுத்தது, பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்றதற்கு அடையாளமாக அந்நிய பாஷை பேசப்பட்டது என்பது அனைத்தும் பேய்தனத்துக்கடுத்த உபதேசம், பிசாசின் உபதேசம், ஸ்தாபன சபைகள், அவைகளின் பிரசங்கிகள், ஊழியர்கள் அனைவரும் அந்நிய பாஷையை குழப்புகிறார்கள். நம்முடைய தேவன் குழப்பத்தின் தேவன் அல்ல. பெந்தெகொஸ்தே நாளன்று வானத்தின் கீழ்யிருக்கிற சகல தேசத்தாருக்கும் அவரவர்கள் தாய் / ஜென்ம பாஷையில் கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. கேட்டவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டு மனந்திரும்பினார்கள். சுமார் 3000 பேர் அந்த வேளையில் மனந்திரும்பி தங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். இவர்கள் அனைவரும் 17 நாட்டைசேர்ந்தவர்கள். யாரும் அந்நிய பாஷை பேசவில்லை. அந்நிய பாஷை பேச பழக்கப்படவுமில்லை. அந்நிய பாஷை என்று ஒன்றை, அதில் பேச பழக்கப்பட்ட ஸ்தாபன சபையாரே பேசுகிறார்கள். இவ்வாறாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தங்கள் பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்களையே கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்.(அப்.2:37-47) இந்த சபைக்கு தலை கிறிஸ்து.
(ஆ) தெரியாத பாஷை Alanguage that shall not understand. - உபா.28:50 உதாரணமாக தெலுங்கு நான் அறியாத ஒரு பாஷை, நான் புரிந்துக்கொள்ள முடியாத ஒரு பாஷை. ஆனால் அது எனக்கு அந்நியபாஷை அல்ல.
(இ) அறியாத பாஷை – A language that shall not be understand – சங்.81:5. இஸ்ரவேலருக்கு எகிப்தியரின் பாஷை அவர்கள் அறியாதது. ஆனால் அந்நிய பாஷை அல்ல.
(ஈ) விளங்காத சத்தம். அதாவது உன்னால் கூர்ந்து கவனிக்க முடியாத ஆழமான பேச்சு மற்றும் உன்னால் புரிந்துக்கொள்ள முடியாத படி திக்கி திக்கி பேசும் ஒரு பாஷை.A deeper speech that thou cannot perceive ; Stammering Tongue ,that thou cann't (ஏசா.33:19). இவைகள் அப்.பவுல் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மற்றும் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமான வார்த்தைகளை கொண்ட பாஷையாயிருந்தது. (2கொரி.12:3)
(உ) கொர்நெலியு வீடு. இந்த சம்பவம் பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகு சுமார் 3 ஆண்டுகள் கழித்து புறஜாதியாகிய கொர்நெலியு வீட்டில் நடந்தது என அறிய வந்தேன். (அப்.10:44-47, 11:15). பேதுரு பிரசங்கித்துக்கொண்டிருக்கையில் வசனத்தை கேட்ட யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்து பிரமித்தார்கள். அவர்கள் பல பாஷைகளை பேசினார்கள்.வரம் கிரியை செய்தது. பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அடையாளமாக பல பாஷைகளை கொர்நெலியு வீட்டார் பேசவில்லை. பரிசுத்த ஆவியை பெற்றபின் பரிசுத்த ஆவியின் வரம் கிரியை செய்ததை கண்டு தான் பிரமித்தார்கள். பரிசுத்த ஆவியை பெற்றதின் பலனாக தேவனை புகழ்ந்தார்கள். பல பாஷைகளை பேசி தேவனை புகழ்ந்தார்கள். இது மனிதர்கள் பேசும் பாஷையாகவேயிருந்தது. பரிசுத்த ஆவியின் வரம் அவர்களில் கிரியை செய்தது. இதர வரங்களை அங்கு அந்த நேரத்தில் வெளிப்படுத்த சூழ்நிலைகள் இல்லை. அப்.10வது அதி. பரிசுத்த ஆவியை பெற்ற பிறகு பரிசுத்த ஆவியின் வரங்கள் கிரியை செய்ததை கண்டவுடன் கொர்நெலியு வீட்டார் பிரமித்தார்கள். பரிசுத்த ஆவியை பெற்றதை பல பாஷை வரங்கள் கிரியை செய்து உறுதிப்படுத்தியது என அவர்கள் பிரமிக்கவில்லை.மேலும் பாஷைகள் பரிசுத்த ஆவியின் வரங்களாகும். ஆதலால் பரிசுத்த ஆவியை பெற்றவுடன் வரங்கள் கிரியை செய்கின்றன. பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால் தான் ஒருவனில் வரங்கள் கிரியை செய்யும். ஆனாலும் இதற்கு விதிவிலக்குகளும் உண்டு. ஆக பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அந்நிய பாஷை ஒரு அடையாளம் அல்ல.

92. **சபைகளில் அந்நிய பாஷை, பலவிதமான பாஷைகள் பேசப்படும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளும் உண்டு**.(1கொரி.14அதி)
(அ) நீங்கள் கூடி வந்திருக்கும்போது ஒருவன் பாஷைகளை (Tongue) பேசுகிறான். பாஷைகளை பேசுகிறதற்கு தடைபண்ணாதிருங்கள். (1கொரி.14:26,39)
(ஆ) அந்நிய பாஷை (Unknown Tongue) இரண்டு பேர் மிஞ்சினால் மூன்று பேர் பேசலாம்.
(இ) அவர்கள் ஒவ்வொருவராய் பேச வேண்டும்.

(ஈ) ஒருவர் அர்த்தத்தை சொல்ல வேண்டும்.
(உ) ஒருவர் பேசும் அந்நிய பாஷைக்கு அர்த்தம் கூறுகிறவர் இல்லாவிட்டால் சபையிலே பேசக்கூடாது. அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாத பட்சத்தில் அவன் தேவனுக்கும் தனக்கும் தெரிய பேச வேண்டும். சபையில் பேசக்கூடாது. நீங்கள் பேசுவது ஒரு பாஷை என்பதை மறந்துவிடக்கூடாது. அதை விட்டுவிட்டு அக்கர புக்கர என ஏதோஒன்றை உளறித்தள்ளக்கூடாது. அது பாஷையே அல்ல. பாஷையற்ற ஒலி சத்தங்கள். அதுவும் விளங்காத சத்தங்கள். அதனால் பேசுகிறவனுக்கும், கேட்கிறவனுக்கும் எந்த விதத்தில் பிரயோஜனம் இல்லை. மாறாக அந்நிய பாஷை என்ற பெயரில் ஒருவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிறான். கேட்கிறவனும் ஏமாற்றப்படுகிறான். ஏமாற்றுக்காரன் யார்? அது பிசாசு. இவ்வாறாக அக்கர புக்கர என்று பேசுகிறவர்களுக்குள்ளும் பிசாசு இருந்து கிரியைசெய்கிறான். இது பரிசுத்த ஆவியானவரின் வரமல்ல. மாறாக பிசாசின் தந்திரம்.
(ஊ) தேவனிடத்தில் பேசுகிறேன் என கூறுகிறார்கள். சபையில் அந்நிய பாஷை பெயரில் ஒருவன் பதினாயிரம் வார்த்தைகளை பேசினாலும் அவன் கருத்தோடு ஐந்து வார்த்தையில் பேசுவது நலம்.
(எ) மறுபாஷைக்காரர்களாலும் மறு உதடுகளாலும் நான் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன். பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும்(Another Tongue, Stammering Lips)இந்த ஜனங்களோடே பேசுவார். இவைகள் அனைத்தும் கர்த்தருடைய கற்பனைகள்.ஆனால் அவர்கள்எனக்கு செவிகொடுப்பதில்லை என்கிறார்.

<u>**93. சிந்தனைக்கடுத்தசில சம்பவங்கள்.**</u>1. சில வார்த்தைகளை இடைவிடாமல் சொல்லச் சொல்ல, அப்படிச் சொல்லும்போது அக்கினி மயமான நாவுகள் அழிக்கப்படுகிறது, அது அந்நிய பாஷை வரம், அது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுதல் என்கிறார்கள். இதை காரிஸ்மேட்டிக் (Charismatic)போதனை என்கிறார்கள். காலப்போக்கில் இதற்கு ஒரு உயர்வான பெயர் அளிக்கப்பட்டு க்ளோசாலலியா இயக்கம் என்று அழைக்கப்பட்டது. இவர்கள் ஆராதனை அந்நிய பாஷையில் ஆரம்பித்து, பாடுவதும், ஜெபிப்பதும் அந்நிய பாஷையிலே. அதை அவர்கள் யாரும் விளங்கிக் கொள்வதில்லை.
2. யோவான்ஸ்நானன் கர்ப்பத்திலிருந்தே பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தான். இயேசுவும் கூட. ஆனால் இவர்கள் தாங்கள் பெற்ற பரிசுத்த ஆவிக்கு அடையாளமாக அந்நிய பாஷை பேசவில்லை. அப்படியானால் அவர்களுக்குள் பரிசுத்த ஆவி இல்லையா?
3. பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது மேல் வீட்டில் ஏறக்குறைய 120 பேர் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. அது வீடு முழுவதையும் நிரப்பிற்று. அடுத்து அக்கினி நாவுகள் அல்ல. அக்கினி மயமான பிரிந்திருக்கும் நாக்குகள். அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். ஆவியானவர் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளினாலே பேசினார்கள். இது அந்நிய பாஷை அல்ல. ஏனென்றால் அவர்கள் பேசியதை அங்கு கூடியிருந்த 17 தேசத்தாரும், அவரவர்களுடைய ஜென்ம பாஷையில் கேட்டார்கள். பேசினவருடைய பேச்சை கேட்டவர்கள் புரிந்துக்கொண்டார்கள். அவர்கள் கேட்டது புரியாத அந்நிய பாஷை அல்ல. மாறாக கேட்டவர்கள் நன்கு அறிந்த அவர்களுடைய ஜென்ம பாஷை. பேசியவர்கள் கலிலேயர். அவர்கள் தங்களுடைய எபிரேய பாஷையில் பேசினார்கள். அதை கேட்டவர்கள் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையிலே கேட்டார்கள். ஆனால் வெவ்வேறு பாஷைகள், 17 தேசத்தாரும் அவரவர்கள் பாஷையில் கேட்டதால்,வெவ்வேறு பாஷைகள் எனகூறப்பட்டது. இங்கு அந்நிய பாஷை என்பதற்கு இடமே இல்லை.
4. அடுத்து என்ன சம்பவித்தது? பேதுரு எபிரேயர் பாஷையில், தன் ஜென்ம பாஷையில் பேசுகிறான். அதை அந்த 17 தேசத்தாரும் தங்கள் தங்கள் ஜென்ம பாஷையில் கேட்டார்கள். பேதுரு 17 அந்நிய மொழிகளில், பாஷைகளில் பேசவில்லை. அவன் பேசியதை கேட்டார்கள், இருதயத்தில்குத்தப்பட்டார்கள். பேதுருவின் ஆலோசனைக்கு இணங்க : நீங்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்ற ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அன்றைய தினம் ஏறக்குறைய 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவ்வாறாக இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினம் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். இங்கும் அந்நிய பாஷைக்கு ஆதாரங்கள் இல்லை.
5. அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது.அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். தேவ வசனத்தை தைரியமாக சொன்னார்கள். இங்கும் அந்நிய பாஷைக்கு ஆதாரங்கள் இல்லை.(அப்.4:38)
6. அடுத்து தேவனுடைய ராஜ்யத்திற்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்திற்கும் ஏற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது புருஷர்களும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். மாயவித்தைகாரனாகிய சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான். (அப்.8:12,13) இங்கும் அந்நிய பாஷை குறித்து எதுவும் கூறப்படவில்லை. பின்பு பேதுரு, யோவான் வந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் பரிசுத்த ஆவியை பெறாதிருப்பதைக் கண்டு பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றுக்கொள்ளும்படி, அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றார்கள். (அப்.8:15-17) பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் அந்நிய பாஷையை பேசவில்லை.
7. இரதத்தை நிறுத்தி பிலிப்பும் எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுடைய மந்திரியும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். இங்கும் அந்நிய பாஷைக் குறித்து எதுவும் கூறப்படவில்லை.(அப்.8:38)
8. சவுல் பார்வையடைந்து, எழுந்திருந்து,ஞானஸ்நானம் பெற்றான். இங்கு அனனியா சவுலை நோக்கி :நீ பார்வையடையும் படிக்கும், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் இயேசுவாகிய கர்த்தர் என்னை அனுப்பினார் என்றான். (அப்.9:47,48) அதன்படியே சவுல் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான் என்று நாம் நிச்சயத்துக்கொள்ளலாம். இங்கும் அந்நிய பாஷை குறித்து எதுவும் கூறப்படவில்லை.

9.கொர்நெலியு வீடு. (அப்.10அதி) இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை பேதுரு பேசிக்கொண்டிருக்கையில், வசனத்தை கேட்ட யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளை பேசி தேவனை புகழ்ந்தார்கள். The Gifts of the Holy Spirit poured out, they heard them speak with tongues. என்றே ஆங்கிலத்தில் உள்ளது. கொர்நெலியு வீட்டார் பரிசுத்த ஆவியின் வரமாகிய பாஷைகளை பேசினார்கள் என்றே கூறப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியின் பாஷை வரம். Various Kinds of Tongues, பற்பல பாஷைகள். பற்பல பாஷைகள் என்கிற போது அது அறிந்ததாயும், அறியாததாயும் இருக்கலாம். பாஷை வரம் என்றால் அது அந்நிய பாஷை அல்ல. ஒருவர் அறியாத பாஷை அவனுக்கு அந்நிய பாஷை கிடையாது. எனக்கு ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, மளையாளம் தெரியும். இவைகள் எல்லாம் அந்நிய பாஷை கிடையாது. நான் அறிந்த பல பாஷைகள். இங்கு இவர்கள் பாஷைகளில் பேசுகிறவர்களேயன்றி, அந்நிய பாஷை, பற்பல பாஷைகள் என்று கூறப்படவில்லை.

10. அடுத்து தியத்தீரா ஊராளும், இரத்தாம்பரம் விற்கிறவளும், தேவனை வணங்குகிறவளுமான லீதியாளின் இருதயத்தை தேவன் திறந்தார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.16:15) இங்கும் அந்நிய பாஷை, பற்பல பாஷைகள் குறித்து எதுவும் கூறப்படவில்லை.

11. மேலும் பவுல் இராத்திரியில் சிறைச்சாலைக்காரனுக்கும்,அவனுடையவர்கள் அனைவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தான்.(அப்.16:33) இங்கும் அந்நிய பாஷை, பற்பல பாஷைகள் குறித்து எதுவும் கூறப்படவில்லை.

12. ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசம் உள்ளவனானான். அவனோடு கொரிந்துவில் அநேகரும் சுவிசேஷத்தை கேட்டு, விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். இங்கும் அந்நிய பாஷை, பற்பல பாஷைகள் குறித்தஉபதேசங்கள் எதுவும் இல்லை.(மாற்.16:16, ரோ.10:14, அப்.18:8)

13. அடுத்து எபேசு சீஷர்கள். பவுல் :யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டுமென்று சொல்லி, ஜனங்களுக்கு மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் கொடுத்தானே என்றான். அதை கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார். அப்பொழுது அந்நிய பாஷை பேசி தீர்க்கதரிசனங்கள் சொன்னார்கள்.(அப்.19:6) பவுல், தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கும் அவர்களை ஒப்புக்கொடுத்தான்.அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் பரிசுத்த ஆவியையும் பெற்றார்கள். பாஷைகளை பேசினார்கள். அந்நிய பாஷை என்று தமிழ் மொழிப்பெயர்ப்பில் உள்ளது. ஆனால் அவ்வாறாக ஆங்கிலத்தில் இல்லை. The Holy Spirit fell on them, and they spoke with Tongues, and prophesied. இது என்ன? விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள். என் நாமத்தினால் நவமான பாஷைகளை பேசுவார்கள். (மாற்.16:17) (Speak with new Tongues) அந்நிய பாஷைகள் அல்ல. (Unknown Tongue) புதிய பாஷைகள் ( New Tongues) புதிய புதிய பாஷைகளை பேசுவார்கள்.

94. 1. ஆக பெந்தெகொஸ்தே நாளன்று வெவ்வேறு பாஷைகளிலே பேசினார்கள்.(அப்.2:4) (Other Tongues) அது அந்நிய பாஷைஅல்ல.

2.கொர்நெலியு வீட்டில் பாஷைகளை (Tongues) பேசினார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இங்கும் அந்நிய பாஷை என்று கூறப்படவில்லை இங்கு Speak with Tongues என்றுதான் கூறப்பட்டுள்ளது. பற்பல பாஷைகள் அல்ல. அந்நிய பாஷைகள் அல்ல.(அப்.10:45,46)

3.கொரிந்து பட்டினத்தில் அவர்கள் அந்நிய பாஷைகளை பேசி என அப்.19:6 ல் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கிலத்தில் They Spoke with Tongues என்றே கூறப்பட்டுள்ளது.

4.ஆவியின் வரங்களில் பற்பல பாஷைகளை பேசுதல் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இது ஆங்கிலத்தில் Various Kinds of Tongues என்று கூறப்பட்டுள்ளது. அதாவது பற்பல பாஷைகளை பேசுவதாகும். (1கொரி..12:10)

5. அடுத்து 1கொரி.13:1 ல் மனுஷர் பாஷை என்று கூறப்பட்டுள்ளது. அதாவது இந்த உலகத்தில் உள்ள சுமார் 6500 பாஷைகளும் மனுஷர் பேசும் பாஷைகள் தான். இது ஆங்கிலத்தில் Tongues of Men என கூறப்பட்டுள்ளது.

6. அடுத்து 1கொரி.14:2. அந்நிய பாஷை – Unknown Tongue. அந்நிய பாஷையில் பேசுகிறவன், ஆவியின் இரகசியங்களை பேசுகிறான். அவன் மனுஷர் பாஷையை மனுஷரிடத்தில் பேசாமல், தேவனுக்கடுத்த பாஷையில் தேவனிடத்தில் பேசுகிறான். அதாவது அந்த மனுஷன் பரதீசுக்குள்எடுக்கப்பட்டு மனுஷரால் பேசப்படாததும், வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளை கேட்டான். (2கொரி.12:3) இதுதான் அந்நிய பாஷை (Unknown Tongue) இதைத்தான் 1கொரி.14:2ல் Unknown Tongue என எழுதப்பட்டு, அவன் மனுஷரிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான் என்று கூறப்பட்டுள்ளது.ஆக Unknown Tongue- அந்நியபாஷை என்பது ஒருவன் தேவனுடன் பேசுவதாகும். இந்த Unknown வார்த்தைதான் 1கொரி.14:4ல் கூறப்பட்டுள்ளது. இங்கு அந்நிய பாஷை Unknown பாஷையில் பேசுகிறவன் தனக்கு மாத்திரம் பக்திவிருத்தி உண்டாகக்கடுத்ததாக தேவனிடத்தில் பேசுகிறான். 1கொரி.14:5 ல் அவ்வாறாக தேவனிடத்தில் பேசுகிறவன் சபையின் பக்திவிருத்திக்காக அதன் அர்த்தத்தை சபைக்கு சொல்ல வேண்டும். சொல்லாவிட்டால் சபையில் அவன் பேசாமல் இருப்பது நலம். (1கொரி.14:13)

95. அந்நிய பாஷை Unknown Tongue என்று கூறப்பட்டிருப்பது மனுஷருடைய பாஷையல்ல. இது மனுஷரால் பேசப்படாததும், மனுஷருடைய வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தை. இதை பேசுகிறவன் தேவனிடத்தில் பேசுகிறான். தனது பக்திவிருத்திக்காக பேசுகிறான். இவன் இதை சபையில் பேசினால் அதற்கு அர்த்தத்தை சொல்ல வேண்டும். அப்படியே அர்த்தத்தை சொல்லாவிட்டால் சபையில் பேசக்கூடாது. ஏனென்றால் அவன் பேசுவதால் சபை பக்திவிருத்தி அடையப்போவதில்லை. பரிசுத்த ஆவியின் வரமானது : பற்பல பாஷைகள் பேசுவதாகும். இதில் உலகத்தில் இன்று பேசப்படும் சுமார் 6500 பாஷைகளும் அடங்கும். ஆனால் அந்நிய பாஷை (Unknown Tongue)

ஒருவன் தேவனிடத்தில்மாத்திரம் பேசும் பாஷை. அது மனிதனால் பேசப்படாதது. ஆனால் இந்த 6500 பாஷைகளும் மனுஷனால் பேசும் பாஷைகள். ஆனால் இந்த அந்நிய பாஷை (Unknown Tongue) மனுஷரால் பேசப்படாதது. அவனுடைய வாக்குக்கெட்டாததுமாகும். ஆக பற்பல பாஷைகளை பேசும் பரிசுத்த ஆவியின் வரங்கள் வேறு. அந்நிய பாஷைகளை பேசுதல் என்பது வேறு. இரண்டும் ஒன்றல்ல. ஆதலால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றதற்கு அந்நியபாஷையின் அடையாளம் என்பது பேய்தனத்துக்கடுத்தது. பரிசுத்த ஆவியைபெற்றுக்கொண்டதற்கு அந்நியபாஷை மற்றும் பற்பல பாஷைகள் பேசுதல் அடையாளம் அல்ல. மாறாக நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அத்தாட்சி – அடையாளம் நீங்கள் பரிசுத்த ஆவியின் கனிகளுடன் வாழ்ந்து காட்டும் வாழ்க்கையாகும். (மத்.7:16, கலா.5:22-25) நீங்கள் ஒருவன் பற்பல பாஷைகள், அந்நிய பாஷைகள் பேசுவதை கண்டவுடன் உடனே அவனிடத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் உண்டு என்றுதீர்மானித்து ஏமாந்து விடாதீர்கள். பொறுத்திருந்து அவனது கனிகளை கவனியுங்கள் அதன் மேல் செயல்படுங்கள்.

96. இங்கு எழுதப்பட்ட வசனங்களை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு கனிகொடுக்க வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.

**97. உணர்ந்து குணப்படாதபடி அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறதா?**

செய்தி.Expressions – Sister Bell's Funeral. Dt.13.03.1962, செய்தியாளர் சகோ.வில்லியம் மரியம் பிரன்காம், தமிழாக்கம் சகோ.எஸ்.எ.ஜெபக்குமார்,தலைப்பு: வெளிப்படுத்துதல்கள்.

1.ஆங்கிலத்தில் பத்தி 3: Reading from the Eternal Word, I would like for us to think upon just one word for a few moments, and that word is Expressions.

2. இது தமிழில் பத்தி 4 : நித்திய வார்த்தையிலிருந்து வாசித்தோம். கொஞ்ச நேரம் வெறுமனே ஒரு வார்த்தையின் பேரில் நாம் சிந்திக்கலாம் என எண்ணுகின்றேன். அந்த வார்த்தை என்னவென்றால் வெளிப்படையாக காண்பித்தல்.

3.இப்பொழுது தலைப்பு Expressions க்கு வெளிப்படுத்துதல் என தமிழாக்கம் செய்துள்ளார். அப்படியானால் எதைப்பற்றிய வெளிப்படுத்துதல்? பாருங்கள் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்படுத்துதல், யாரோ ஒரு நபரை பற்றி இன்று அவளுடைய இரகசியத்தை குறித்து வெளிப்படுத்துதல். இங்கு சகோதரி பெல் அவர்களைக் குறித்த வெளிப்படுத்துதல் இல்லை. மாறாக அவர்களுடைய உணர்வுகளை / பண்புகளை வெளிப்படையாக காண்பித்தலாகும். ஆக தலைப்பு வெளிப்படுத்துதல் என்பதற்கு பதிலாக வெளிப்படையாக காண்பித்தல் என 4வது பத்தியில் கடைசியில் மொழிப்பெயர்க்கப்பட்டபடி தலைப்பு இருந்திருந்தால் நலமாக இருந்திருக்கும்.

4.மேலும் 5வது பத்தியை கவனியுங்கள். ஜீவியத்தில் வெளிப்படையாக காண்பிக்க அநேக காரியங்கள் உண்டு. அதாவது சகோதரி.பெல் ஜீவியத்திலும் வெளிப்படையாக காண்பித்த அவருக்கடுத்த காரியங்களைப் பற்றி சகோ.பிரன்காம் பிரசங்கிக்கிறார். மாறாக அந்த சகோதரியின் வாழ்க்கையில் மறைந்திருந்த காரியங்களை அவர் வெளிப்படுத்தி பிரசங்கிக்கவில்லை.வெளிப்படையாக காண்பித்தல் Expressions. வெளிப்படுத்துதல் என்பது Revelation, Revealஆகும்.

5.ஆங்கிலத்தில் 3வது பத்தி : Just one word.......and that word is expressions. நமது பிரபல மொழிப்பெயர்பாளர் இதை **வெறுமென**ஒரு வார்த்தை என்று மொழிப்பெயர்க்கிறார். Just one word என்பது ஒரேயொரு வார்த்தையின் பெயரில் என இருந்தால் நலமாயிருக்கும்.வெறுமனே என்றால் என்ன? நாம் பிள்ளைகளை வெறுமனே ஊரை சுற்றி திரியாதே என கடிந்துக்கொள்ளுதலாகும். படிக்காமல் வெறுமனே பள்ளிக்கு சென்று வருவது பிரயோஜனமில்லை எனகடிந்துகொள்வதாகும். இங்கு இவர் கையாளும் வெறுமனே என்பது ஊக்குவிக்கப்படாத, தேவையற்ற ஒன்றுக்கும் உதவாத பிரயோஜனமற்றஒருவார்த்தைஎன்றேபொருள்படும். இதிலிருந்து நமது சகோதரன் இன்னும் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டு செல்கிறாரேயன்றி திருந்தினார் போல் இல்லை. இவரும், இவரை பிரயோஜனப்படுத்துகிறவர்களும் வணங்காக் கழுத்துள்ளவர்களாக தேவசித்தத்திற்கு புறம்பாக மொழிப்பெயர்ப்பில் ஈடுப்பட்டுக்கொண்டு செய்தியை பாழாக்கிவருகிறார்கள். தங்களுக்கடுத்ததல்லாத காரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

98. **God என்றால்தமிழில் சரியான மொழிப்பெயர்ப்பு என்ன?**

1. God என்றால் தேவன் என்ற மொழிப்பெயர்ப்பு நமது கரத்தில் உள்ள பரிசுத்த வேதாகமத்தில் உள்ளது. God என்றால் சர்வேசுரன் என எனது கரத்தில் உள்ள ஓரு புதிய ஏற்பாடு மொழிப்பெயர்ப்பு கூறுகிறது. God என்றால் பொதுவாக கடவுள், இறைவன், ஆண்டவர், படைப்பாளர் போன்ற மொழிப்பெயர்ப்புகளை ஆங்கில, தமிழ் அகராதிகளில் காண்கிறேன். ஆனால் எனது கரத்தில் உள்ள தமிழ் வேதாகமத்தில், இது இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூர் வெளியீட்டில் God என்பதற்கு தேவன் என்ற மொழிபெயர்ப்பே உள்ளது. இதில் எது சரி என நாம் தியானிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் God என்றால் தேவன் என்ற மொழிப்பெயர்ப்பில் பழகி விட்டார்கள். இப்பொழுது சென்னை, பெரம்பலூரில் இருந்து சகோ.ஆர்.வால்டர் ஜெயபாலன் என்பவரிடமிருந்து 2020, அக்டோபர் பிந்திய நாட்களில் ஒரு கடிதத்தை பெற்றேன். அதின் தொடக்கத்திலே என்னை **அன்புள்ள**என்று தொடங்காமல்**வயிற்றெரிச்சல் மிக்க காலேப்புக்கு** என தொடங்கவே தான் விரும்பினதாகவும், ஆனால் அது கிறிஸ்தவ முறையல்ல எனவும் எழுதுகிறார்.

2. என்னை பொருத்த அளவில் நான் எதிலே தவறினேனோ அதை எனக்கு தெரியப்படுத்துங்கள். என்னை கடிந்து கண்டனம் பண்ணி புத்தி சொல்லுங்கள், உபதேசம் பண்ணுங்கள். அதில் நான் மனமடிவதில்லை. மாறாக அதை வரவேற்கிறேன். ஆனால் ஒன்று மட்டும், நான் எதில் தவறினேனோ அதை வேதவாக்கியங்களிலிருந்து எடுத்துகாட்டி

கண்டிக்க வேண்டும். சகோ. வால்டர் ஜெயபால் போன்று தன் சுய மனம்போன போக்கில் ஒன்றை நிதானித்துக்கொண்டு என்னை கடிந்து கொள்வது நியாயம் அல்ல. பாருங்கள் நீதி.26:4,5 வசனங்கள் கூறுகிறதாவது: மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவு **கொடாதே;** கொடுத்தால் நீயும் அவனைப்போல் ஆவாய். மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவு **கொடு;** கொடாவிட்டால் அவன் தன் பார்வைக்கு ஞானியாய் இருப்பான். பாருங்கள் கொடாதே, கொடு இரண்டும் ஓரே இடத்தில் கூறப்பட்டுள்ளது. ஆதலால் நான் சூழ்நிலைக்கு எது ஏற்றதோ அதை கடைப்பிடிக்கிறேன். மேலும் 1தீமோ.5:20 யை வாசியுங்கள். பாவம் செய்கிறவர்களை எல்லோருக்கும் முன்பாக கடிந்து கொள். மேலும் 2தீமோ.4:2-4 யை வாசியுங்கள். சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு புத்தி சொல்லு ஏனென்றால் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும். ஆக பிரியமானவர்களே தவறுகளை ஒரு ஊழியக்காரன் கடிந்து கொள்வது வேதப்பூர்வமானது. ஆனால்அது தவறு என்று உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3. இப்பொழுது இந்த சகோதரன் பழைய ஏற்பாடு 39 புத்தகங்களையும் ஆண்டவர் அருளால் 10 முறை படித்து முடித்தவர் எனவும், தனது வயது 84 என்று தன்னுடைய அழகை எனக்கு அறிமுகப்படுத்துகிறார். நீ பரிசுத்த வேதாகமத்தை 10 முறை அல்ல 100 முறை படித்திருந்தாலும், அதில் மேன்மை பாராட்ட ஒன்றுமே இல்லை. இது பள்ளி பாட புத்தகம் அல்ல. இதில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2தீமோ.3:16) சத்திய ஆவியாகிய அவர் (பரிசுத்த ஆவி) வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். (யோ.16:13) நீங்கள் அவராலே (பரிசுத்த ஆவி) பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டியதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது. (1யோ.2:27) ஆக வேதவாக்கியங்களுக்கடுத்த காரியங்களை பரிசுத்த ஆவியே ஒருவனுக்கு போதித்து அவனை சத்தியத்துக்குள் வழிநடத்த வேண்டும். இதை விட்டுவிட்டு நான் 10 முறை, 100 முறை படித்திருக்கிறேன் என பெருமை பாராட்டுவதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை. இதனால் ஆவிக்குரிய நலமான பலன்களை நீ ஒன்றும் பெற்றுக் கொள்ள முடியாது.

4. அடுத்து இவர் என்னை பற்றி ஒரு ஜோசியம் சொல்லுகிறார். அதையும் கவனியுங்கள். கடவுள் உனக்கு எவ்வளவு ஆயுளைக்கொடுத்தும் நீ ஒருமுறைக்கூட முழு வேதாகமத்தையும் பொருள் உணர்ந்து படிக்காதவன் என்பதாகும். எனக்கு இவரது குடுகுடுக்கை ஜோசியம் மீதெல்லாம் நம்பிக்கையில்லை. ஒன்றை மாத்திரம் அறிவேன். சத்தியத்தை அறியும் அறிவை, அவ்வப்போது தேவன் எனக்கு கொடுக்கிறார். சத்திய ஆவியானவர் என்னை சகல சத்தியத்திற்குள் தேவைப்பட்ட நேரங்களில் எல்லாம் வழிநடத்தி செல்கிறார். அது எனக்கு போதும். நான் 10 முறை அல்லது 100 முறை வேதாகமத்தை படிக்க வேண்டும் என்ற தேவையில்லை. பொதுவாக நான் தினசரி காலை ஆதியாகமத்திலிருந்து தொடங்கி ஒன்று அல்லது இரண்டு அதிகாரங்கள் படிக்கிறேன். அவ்வாறாக படித்துக் கொண்டே வருகிறேன். இதனால் பைபிளை எத்தனை முறை இதுவரை என் வாழ்நாட்களில் படித்துள்ளேன் என்று என்னால் கூறமுடியாது.

5. மேலும். முடிந்த வரை, இந்த மாதிரி தாளிகை (பத்திரிக்கை) எனக்கு இனி தயவு செய்து அனுப்பாதே என்கிறார். இதை படித்த உடனே எனது மெயில் லிஸ்ட்டில் இருந்து இவரது பெயரை நீக்கி விட்டேன். இந்த நிருபத்தை மாத்திரம் அவருக்கு அனுப்புகிறேன். ஏனென்றால் இதில் அவருக்கடுத்த காரியங்கள் உண்டு. அவருக்கு அதை அறிவிக்காமல் வெளியிடுவது நாகரிகம் இல்லை. மறுபக்கம் இவர் என்ன எழுதுகிறார் என கவனியுங்கள். நீ தொடர்ந்து எழுதுவதானால், கடைசி புரூப்பை எனக்கு அனுப்பு. நான் திருத்தி தருகிறேன். நீ எனக்கு எதுவும் கொடுக்க வேண்டாம். என் மகனுக்கு செய்வது போல எண்ணி செய்து தருகிறேன் என எழுதுகிறார். பாருங்கள் எனது வயது 77, அவரது வயது 84, நான் எப்படி அவருக்கு மகனாக முடியும்? என்னைப் பற்றி அறியாதவராக இருந்து கொண்டு, எல்லாவற்றையும் அறிந்தவர் போல் எழுதுகிறார்.

6. எனது செப்டம்பர் 2020 நிருபம் 8 பக்கங்களை கொண்டது. இதில் சுமார் 248 இலக்கண பிழைகள் உள்ளதாக சுட்டிகாட்டியுள்ளார். ஒரு பக்கத்திற்கு சுமார் 31 பிழைகள் என்கிறார். இது எனக்கு கேவலம், வெட்கக்கேடு எனவும் எழுதுகிறார். உண்மையாகவே அது அவ்வாறாக இருக்குமானால், எனக்கு வெட்கம் தான். ஆனால் எனது தவறுக்குரிய முகாந்திரங்களை நாம் கவனிக்க வேண்டும் அல்லவா? இவர் பக்கம் வாரியாக தவறுகளை சுட்டிக்காட்டி, முதல் பக்கம் 24, இரண்டாவது பக்கம் 17, மூன்றாவது பக்கம் 16, நான்காவது பக்கம் 15, ஐந்தாவது பக்கம் 13, ஆறாவது பக்கம் 16, ஏழாவது பக்கம் 31, எட்டாவது பக்கம் 14 ஆக மொத்தம் 248 பிழைகள் என எழுதுகிறார். இதிலிருந்து இவருக்கு 1வது வகுப்பு, 2வது வகுப்பு கணக்கு கூட தெரியாது என புலனாகிறது. லஞ்சம் கொடுத்து கொடுத்தே Rev, Dr, D.Min பட்டங்கள் பெற்றிருப்பாரோ என நான் ஐயப்படுகிறேன். அதோடு மட்டுமல்ல இவரது மடமையும் இந்த கணக்கில் புரிகிறது. கூட்டலில் கோட்டை விட்டுவிட்டார். 24+17+16+15+13+16+31+14 யை கூட்டினால் 146 தான் வருகிறது. இவர் எப்படி 146 பிழைகளை 248 பிழைகள் என கணக்கெடுத்தார்? எனது 8 பக்க நிருபத்தில், 8வது பக்கத்தில் 134+14=248 என தவறாக கணக்கிட்டுள்ளார். இவர் முற்றிலுமாக தானே ஒரு அரைகுறை வேக்காடாக இருந்து கொண்டு என்னை குற்றப்படுத்துகிறார். இப்பொழுது இவர் கூறிய கேவலம், வெட்கக்கேடு எல்லாம் யாருக்கு? இவருக்கு தானே. மதிகேடன் தன் மதியீனத்தில் மாட்டிக் கொண்டார்.

7. இப்பொழுது கவனியுங்கள். நான் ஒரு தமிழ் ஆசிரியன் அல்ல. எனது எழுத்துக்களை இலக்கண ரீதியாக எழுத எனக்கு போதுமாக ஆற்றல் கிடையாது. ஆதலால் எனது எழுத்துக்களில் க், ப், ச், போன்ற பிழைகள் இருக்கத்தான் செய்யும், நான் உங்களுக்கு முன்பே எழுதியபடி நான் ஒரு தனிப்பட்ட நபராக இந்த ஊழியத்தின் தொடக்கம் முதல்

முடிவு வரை அனைத்து பொறுப்புக்களையும் நானே என் தலைமீது கொண்டுள்ளேன். நான் நிருபத்திற்கு முதலில் தலைப்பு தேர்ந்தெடுக்க வேண்டும். பின் பைபில், தீர்க்கதரிசியின் செய்திகளை மற்றும் பலர் எழுதிய ஆவிக்குரிய புத்தகங்களை அந்த பொருள் குறித்து ஆராய்ந்து, குறிப்புகள் எடுத்து, அதை ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ஒன்று சேர்த்து அதை ஒரு நிருபமாக கொண்டுவருகிறேன். பின் அதை DTP பணிக்காக எடுத்துச் செல்கிறேன்.DTP பணியை குறைந்த பட்சம் 2 அல்லது 3 முறைகள் கூட்டி, குறைத்து, திருத்தங்கள் செய்கிறேன். பின் அதை பிரிண்ட் பணிக்காக கொண்டு செல்கிறேன். பின் ஒவ்வொரு புத்தகத்திலும் விலாசங்கள் எழுதி (சுமார் 3-4 ஆயிரங்கள்) அதற்கு தபால்தலை ஒட்டி, கொஞ்சம் கொஞ்சமாக தபால் அலுவலகம் எடுத்துச் செல்லுகிறேன். என்னிடம் ஏறக்குறைய 10,000 கிறிஸ்தவர்கள் விலாசம் இருப்பதினால் அதில் விலாசம் முற்றிலும் சரியாக இருக்கும் நபர்களை தெரிந்துக்கொண்டு சுமார் 3-4 ஆயிரம் பேருக்கு அனுப்புகிறேன். இதிலும் சில புத்தகங்கள் திருப்பி அனுப்பப்பட்டு வரும். அவைகளை அனுப்பாதவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். இவ்வாறாக ஒரு புத்தகத்தையும் நான் வீணாக்குவதில்லை. இந்த பணியில் எனக்கு பளுஅதிகம் உண்டு. ஒரு நிருபம் எழுதி வெளியிட சுமார் 3/4 மாதங்கள் ஆகிறது. எனது வயது 77 என்பதை மறந்து விடாதீர்கள். ஆதலால் நான் எழுதும் இந்த நிருபங்களில சிறு சிறு தவறுகள் இருந்தால் அதற்காக என்னை மன்னியுங்கள். இது அறியாமையினால் ஏற்படுகிறது.

8. மேலும் இவர் என்னைக்குறித்து நீ எனக்கு சகோதரன் அல்ல, உன்னை எனது சகோதரன் என்று சொல்ல வெட்கப்படுகிறேன் என எழுதுகிறார். நல்லது. என்னை சகோதரன் என்றோ அல்லது சத்துரு என்றோ அழைப்பது அவரவரது சுயாதீனம். நானோ, தவறு என்று ஆவியானவர் ஒன்றை எனக்கு உணர்த்தும்போது நான் அந்த நபரைக் குறித்து கடிந்து, கண்டனம் பண்ணி, தவறுகளை சுட்டிக்காட்டி என் நிருபங்களை எழுதும் போது அவரை எனக்கு சத்துருவாக எண்ணாமல் சகோதரனாகவே எண்ணி புத்தி சொல்லுகிறேன், எழுதுகிறேன். ஆதலால் தான் நிருபத்தின் முடிவில் **கிறிஸ்துவின் அன்பில் சகோ.காலேப் யோசுவா**என எழுதுகிறேன். டாக்டர். புஷ்பராஜ், சகோ. மோகன் சி லாசரஸ், மற்றும் ஸ்தாபன சபைத் தலைவர்கள் எனக்கு சத்துருக்கள் அல்ல. நான் அவர்களை நேசிக்கிறேன். ஆனால் அவர்கள் பகிரங்கமாக செய்யும் வேதவாக்கியங்களுக்கடுத்த தவறுகளை நானும் எனது நிருபத்தின் வாயிலாக பகிரங்கமாக கடிந்து கொள்கிறேன், விமர்சிக்கிறேன். அந்நிய பாஷை குறித்து டாக்டர் மற்றும் சகோ. ஜெபத்துரை புத்தகமாக வெளியிடாதிருந்தால் நானும் அது குறித்து விமர்சிக்க தேவை இருந்திருக்காது. இப்பொழுது அந்நிய பாஷை குறித்து இந்த நிருபம் ஜனங்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வருமென நம்புகிறேன். நான் அவர்களது தவறுகளை அவர்களிடமே நேரிடையாகப் பேசினால் அது ஜனங்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியைக் கொண்டு வராதே. அவர்களுடைய தவறுகள் மூடி மறைக்கப்பட்டு விடுமே.

9. மேலும் என்னைக்குறித்து இவர் : நீ எட்டாம் வகுப்பு வரை சரியாக படிக்க வில்லை. என்னையும், உன்னையும் ஒப்பிட்டுப் பார்க்கலாமா? என எழுதுகிறார். இது என்ன அகந்தை, ஆணவம்? இவர் தனது பெயருக்கு முன் Rev.Dr. எனவும், பெயருக்கு பின் D.Min. எனவும் எழுதியிருக்கிறார். ஒரு மனிதனுடைய படிப்பும், அந்தஸ்தும் தேவனுக்கு தேவையா? அவர் ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து தமக்கடுத்த காரியங்களை பாலகருக்கு, படிப்பறியாத பேதைகளுக்குத்தானே வெளிப்படுத்துகிறார். பேதுருவும், யோவானும் படிப்பறியாதவர்களும், பேதைமையுள்ளவர்கள் தானே. தியானியுங்கள் மத்.11:25, அப்.4:13. மதிகேடனே உனக்கு இந்த கர்வமும், ஆணவமும் ஆகாது. நான் கால்நடை மருத்துவக் கல்லூரியில் படித்தவன். ஆனால் பட்டம் பெறத் தவறி விட்டேன். ஏனென்றால் என் தேவன் என்னை அவருடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஒரு சுவிஷேசகனாக முன்குறித்தார்.

10. இவர் என்னைக்குறித்து ஒரு பக்கத்திற்கு சராசரியாக 50 வரிகளாக 3 பக்கங்கள், இன்னும் அநேக காரியங்களை அவரது மூர்க்க வெறியினால் எழுதி தள்ளியுள்ளார். என்னைக்குறித்து எழுத, விமர்சிக்க இவருக்கு அதிகாரம் உண்டு. நான் அதை மறுக்க மாட்டேன். ஆனால் அவர் எழுதுகிறவைகள் உண்மையுள்ளதாக இருக்க வேண்டும். உண்மைக்கு புறம்பாக தன் மனம்போன போக்கில் ஒன்றை எழுதக்கூடாது. என்னை குறித்து எழுதியது உண்மையாகயிருந்தால் எனக்குரிய தண்டனையிலிருந்து நான் தப்ப முடியாது. ஆனால் அவர் எழுதுவது உண்மைக்கு புறம்பாக இருக்குமானால் நிச்சயமாக அதன் பலனை அவர் அனுபவிப்பார். தேவன் பட்சபாதமில்லாதவர். நான் அவரைக் கடிந்து கொண்டதை என் எனக்கு மன்னிப்பார்.

11. அடுத்து தேவன் என்ற மொழிப்பெயர்ப்பு குறித்து இவர் எழுதிய **இனிமேலாகிலும் தேவன் யார் என்று புரிந்துக்கொள்ளுவோம்** என்ற கைப்பிரதி எனக்கு பிரயோஜனமாக இருந்தது. அதாவது **God** என்ற ஆங்கில சொல்லுக்கு **தேவன்** என்று தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது தவறு என்கிறார். தேவன் என்பது ஒரு வடசொல். God என்கிற ஆங்கில சொல்லுக்கு எந்த அகராதியிலும் தேவன் என்று பொருள் கொடுக்கப்படவில்லை என்கிறார். நான் அறிந்த, ஆராய்ந்து பார்த்தமட்டில் அதில் உண்மை உண்டு எனக்கண்டேன். God என்ற சொல்லுக்கு கடவுள், இறைவன், ஆண்டவன், படைப்பாளன் போன்ற மொழிப்பெயர்ப்புகளே காணப்பட்டது. god என்பதற்குத்தான் தேவன், தெய்வம் போன்ற மொழிப்பெயர்ப்பு காணப்பட்டது. இது குறித்து நீங்கள் 1கொரி.8:4-6 வசனங்களை தியானிக்கலாம். There is no other God but one. ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லை. (வசனம் 4) அடுத்து, வானத்திலேயும், பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும், கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும் பிதாவாகிய ஒரே தேவன் நமக்கு உண்டு. For though there be that are called gods, whether in heaven or in earth (as there are gods many) but to us there is but one God. இங்கு கவனித்தீர்களானால் ஒன்றான மெய்த்தேவனுக்கு God என்றும், இதர தேவர்களுக்கு gods என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இருவருமே (God & gods) தேவன், தேவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இது தவறு. தேவன், தேவர்கள் என்பதுஒருமை பன்மை ஆகிவிடுகிறது. ஆனால் அது அப்படியல்ல. தேவன், தேவர்கள் இருவருக்கும் வித்தியாசங்கள் உண்டு.

பிரியமானவர்களே நமது தேவன் God அவர் கடவுள், ஆண்டவர் என்றே அழைக்கப்பட வேண்டும். இதர தேவர்கள் (gods) தேவர்கள் என்று அழைக்கப்படுவதால், இந்த தேவர்கள் பட்டியலில் தேவன் என்ற சொல் ஒருமையில், நமது ஆண்டவரும், கர்த்தரும் அடங்குகிறது. ஆனால் அது கூடாது.இதில் நிச்சயமாக எனக்கு அவருடன் ஒருமனப்பாடு உண்டு. நம்முடையவர் ஆண்டவர், கடவுள், பராபரன், சர்வேசுரன் ஆவார். இவர் சகாதேவன், மகாதேவன், சர்க்கரைத்தேவன், புலித்தேவன் போன்ற தேவர்களில் ஒருவர் அல்ல. இப்படிப்பட்ட தேவர்கள் முப்பத்துமுக்கோடி உண்டு. இவர்களில் நமது இறைவன்/ கடவுள் ஒரு தேவன் அல்ல. ஆதலால் God என்ற மொழிபெயர்ப்பு பொருந்தாது.

12. மேலும் சகோ.வால்டர் எழுதுகிறதாவது நமது கையிலிருக்கும் வேதாகமத்தை நமக்கு எழுதிக்கொடுத்தவர் ஹென்றி பவர் ஐயர். இந்திய வேதாக சங்கம் இவருக்கு இப்பணியை கொடுத்தது. இவருக்கு தமிழில் உதவ 6 பேர் கொடுக்கப்பட்டார்கள். கிறிஸ்துவின் இறையடியார்கள் அறிமுகப்படுத்திய சர்வேஸ்வரன், பராபரன் போன்ற சொற்களை பவர் ஐயர் கலைந்து விட்டு, அவருடன் நெருங்கி உறவாடிய பிராமண நண்பர்களின் பேச்சைக் கேட்டு தேவன் என்ற சொல்லுக்கு இடம் கொடுத்துவிட்டார். இது ஒரு இமாலய தவறு என்கிறார். நான் கத்தோலிக்க வேதாகமத்தில் God என்ற சொல் சர்வேசுரன் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதை காண்கிறேன். மேலும் இந்திய வேதாகம சங்கத்தினால் 1979ம் ஆண்டு வெளியிடப்பட்ட தூய வேதாகமத்தின் பேருண்மைகள்- இதில் தேவனுக்குப் பதில் கடவுள், ஆண்டவர் என்ற மொழிப்பெயர்ப்பு உள்ளது. கடவுள்= கடந்து+ உள்ளவர். ஆதலால் எள்ளாம் வல்ல பராபரனை நாம் கடவுள் என்று அழைக்கிறோம்.

13. இந்த தேவன் என்ற மொழிப்பெயர்ப்பு கழுத்தில் உத்ராஜக் கொட்டையும், நெற்றியில் விபூதி பட்டையும் போட்ட இலங்கை வாழ் ஆறுமுக நாவலர் என்ற பெயரையுடையவருக்கு உரியது என எழுதுகிறார். இவர் தான் ஆங்கிலத்தில் இருந்த பரிசுத்த வேதாகமத்தை முச்சந்தியில் நின்று தனக்கு கொடுக்கப்பட்ட அந்த வேதாக பிரதியை மக்கள் பலரும் பார்க்க நெருப்பில் போட்டு எரித்தார் எனவும்ஆறுமுக நாவலரைக் குறித்து எழுதுகிறார்.

14. நான் இவரை ஒரு பக்கம் கடிந்து கொண்டாலும், மறுபக்கம் நலமானதையும் இவரிடம் காண்கிறேன். ஒரே கிணற்றில் தித்திப்பும், கசப்புமான தண்ணீரா? இது எப்படி? கவனியங்கள். தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய். அப்படி செய்கிறது நல்லது தான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. (யாக்.2:19) பிசாசும் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறான். அவனுடைய விசுவாசத்தில் தவறு எதுவும் இல்லை. நாம் விசுவாசிக்கிற கிறிஸ்துவையே அவனும் விசுவாசிக்கிறான். நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என அறிக்கையும் செய்கிறான் (மாற்5:7).இயேசுவே, தேவனுடைய குமாரனே (மத்5:29) என்று நம்மைப் போன்று அறிக்கை செய்கிறானே. அதே போன்று இந்த நபரும் எனக்கு ஒரு ஆவிக்குரிய சகோதரனாக இல்லாவிட்டாலும் சரி, ஒரு எதிரியாக இருந்தாலும் சரி, இவர் யாராக இருந்தாலும் அதுப்பற்றி எனக்கு கவலையில்லை. ஆனால் தேவன் குறித்ததான யாவரும் ஏற்றுக்கொள்ளகூடியதான ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். நாம் அதை ஏற்றுக்கொள்ளலாமே.

15. முடிவாக இவர் என்னைக்குறித்து உண்மைக்கு புறம்பான பலகாரியங்களை எழுதியுள்ளார். அதுக்குறித்து நான் கவலைப்படவில்லை. முடிவாக இவர் தனது புத்தகத்தின் முன் அட்டை பகுதியில் தானாகவே கற்பனை செய்து இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு சரீரத்தை கொடுத்துள்ளார். கண்டிராத சரீரத்தை கண்டவர் போல் ஒரு மாய்மாலம் பண்ணி சித்திரம் ஒன்றை வரைந்து தனது புத்தகத்தின் முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இது இவருக்கு கேவலம், வெட்கக் கேடு மற்றும் மானக்கேடு ஆகும்.

**டிசம்பர், 2020.**

**கிறிஸ்துவின் அன்பில்**

**சகோ.காலேப் யோசுவா**

Publication Information to the Departmentof post
**PRINTED BOOK**
**Subject to Clause No. 128 P.O. GuideRules.**
**Postal Licence, Registration, Permission not required to mail it. It is an Ordinery Post.**
**Current Postal Rate.Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**If Undelivered**
**Please Return to**

**Caleb Joshua**
**32, Jemi Ethiraj Nagar**
**Erayamangalam Road**
**Mappedu, Perambakkam (Via)**
**Thiruvallur District – 631402.**
**Mobile No. 9444701953**

**This Printed Book, Yesuvae Vaarum Edited, Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006.**